# என்னுரை

இரண்டாயிரத்து ஓராம் ஆண்டு மித்திரன் பத்திரிகையில் பிரசுரமாகி, இலட்சக்கணக்கான வாசகர்களைக் கவர்ந்த இந்த விறுவிறுப்பான காதல் காவியத்தை உங்களின் விமர்சனத்திற்காக சமர்ப்பிக்கிறேன்.

கண்களால் காண்பதும் பொய். காதுகளால் கேட்பதும் பொய். தீர விசாரித்தறிதலே மெய் என்று அறிஞர்கள் கூறியுள்ளனர். ஆனால் சில இடங்களில் தீரவிசாரித்த போதும் உண்மையைக் கண்டறிய முடிவதில்லை. சம்பந்தப்பட்டவர்கள் சொன்னால் தான் உண்டு. இக்கதை அத்தகையதே. ஒரு மழை நாளில் வீதியில் தற்செயலாக நடைபெற்ற ஒரு சம்பவத்தால் ஊரே திடுக்கிடுகிறது. அச்சம்பவம் உண்மையானதல்ல தவறானது என்ற நிலை பல வருடங்கள் சென்றும் புரியாது மக்கள் வாழ்கின்றனர். கதை முழுவதும் கற்பனையானது. யாரையும் குறிப்பிடவில்லை. முழுமையான கற்பனையில் உதிந்த மர்மக் காதல் காவியம். படித்து விட்டு விமர்சியுங்கள். இக்கதையை கணினி மயப்படுத்தியும் அழகான அட்டைப் படத்தை வடிவமைத்தும் தந்த ப.யாழினிக்கு நன்றி.

நன்றி.

அன்புடன்,

கே.வி.குணசேகரம்.

# அணிந்துரை

ஓய்வு நிலை கோட்டக்கல்விப் பணிப்பாளாரான திரு.கே.வி.குணசேகரம் அவர்களின் சேவை அளப்பரியது. இவர் தன் கல்வி பயிலும் காலம் தொட்டே பல நூல்களை வெளியிட்டதுடன் பல ஆக்கங்களைச் சஞ்சிகையினூடு பிரசரிக்கப்பட்டு பாராட்டுக்கள் பெற்றமை மிகவும் வரவேற்கத்தக்கது. அத்துடன் நின்று விடாமல் தனது ஆற்றல்கள் முழுவதையும் பயன்படுத்தி ஓய்வு நிலையிலும் கூட தமிழினை வளர்க்க வேண்டும் என நினைக்கின்ற தன்மை மிகவும் பாராட்டுக்குரியது.

மாணவர்களுக்கும் பயன் தரும் வகையில் தன்னுடைய தேடல்களை விரிவுபடுத்திக் கொண்டும் தமிழ்த்துறை ஆய்வாளர்களின் கருத்துக்களைக் கேட்டு அறிந்து கொண்டும் தன்னை வளம் மிக்க எழுத்தாளராக ஆக்கிக் கொண்டவர். மாணவர்களுக்காக உபநிடதங்கள், திருவருட்பயன், பகவத் கீதை, பிரமமாய் நின்ற சோதி, மாயை பற்றிய தத்துவக் கதைகள் போன்ற சைவசித்தாந்தக் கருத்துக்களை விளக்கும் நூல்களை எழுதி வெளியிட்டவர்.

இவற்றை விட சமூகமாந்தரின் விருப்பு வெறுப்புக்களைக் கதைகளாக்கி வெளியிட்டவர். கண்களுக்குச் சொந்தமில்லை, போர்க்களம், மனதில் உலவும் நிலவு, அவிழாத முடிச்சுக்கள் என்பன சமூசீர்திருத்த நாவல்களாகும். ‘‘கண்களுக்குச் சொந்தமில்லை’’ என்ற நாவல் மித்திரன் பத்திரிகையில் வெளி வந்து இலட்சக் கணக்கான வாசகர்களது மனதைக் கவர்ந்தது. காதல் கதையான இந் நாவல் மர்ம நாவல் போன்று முடியும் வரை முடிவை யாரும் நினைக்காதவாறு கொண்டு சென்றமை ஆசிரியரின் திறமையைக் காட்டுகின்றது. விறுவிறுப்பான இக்கதை அவரின் வல்லமைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

மேலும் இவரின் ஆக்கங்கள் இன்னும் தொடர வேண்டும் என்றும் இனிவரும் சந்ததியினரும் பயன் பெரும் வகையில் அமைய வேண்டும் என்றும் எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வேண்டிக் கொள்கின்றேன்.

நன்றி.

ப.யாழினி(வாசகர்)

# கண்களுக்கு சொந்தமில்லை

## 01

இருள் படிய முன்பே சங்கரப்பிள்ளையின் வீடு ஜெனரேட்டரால் ஒளியூட்டப்பட்டது. அன்று அங்கு அக்கிராமமே திரண்டிருந்தது. காலையில் தொடங்கிய அமர்க்களம் இன்னும் ஓயவில்லை.

சங்கரப்பிள்ளையின் கடைக்குட்டி லவன் விடிய விடிய வீடியோவில் படம் ஓடுவதற்காக நண்பர்களுடன் சேர்ந்து என்னென்ன படங்கள் எடுப்பதெண்டு விவாதத்தில் ஈடுபட்டிருந்தான்.

பொக்ஸ்சில் புதிய சினிமாப் பாடல் ஒன்று படுபயங்கரமாக ஒலித்துக் கொண்டிருந்தது. சின்னஞ்சிறுசுகள் பொக்ஸ்சைச் சுற்றி நின்று ஆடிக்கொண்டிருந்தனர். சங்கரப்பிள்ளைக்கு அதைக் கேட்க எரிச்சல் எரிச்சலாக வந்தது. காலையில் இருந்து ஒரே பேய்க்கத்தல்.

“இதுகளென்ன பாட்டுகளே... அந்த நாளில் பாட்டுகளிலை ஒரு அர்த்தம் இருந்தது. கண்ணதாசனின் பாடலை சௌந்தரராஜன் பாடினால் கேட்டுக் கொண்டே இருக்கலாம். நொந்தவனுக்கு அமைதியையும் காதலனுக்கு கிளர்ச்சியையும், பக்தனுக்கு பரவசத்தையும் கொடுத்தன... இன்று...?”

“காமக்கலையை பச்சையாய்ச் சொல்லுறாங்கள்.... கண்ணதாசன், பட்டினத்தார், திருவள்ளுவர் சொல்லாததையே இப்ப இவர்கள் சொல்லுறாங்கள்.” சங்கரப்பிள்ளை ஆத்திர மிகுதியால் விரைந்து சென்று பொக்ஸ்சின் வயரை அறுத்து எடுத்தார். பயங்கரக் கூச்சல் பட்டென்று நிற்க லவன் பயங்கரமாகக் கத்தினான், “இப்பேன் வயரை அறுத்தனீங்கள்..” “சத்தம் தாங்கேலாமல் கிடக்கு. காலயிலை இருந்து ஒரே கூச்சல்.” லவனுக்கு அழுகை அழுகையாக வந்தது. நாகரிகம் தெரியாத அப்பா... தன்னுடைய நண்பர்களுக்கு முன்னால் அவர் அப்படிச் செய்தது தனக்கு பெரிய அவமானமெனக் கருதினான் அவன்.

“நான் இனி இந்த வீட்டிலை இருக்க மாட்டன். இப்பவே வெளிக்கிர்றன்....” என்றவன் குசினுக்குள் சென்று தாயின் முன்னால் பூகம்பமானான். லவனின் தாய் பூமணி எப்பொழுதும் பிள்ளைகளின் பக்கம் தான். அவள் ஆத்திரத்தோடு வெளியே வந்தாள். சங்கரப்பிள்ளை அப்பொழுது அங்கு வந்திருந்த தம்பிராசா ஆசிரியருடன் கதைத்துக் கொண்டிருந்தார்.

“உங்களுக்கேன் இந்த வேலை?” சீறி விழுந்தாள் பூமணி. சங்கரப்பிள்ளை நிதானமாக ஏறிட்டு பூமணியை நோக்கினார். அவளின் முகத்திலே கோபம் அளவுக்கதிகமாக குடிகொண்டிருந்தது. அவளது உதடுகள் துடித்தன. இந்த இடத்தில் அவர் ஏதாவது ஏறுக்குமாறாகப்

பேசினால் கரைச்சல் என்பது அவருக்குத் தெரியும். எனவே மெதுவாகச் சிரித்துக் கொண்டு, “வயரைக் கழட்டித்தானே விட்டனான். அவனைப் பூட்டச் சொல்லும்.”

சுவாலை விட்டெரிந்த நெருப்பு பட்டென்று அணைந்ததைப் போல் பூமணியின் கோபம் சடுதியாகக் குறைந்தது.

“இதுக்கு அவன் அழுறானே... வயரைக் கொழுவிப்போட்டு பாட்டைக் கேக்கிறதுக்கு..” என்றார் சங்கரப்பிள்ளை. பூமணி எதுவும் பேசவில்லை. பலர் முன் பேசினால் மரியாதைக் குறைவு என்று நினைத்தாளோ என்னவோ... எதுகும் பேசாமல் சென்று விட்டாள். அடுத்தவினாடி பொக்ஸ் உயிர்த்தெழுந்து கத்தியது. தம்பிராசா மாஸ்டருடன் சங்கரப்பிள்ளை கதைத்த போதும் அவரின் சிந்தனை பின் நோக்கிச் சென்றது.

சங்கரப்பிள்ளை ஒரு சாதாரண சுருட்டுத் தொழிலாளி. தகப்பன் சுருட்டு முதலாளியாக இருந்தமையால் அவரும் சுருட்டுத் தொழிலை மேற்கொண்டார். பிறக்கும் போதே நோய்வாய்ப்பட்டிருந்ததால் பத்து வயதில் தான் அவரால் எழுந்து நடக்க முடிந்தது. அதனால் அவர் பாடசாலைக்குச் செல்லவில்லை.

தகப்பன் ஓரளவு வசதியாக வாழ்ந்ததால் அந்த வசதியைக் கொண்டே அவர் வாழ்ந்து வந்தார். பூமணியின் தகப்பன் சங்கரப்பிள்ளையின் சுருட்டுக் கொட்டிலில் கோடா காய்ச்சுதல், சுருட்டுக்களை எண்ணிக்கணக்கெடுத்தல் போன்ற வேலைகளைச் செய்து கொண்டிருந்தார்.

அவருக்கு ஐந்து பொம்பிளைப்பிள்ளைகள். மூத்தவள் பூமணி. அவள் இருக்க அவளுக்குக் கீழே உள்ள மூன்று

பொம்பிளைப்பிள்ளைகளும் தங்களுக்குத் தகுந்தவர்களைத் தேடிப்பிடித்துக் கொண்டார்கள்.

பூமணியும் லேசானவள் அல்ல, அந்த ஊர் உடையாரின் மகனை விரும்பியிருந்தாள். அதையறிந்த உடையார் மகனை அச்சுறுத்தி வேறு நல்ல இடத்தில் திருமணஞ் செய்து கொடுத்துவிட்டார். இருந்த போதும் உடையாரின் மகனுக்கு, பூமணியில் இருந்த மோகம் குறையவில்லை. அடிக்கடி பூமணியைச் சந்தித்துக் கொண்டிருந்தான்.

மகனுக்குக் கால்கட்டுப் போட்ட திருப்தி உடையாருக்கு. அந்த நாளையில் ஊரில் பெரியவர்களான உடையார், மணியகாரன் போன்றோர்க்கு ஊரில் பல பெண்கள் மனைவியர்களாக இருப்பதுண்டு. இதனால் உடையார் பெரிதாகக் கவலைப்படவில்லை.

ஆனால் பூமணி உடையாரின் மகனைத் தனக்குத் தாலி கட்டும்படி வற்புறுத்திக் கொண்டிருந்தாள். அதனால் உடையாரின் மகன் மெல்ல மெல்ல பூமணியைக் கைகழுவி விட்டுவிட்டான். அதன் பின்பு பூமணி பல வருடங்கள் பித்துப் பிடித்தவள் போல் இருந்தாள். இந்த விடயம் ஊர் முழுவதும் தெரியும்.

சங்கரப்பிள்ளையின் தகப்பன் திடீரென நோய்வாய்ப்பட்டு படுக்கையில் விழுந்தார். அவரது இடது கையும், காலும் செயலிழந்து விட்டன. முன்பே மனைவி இறந்தமையால் அவரைப் பராமரிக்க ஒருவரும் இல்லை. அதனால் அந்தப் பொறுப்பு பூமணியின் தகப்பன் மீது பொறிந்தது.

இதனால் பூமணி அங்கு வந்து போகத் தொடங்கினாள். அவளது அன்பான பேச்சும் அக்கறையான கவனிப்பும் அவரை ஆட்கொண்டன. அதனால் சங்கரப்பிள்ளைக்கு அவளைக்கட்டிக் கொடுக்க விரும்பினார். சங்கரப் பிள்ளையின் தகப்பன்.

அந்த வாய்ப்பைப் பூமணியின் தகப்பன் நல்ல முறையில் பயன்படுத்தினார். அதனால் பூமணிக்கு மாப்பிளை கிடைத்ததோடு ஓரளவு சொத்தும் சேர்ந்தது. குந்தியிருந்து தின்றால் குன்றும் குழியாகுமென்பார்கள். சங்கரப்பிள்ளைக்கு ஒழுங்காகத் தொழிலை நிர்வகிக்க முடியவில்லை. தகப்பன் இருக்கும் வரை ஓகோ என்று நடைபெற்ற தொழில் அவர் இறந்ததும் படுத்துவிட்டது.

அடுத்தடுத்து ஐந்து பிள்ளைகள் பிறந்ததோடு சங்கரப்பிள்ளை மிகவும் நொந்து போனார். தொழிலில் நட்டமடைந்ததால் சுருட்டுக் கொட்டிலை மூடிவிட்டுத் தனது தகப்பனிடம் தொழிலாளியாக வேலை செய்த கதிரவேலுவுக்குச் சுருட்டத் தொடங்கினார்.

கதிரவேலு நன்றி மறவாதவனாக இருந்தான். தகப்பன் தனக்குச் செய்த உதவிக்காகச் சங்கரப்பிள்ளைக்குத் தொழில் கொடுத்ததோடு நில்லாது பல உதவிகளும் செய்து வந்தான்.

சங்கரப்பிள்ளையின் வருமானம் குடும்பச் செலவுக்குப் போதாததால் பூமணி தோட்டங்களில் கூலி வேலை செய்யப் புறப்பட்டாள். அதன் பின்பு சங்கரப்பிள்ளை பூமணியின் எடுபடியாளாக மாறினார்.

மூத்தவன் கஜன் ஓ.எல் படித்துக் கொண்டிருக்கும் போது அவனுக்கு வெளிநாட்டு மோகம் பிடித்தது. வெளிநாட்டுக்கு அனுப்பாவிட்டால் மருந்து குடித்து சாவன் என்று சொல்லி மருந்துப்போத்தல் ஒன்று வாங்கி வைத்திருந்தான்.

சங்கரப்பிள்ளை இடிந்து போனார். அவரால் என்ன செய்ய முடியும். தனக்கிருந்த வயல் காணியை விலை பேசினார். ஐம்பது பரப்பு ஐம்பதினாயிரம் ரூபா கேட்டார்கள். அதைவிட பூமணியின் கழுத்தில், கையில் உள்ள நகைகளைக் கழற்றி விற்றால் ஒரு ஐம்பதினாயிரத்துக்கு விற்கலாம் மிகுதிக்கு எங்கே போவது.

பூமணி ஆடிப்போனாள்... அவளை நம்பி யார் பணம் கொடுக்கப்போகிறார்கள். கஜனும் மிரட்டிக் கொண்டிருந்தான்... கடைசியாக அவளின் மூளையில் ஒரு சிறு யோசனை தட்டுப்பட்டது. உடையாரின் மகனிட்டைப் போய் உதவி கேட்டாலென்ன...? முன்பு போல் இப்ப அவன் இல்லை.. அளவுக்கு மீறிக் குடித்து ஈரல் எரிந்த நிலையில் நடைப்பிணமாக உலாவிக் கொண்டிருக்கிறான். அவனிடம் காசு இருக்குமா..? என்று யோசித்துப் பார்த்தாள். இருந்தாலென்ன, இருக்காவிட்டாலென்ன கேட்டுப் பார்ப்பம் என்ற முடிவோடு சங்கரப்பிள்ளையிடம் தனது திட்டத்தைச் சொன்னாள்.

சங்கரப்பிள்ளை அதிர்ந்து போனார். அவருக்கு பூமணியின் காதல் பிரச்சினை முழுமையாகத் தெரியாவிட்டாலும் ஓரளவு தெரியும். “இது எங்கே கொண்டு போய்விடப் போகிறதோ” என்று பயந்தார்.

## 02

பூமணி தான் நினைத்ததைச் சாதிப்பவள். அது தெரிந்துதான் உடையாரின் மகன் விலகிச் சென்றான். அவள் சங்கரப்பிள்ளையைத் திருமணம் செய்த பின்பும் தான் நினைத்தவற்றைச் செய்து வந்தாள். அது சங்கரப்பிள்ளைக்குப் பிடித்ததோ இல்லையோ என்ற நினைப்பே அவளுக்கு வராது.

உடையார் சங்கரப்பிள்ளைக்கு மிக நெருங்கிய உறவினர். அவர்களிடம் போய் உதவி கேட்பது அவருக்கு மரியாதைக் குறைவாக இருந்தது. ஆனால் பூமணி விடவில்லை.

பூமணியின் கரைச்சல் தாங்க முடியாது அவளுடன் உடையாரின் வீட்டுக்குச் சென்றார் சங்கரப்பிள்ளை.

உடையாரின் மகன் அவர்களை மரியாதையுடன் வரவேற்றார். பூமணி தான் வந்த விசயத்தைக் கூறினாள்.

சங்கரப்பிள்ளைக்கு வெட்கமாக இருந்தது. ‘‘ஏன் இங்கே வந்தோம்’’ என்று துக்கப்பட்டார். சிறிது நேர மௌனத்தின் பின் உடையாரின் மகன் சொன்னார், ‘‘உங்களுக்கு எவ்வளவு பணம் தேவையோ அவ்வளவும் தாறன்.. நீங்கள் மகனை வெளீலை அனுப்புங்கோ, பிறகு அவன் அனுப்பத்தாருங்கோ…’’

‘‘அப்ப… சங்கரப்பிள்ளை அண்ணை நான் வரட்டே…’’ தம்பிராசா மாஸ்டர் எழுந்தார்.

‘‘ஓம்… ஓம்… போட்டு வாங்கோ’’ தடுமாறினார் சங்கரப்பிள்ளை.

‘‘அண்ணை நாங்கள் போட்டுவரப்போறம்… கலியாணத்தை எங்களுக்குக் கொழும்பிலை வைக்கத்தான் விருப்பம். யோசிச்சுச் சொல்லுங்கோ…’’ என்றாள் மாப்பிள்ளையின் தாய் மகேஸ்வரி. அவளுக்குப் பின்னால் சத்தியனும் அவனது தங்கை சியாமினியும் உறவினர்களும் நின்றனர்.

உடையாரின் மகன் கொடுத்த பணத்தில் கஜன் கனடாவுக்குப் போய்விட்டான். அதன்பின் அவனது தம்பிமார் இருவரையும் அவன் கனடாவுக்கு அழைத்துவிட்டான்.

கனடாவில் தன்னுடன் வேலை செய்யும் சத்தியனை தன் தங்கைக்கு கலியாணம் பேசினான். சத்தியன் அதற்குச் சம்மதித்ததால் ஊருக்கு வந்திருந்தான்.

அன்று சத்தியன் சம்பிரதாயப்படி சங்கரப்பிள்ளையின் மகள் பவித்திராவைப் பெண் பார்க்க வந்திருந்தான்.

சத்தியன் பவித்திராவை படத்தில் பார்த்திருக்கிறான். அதைவிட அவளின் பத்தொன்பதாவது பிறந்த தினம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டு வீடியோவில் பதியப்பட்டு கனடாவுக்கு வந்த போது கஜன் அவனை அழைத்துக் காட்டியிருந்தான்.

பவித்திரா நல்ல அழகி. நகரில் உள்ள பாடசாலை ஒன்றில் ஏ. எல் இரண்டாம் வருடம் கற்றுக் கொண்டிருக்கிறாள்.

பவித்திராவை நேரில் பார்த்ததும் நன்றாக பிடித்துவிட்டது. பார்க்கத்தூண்டும் கவர்ச்சியான முகம். நீண்டு வளைந்த மூக்கு. அளவான உதடுகள். மேல் உதட்டுக்கும் மூக்குக்கும் இடையே சிறிய வட்ட வடிவமான மச்சம். அடர்ந்து வளர்ந்து இடைக்குக் கீழ் தூங்கும் தலைமுடி... மொத்தத்தில் அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது.

“கொழும்பிலையோ...? ஏன் இங்கு வைக்கலாம்தானே..?” மெதுவாகக் கேட்டார் சங்கரப்பிள்ளை.

“இஞ்சை என்ன வசதியிருக்கு நாங்கள்தான் முறியவேணும். கொழும்பிலையெண்டால் ஒரு ஹோட்டலை அரேஞ் பண்ணீட்டால் பிரச்சினை இல்லாமல் முடிஞ்சிடும்... அதோடை தம்பியின் ப்ரன்ஸ்.. எங்கடை இனத்தவையெல்லாம் அங்கை வருவினம்... சில நேரம் உங்கடை பிள்ளைகளும் அங்கு வரலாம்.... இஞ்சை கல்யாணத்தை

வைச்சால் அவையெல்லாம் இஞ்சை வரமுடியுமோ…? கொழும்புக்கு வந்த நாங்கள் இஞ்சை வர இரண்ட மாதம் சென்றது'' என்றாள் மகேஸ்வரி. அவளின் குரலில் சற்றுக்காரம் தொனித்தது.

சங்கரப்பிள்ளை எதுகும் பேசவில்லை. அவருக்கு இதுக்குப்பதில் சொல்லத் தெரியாது. தற்செயலாய் ஏதாவது சொன்னாலும் பூமணி துள்ளிக் குதிப்பாள். எனவே பூமணியின் முகத்தைப் பார்த்தார்.

பூமணிக்கும் கொழும்பக்குப்போக விருப்பமில்லை. சகல வசதிகளோடும் இருக்கும் வீட்டை யாரிடம் பொறுப்புக்கொடுப்பது..? இப்ப யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டிலை வீட்டைப் பூட்டிப்போட்டு கொழும்புக்குப் போய்வந்து பார்த்தால் அத்திவாரமே இராது. அதைவிட யாரிடமாவது பொறுப்புக் கொடுத்தாலும் இரவில் ஏதாவது நடந்தால் அவர்களைக் கேட்கவும் முடியாது.

''என்ன மச்சாள் யோசிக்கிறியள்…?'' மகேஸ்வரி கேட்டாள்.

''கொழும்பிலையெண்டால் வசதிதான். ஆனால் நாங்கள் வந்து போறது கரைச்சல்… இஞ்சை வைக்கிறது நல்லது… சகல ஏற்பாடுகளையும் நாங்கள் செய்யிறம்.''

மகேஸ்வரியின் முகம் கறுத்துச் சுருங்கியது. தன்னுடைய தகுதி அந்தஸ்தை கனடாவில் காட்ட வேண்டுமென்பது மகேஸ்வரியின் எண்ணம். இந்தப் பிச்சைக்கார ஊரிலை கலியாணத்தை நடத்தி தன்னுடைய நாட்டாமையைக் காட்ட முடியுமா…? என்று சிந்தித்தாள்.

சத்தியனுக்குத் தாயின் குணம் தெரியும். அதனால் ஏதாவது பிரச்சினை வருமோ என்று சிந்தித்தான்.

‘‘நாங்கள் கனடாவிலை ஓ.. கோ… என்று வாழுற நாங்கள். மிகவும் ஆடம்பரமான ஒரு ஹோட்டலிலை கல்யாணத்தை நடத்தினால்தான் எங்களுக்கு மதிப்பு. அதோடை எங்களை அயலவை மதிக்க வேணுமெண்டால் பெரிசாய்த்தான் செய்யவேணும்’’ என்றாள் மகேஸ்வரி.

‘‘கொழும்பு என்ன கொழும்பு… இஞ்சை அதில் பார்க்க பெரிசாய்ச் செய்யலாம். காசைச் செலவளிச்சால் ஒரு ஐந்துநட்சத்திர ஹோட்டலை இஞ்சை அமைச்சிடுவாங்கள்….’’ என்றாள் பூமணி.

அது மகேஸ்வரிக்குப் பிடிக்கவில்லை என்றாலும் அவள் அதை வெளிக்காட்டிக்கொள்ளவில்லை. ஏனெண்டால் கஜனை தனது மகளுக்கு திருமணம் செய்ய உத்தேசித்திருக்கிறாள். அழகில் பவித்திராவிற்கு எதிர்மாறு. எனவே இந்தச் சந்தர்ப்பத்தைக் குழப்பினால் தனது மகளின் சம்பந்தமும் குழம்பிவிடும் என நினைத்தாள்.

‘‘எதுக்கும் நீங்கள் ஆறுதலாக ஒருக்கால் யோசித்துப்பாருங்கோ’’ என்று கூறிவிட்டு திரும்பி சத்தியனைப் பார்த்து ‘‘புறப்படுவம்’’ என்றாள்.

சத்தியன் சரியெனத் தலையை ஆட்டிவிட்டு பவித்திராவைத் திரும்பிப் பார்த்தான். பூரண நிலவின் குளிர்ச்சி அவளின் வதனத்தில் இருந்தது. மாப்பிள்ளை பகுதியினர் சென்றுவிட்டனர். அது பவித்திராவுக்கு பெரிய நிம்மதியாக இருந்தது. அவர்கள் காலை பத்து மணிக்கு வந்ததில் இருந்து அவள் பாடு பெரும் பிரச்சினையாக இருந்தது. கவுண் போட்டுப் பழக்கப்பட்ட அவளுக்கு பதினையாயிரம் ரூபா பெறுமதியான காஞ்சிபுரம் சேலையைக் கட்டிவிட்டிருந்தனர். அவளுக்கு சேலை கட்டுவதென்றாலே பிடிக்காது. அதுகும் காஞ்சிபுரம்

பட்டுச்சேலை உடம்பில் வண்டு ஊருவது போல கரகரவெண்டு இருந்தது. அத்துடன் பாரமாகவும் இருந்தது.

உடல் முழுவதும் நகை. அகோர வெக்கைக்கும், வியர்வைக்கும் மத்தியில் சேலையும் நகைகளும் அவளுக்கு அரியண்டமாக இருந்தன.

மாப்பிளைப் பகுதி சென்றதும் தாமதியாது சென்று உடையை மாற்றினாள் பவித்திரா. இப்பொழுதுதான் அவளுக்குச் சந்தோசமாக இருந்தது.

சம்மந்தக் கலப்பிற்காக முற்றத்தில் அமைக்கப்பட்ட தகரப் பந்தலின் கீழ் வீடியோவில் படம் ஓடிக் கொண்டிருந்தது.

பவித்திராவுக்கு படமென்றால் உயிர். 'ஜீன்ஸ்' படத்தைப் பார்க்க வேண்டும் என்று பல நாட்களாக துடித்துக் கொண்டிருந்தாள். அன்று தான் கடைக்கு கொப்பி வந்திருந்தது. எல்லோரும் படத்தை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தனர். ஆனால் பவித்திரா கட்டிலில் குப்புறப்படுத்திருந்தாள். அவளின் தலை மிகவும் பயங்கரமாக வலித்தது. நெஞ்சுக்குள் ஏதோ செய்தது.

படம் தொடங்க முன்பும் தொடங்கிய பின் இரண்டு தடவையும் பவித்திராவின் நண்பி நிருபமா வந்து, படம் பார்க்க வரும்படி வற்புறுத்திய போதும் அவள் செல்லவில்லை.

திடீரென்று எழும்பி ஓடவேண்டும் போல் இருந்தது. பட்டென்று கட்டிலால் எழுந்து விசர் பிடித்தவள் போல் பிற்பக்கமாக ஓடினாள்.

சில நிமிடங்களில் பவித்திரா திரும்பி முற்றத்தில் இருந்த தகரப் பந்தலுள் ஓடி வந்தாள்.

“ஐயோ இதென்னடி கோலம்..” என்று அலறியபடி படம் பார்த்துக் கொண்டிருந்த பூமணி பவித்திராவை நோக்கி எழுந்து ஓடினாள்.

எல்லோரும் பவித்திரா நின்ற பக்கம் திரும்பினர். அவர்கள் அங்கே கண்ட காட்சி.. எல்லோரினதும் இரத்தம் உறைந்தது.

# 03

கையில் வைரவர் சூலத்துடன் பத்திரகாளி போல் நின்றாள் பவித்திரா. அவளுக்கு மூச்சு வாங்கியது. பெரிதாக வாயால் மூச்சை உள்ளே இழுத்து வெளியே விட்டுக் கொண்டிருந்தாள் அவள்.

அவளின் கோலத்தைப் பார்க்க பூமணிக்கு நெஞ்சு வெடித்துவிடும் போல் இருந்தது. ஒரே ஒரு பெண் பிள்ளை, ஆசையாகவும், அருமையாகவும் வளர்த்தது. தனிமையில் இப்படி நடந்தாலும் பரவாயில்லை. ஊர்ச்சனம் முழுவதும் கூடியிருக்கும் போது நாளை ஊரில் இதே கதையாகத்தான் இருக்கும்.

“அப்பனே பிள்ளையாரே இது என்ன கொடுமை… கலியாணம் முற்றாகிப் பெண் பார்த்து விட்டுச் சென்ற பின் இப்படி ஒரு துன்பமா…?” என்று நொந்து கொண்டாள் பூமணி. அவளது தலை வெடித்துச் சிதறிவிடும் போல் இருந்தது.

கையில் வைரவசூலத்துடன் வந்த பவித்திரா அதை தகரப்பந்தலுக்கு முன்னால், முற்றத்தில் குத்தி நட்டுவிட்டு பலமாகச் சிரித்தாள். அழகான அவளது முகம் கறுத்து விகாரம் அடைந்திருந்தது. படம் பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு எதுவும் புரியவில்லை. கசமுசாவெனக் கதைகள் பிறந்தன.

“தம்பி டி.வியை நிப்பாட்டு” என்று பூமணி கூற லவன் டி.வியை நிறுத்தி விட்டுத் தாயின் அருகே வந்தான்.

“போய் அப்பாவை எழுப்பியா..”

வீட்டினுள் படுத்திருந்த சங்கரப்பிள்ளையை எழுப்புவதற்காக லவன் வீட்டினுள் சென்றான்.

நிருமா எழுந்து சென்று பவித்திராவின் கையைப் பிடித்தாள், “என்னடி உனக்கு..? உள்ளுக்கு வா” என்று கூறி அவளை வீட்டுக்குள் அழைத்துச் சென்றாள். பூமணியும் வேறு இரண்டு பெண்களும் அவர்களைப் பின்தொடர்ந்து சென்றனர்.

நித்திரையால் எழுந்து பரபரப்புடன் வெளியே வந்த சங்கரப்பிள்ளை மகளின் கோலத்தைக் கண்டு திகைத்துப் போனார். எதுவும் புரியாமல் கலங்கிய விழிகளுடன் மகளைத் தொடர்ந்து சென்றார்.

கையைப் பிடித்துக் கூட்டிக் கொண்டு வந்த நிருமா பவித்திராவைக் கட்டிலில் இருத்தி விட்டு, “சூடாக ஏதும் குடிக்கப்போறியா?” என்று கேட்டாள். பவித்திரா எல்லாப் பற்களும் தெரியச் சிரித்து விட்டு, “சூடாய்க் குடிக்கிறதா..? அப்பச் சாராயம் கொண்டா..” என்றாள்.

அதைக் கேட்ட சங்கரப்பிள்ளை துடித்துப்போனார். பூமணியால் துயரத்தைத் தாங்க முடியவில்லை. ஒப்பாரி வைத்து அழத்தொடங்கினாள்.

நிருமா அதிர்ந்து போனாள். எப்படித்தான் விகடமாகக் கதைத்தாலும் உதட்டுக்குள்ச் சிரிக்கும் பவித்திரா இன்று ஏன் இப்படிச் சிரிக்கிறாள்? மெதுவாக, பண்பாகப் பேசும் பவித்திரா சாராயம் கேட்கிறாள்.

“தலைமயிர் கத்தையாய் வளர்ந்திருக்கு காலமை தோயவார்த்துப்போட்டு ஈரத்தைச் சரியாய்த் துடைக்கேல்லைப் போலை கிடக்கு. சன்னியாக்கிப் போட்டுது…” என்றாள் பக்கத்து வீட்டு செல்லம்மா.

தலைமயிரைக் கோதிப் பார்த்து விட்டு பார்வதி சொன்னாள், “தலை நல்லாய்க் காய்ஞ்சு கிடக்கு… சன்னியில்லை ஏதாவது கெட்ட ஆவி புகுந்திருக்கும்…”

“ஆவியும் மண்ணாங்கட்டியும் உங்கை எங்கை கிடக்கு ஆவி… சன்னிதான் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போவம்” என்றாள் செல்லம்மா.

“இப்ப எப்பிடிக் கொண்டு போறது. நேரம் பன்னிரண்டுக்கு மேலை விடிஞ்சாப் பிறகுதான் கொண்டு போகலாம்” என்றாள் பூமணி.

“சாம்பிராணி தூள் கிடக்கே பூமணி அக்கா..?” என்று கேட்டாள் செல்லம்மா.

“ஓம்”

ஒரு சட்டிக்கை நெருப்புக்கொண்டா… சாம்பிராணிப் புகை போடுவம்.. முதலிலை கொஞ்சத் திருநீறு தா..”

பூமணி பம்பரமாகச் சுழன்றாள். அடுத்த சில நிமிடங்களில் செல்லம்மா கேட்ட பொருட்கள் வந்தன. செல்லம்மா திருநீற்றை அள்ளி பவித்திராவின் நெற்றியில் பூசினாள். பின் தலையைக் குலைத்து விட்டு சாம்பிராணிப்புகையைக் கூந்தலுக்குக் காட்டினாள்.

பவித்திரா கட்டிலால் துள்ளி எழும்பினாள்.

“படுபிள்ளை….” என்றாள் பூமணி. அவளின் குரல் தழுதழுத்தது. கண்கள் பனித்தன.

பவித்திரா அதைக் கவனிக்கவில்லை. கட்டிலால் இறங்கி வாசலை நோக்கி ஓடினாள்.

அருகில் இருந்த நிருமாவும், செல்லம்மாவும், பார்வதியும் பவித்திராவை அமுக்கிப் பிடித்தனர். அவள், “விடு… என்னை விடு.. நான் என்ரை இடத்துக்குப் போகப்போறன்…” என்று திமிறினாள்.

“இது தானே பிள்ளை உன்ரை வீடு. நீ எங்கை போகப்போகிறாய்” கவலையோடு கேட்டாள் பூமணி.

“இதில்லை என்ரை வீடு.. என்ரை வீடு சுடலை.. நான் அங்கை போகப்போறன்…”

‘ஐயோ.. என்னடி சொல்றாய்?” விம்மியபடி கேட்டாள் பூமணி. அவள் மகளைப் பற்றிக் கட்டியிருந்த கற்பனைக் கோட்டைகள் வெடித்துச் சிதறுவது போல் இருந்தது.

“இது ஏதோ கெட்ட ஆவிதான்” என்று மீண்டும் சொன்ன பார்வதி சிறிது நேரம் யோசித்து விட்டு, “காளி கோவில் குருக்களைக் கூட்டி வந்து ஒரு நூல் கட்டுங்கோ எல்லாம் சுகமாகிவிடும்..” என்றாள்.

“அவர் பக்கத்திலை தானே இருக்கிறார். போனால் வருவார். சங்கரப்பிள்ளை அண்ணை அரிக்கன் லாம்பைக் கொண்டு போய்க் கூட்டி வாருங்கோ..” என்றாள் செல்லம்மா.

“பந்தலுக்கை முருகேசு இருக்கப்பா… தனியாப் போகாமல் அவரையும் கூட்டிக்கொண்டு போங்கோ..” என்றாள் பூமணி.

சங்கரப்பிள்ளை முற்றத்தில் இருந்த முருகேசுவையும் கூட்டிக்கொண்டு காளிகோவில் குருக்கள் வீட்டுக்குச் சென்றார். நாய்கள் ஓயாமல் குரைத்துக் கொண்டிருந்தன. சில ஊளையிட்டன.

“அண்டங்காகம் ஒண்டு பத்து நாளாய் முத்தத்திலை நிக்கிற மாமரத்திலை இருந்து கொறிச்சுக் கொண்டிருந்தது. அப்பவே ஏதோ தீங்குவரப்போகுதெண்டு எனக்குத் தெரியும்….” என்று ஒப்பாரி வைத்தாள் பூமணி.

“நான் போகப்போறன்… நான் போகப்போறன் என்னைவிடு…” என்று புலம்பினாள் பவித்திரா.

படம் பார்ப்பதற்கென்று வந்திருந்தவர்கள் ஒவ்வொருவராக அரிக்கன் லாம்புடன் புறப்பட்டுக் கொண்டிருந்தனர்.

பலருக்குப் பவித்திராவை நினைக்கக் கவலையாக இருந்தது. சங்கரப்பிள்ளைக்கு மிகவும் வேண்டிய நாலைந்து பேர் மட்டும் அங்கே தங்கியிருந்தனர்.

காளிகோவில் குருக்கள் அந்த நடுச்சாம வேளையிலும் முகம் கழுவி திருநீறு பூசிக்கொண்டு வந்தார்.

குருக்களைக் கண்டதும் பவித்திராவின் அட்டகாசமான சிரிப்பு சிறிது சிறிதாகக் குறைந்தது. இருகரங்களையும் அவரை நோக்கிக் கூப்பினாள்.

காளிகோவில் குருக்கள் பூசை செய்வதில் வல்லவர். ஆறுதலாக அலங்காரமாகச் செய்வார். செவ்வாய் வெள்ளிக்கிழமைகளில் உள்ளூர்

மக்களைவிட வெளியூர் மக்களே அவரின் பூசையைக்காண அதிகமாக வருவார்கள். செவ்வாய் தோசமுள்ள பெண்கள், திருமணம் நடைபெறாத பெண்கள் குருக்களைக் கொண்டு விசேட பூசை செய்வது வழக்கம். பவித்திரா செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் தவறாது காளி கோவிலுக்குச் செல்வாள்.

குருக்கள் கண்களை மூடி காளி அம்மனைத் தியானித்து விட்டு மெதுவாக மந்திரங்களை உச்சரித்தார். பின்பு திருநீற்றை கையில் எடுத்து மந்திரங்களைச் செபித்த வண்ணம் தலையில் மூன்று முறை போட்டுவிட்டு பவித்திராவின் கையில் கொடுத்தார். பின், ‘‘வாய்க்குள் போடம்மா’’ என்றார். பவித்திரா திருநீற்றை வாய்க்குள் போட்டாள். பின் குருக்கள் அவளது கையில் திருநீற்றைக் கொடுத்து, ‘‘நெற்றியில் பூசம்மா’’ என்றார்.

திருநீறு பூசியதும் அவளது இடது கையில் நூலைக் கட்டிய குருக்கள், ‘‘பயப்படத்தேவையில்லை. காலைப் பூசைக்குக் கோவிலுக்குக் கூட்டியாருங்கோ..’’ என்றார்.

‘சரி’ என்று தலையாட்டினாள் பூமணி. பவித்திரா எதுவும் நடக்காதவள் போல தலையைக் குனிந்து கொண்டு நின்றாள்.

‘‘நான் போயிட்டுவாறன்’’ என்றார் குருக்கள்.

‘‘குருக்களைக் கூட்டிக் கொண்டு போய்விட்டிட்டு வாருங்கோ’’ என்றாள் பூமணி. குருக்களும், சங்கரப்பிள்ளையும், முருகேசும் அரிக்கன் லாம்புடன் புறப்பட்டனர்.

நாய்கள் ஊளையிட்டுக் கொண்டிருந்தன. சிறிது நேரம் அமைதியாகப் படுத்திருந்த பவித்திரா சட்டென்று கட்டிலின் மீது

எழுந்துநின்று பற்களால் குருக்கள் கட்டிய நூலைக் கடித்துத் துப்பிவிட்டு, ‘‘கூ.. கூ..’’ என்று பலமாக ஊளையிட்டாள். அச்சத்தத்தைக் கேட்டு நாய்கள் எல்லாம் குரைக்கத் தொடங்கின.

# 04

சங்கரப்பிள்ளையின் வீட்டு முற்றத்தில் போடப்பட்ட தகரப்பந்தலைக் கழற்றி ஏற்றிக் கொண்டிருந்தனர். பவித்திரா ஷாம்பு போட்டு நன்றாக முழுகிவிட்டுத் தலையைத் துவட்டியபடி தனது அறைக்குள் சென்று கொண்டிருந்த போது வாசலில் மணியடிக்கும் சத்தம் கேட்டது.

பவித்திரா உடையை மாற்றிக் கொண்டு வெளியே வந்த போது பூமணி ஹோலில் இருந்து கடிதம் வாசித்துக் கொண்டிருந்தாள்.

அது கஜன் எழுதிய கடிதம்.

பவித்திராவைக் கண்டதும் பூமணி கடிதத்தைக் கொடுத்தாள். ‘‘அன்புள்ள அப்பா, அம்மா, தங்கை பவித்திரா, தம்பி லவன் அறிவது நாங்கள் இவ்விடம் நலம். உங்கள் சுகத்தையும் எல்லாம் வல்ல வெள்ளெருவை விநாயகன் காப்பாற்றுவார். மேலும், இக்கடிதம் கிடைக்கும் போது சத்தியனின் குடும்பம் உங்களைச் சந்தித்திருக்குமென்று நினைக்கிறேன்.

அம்மா நாங்கள் பட்ட கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. நோயாளியான அப்பாவால் உழைக்க முடியாதெனக் கருதி நீங்கள் தோட்டங்களில் கூலிவேலை செய்து எம்மை வளர்த்து ஆளாக்கினீர்கள். அந்த நிலை இனிமேல் எமது குடும்பத்திற்கு ஏற்படக்கூடாது. இப்பொழுது தேவையான அளவு பணம் எம்மிடம் இருக்கு.

தங்கை பவித்திராவைப் பற்றித்தான் நான் அளவுக்கு அதிகமாகக் கவலைப்படுகிறேன். உங்கு நடைபெறும் விசயங்களெல்லாம் நீங்கள் எழுதாவிட்டாலும் எனக்குத் தெரியும். எனக்குள் எழுத அனேகா் இருக்கிறாா்கள். தமிழ்ப் பெண்களைப் பொறுத்தவரை கல்வி தேவையில்லை. அவா்கள் அறிவுக்குப் படித்தாலே போதும். இன்றைய நிலையில் பெண்களைப் படிப்பித்துவிட்டு அவா்களுடைய தகுதிக்கும், தராதரத்துக்கும் ஏற்ற மாப்பிள்ளையைத் தேடுவது இலேசான காரியம் அல்ல. அத்துடன் ஒரு டொக்டராய் வர்ற ஆணுக்குப் பத்துலட்சம் கொடுக்கிறோம். ஒரு பெண் டொக்டராய் வந்தாலும் பத்துலட்சம் கொடுக்க வேண்டியிருக்கு. இந்த நிலமையில் பெண்கள் படிக்கத்தான் வேண்டுமா..?’’

அந்த இடத்தில் கடிதத்தை வாசிப்பதை நிறுத்திவிட்டு ஒரு கணம் சிந்தித்தாள் பவித்திரா. அண்ணை கூறுவதிலும் உண்மை இருக்கத்தான் செய்கிறது, என அவள் மனம் ஒப்புக்கொண்டது.

தொடா்ந்து கடிதத்தைப் படித்தாள் பவித்திரா, ‘‘எனவே பவித்திரா படித்தது போதும் பாடசாலையால் நிறுத்தி திருமணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யவும். என் நண்பன் சத்தியன் மிகவும் நல்லவன். என்னோடு பல வருடங்களாக றூமில் ஒன்றாக இருந்தவன். நல்ல உழைப்பாளி.’’

கடிதம் வாசிப்பதை நிறுத்திவிட்டு ஒரு கணம் சத்தியனை நினைத்தாள் பவித்திரா. அவள் மனத்திரையில் அவன் உருவம் பட்டெனத் தோன்றியது. நல்ல அழகன். அளவான உயரம், செதுக்கினாற் போன்ற அங்கள் சுருண்டகேசம், புன்னகை தவழும் உதடுகள், அதன் மேல் அழகான அரும்புமீசை. துடிப்பான கண்கள். அவற்றை ஊடறுத்து இன்னொரு உருவம் மங்கலாகத் தெரிந்தது.

குழம்பிய பவித்திரா தன்னைச் சீராக்க முயற்சித்தாள். முடியவில்லை. யாரோ பயமுறுத்துவது போலிருந்தது.

கடிதம் வாசிக்கும் மகளையே உற்று நோக்கியபடி இருந்த பூமணி, அவளின் முகத்தில் தோன்றிய உணர்வுகளை அவதானித்தாள். அவை மாறுபடுவது அவளுக்குத் தெரிந்தது.

"பவித்திரா என்னம்மா செய்யுது?" பரிவுடனும் பதட்டத்துடனும் கேட்டாள் பூமணி.

பவித்திரா எதுவும் பேசவில்லை. தாயை உற்று நோக்கினாள். அவளுக்குத் தாயை நினைக்கச் சிரிப்புத்தான் வந்தது. லேசாகச் சிரித்தாள்.

வழமையாக அவள் சிரிக்கும் கவர்ச்சியான சிரிப்புத்தான் அது. என்றாலும் பூமணிக்கு சற்றுக் கலக்கமாக இருந்தது. ஆனால் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல், "கல்யாணம் செய்தாலும் "ஏ-எல்" எடுக்கலாம் தானே" என்றாள்.

பவித்திரா அதற்கும் சிரித்தாள்.

பூமணிக்கு அடி வயிற்றில் இருந்து ஏதோ ஒன்று உருண்டு வந்து தொண்டையை அடைப்பது போலிருந்தது. உமிழ்நீரைச் சற்று சிரமப்பட்டு விழுங்கியவாறு மகளைப் பார்த்தாள்.

அந்த நேரம் வாசலில் மோட்டார் சைக்கிள் ஒன்று வந்து நிற்கும் ஓசையைத் தொடர்ந்து நாய் குரைக்கும் சத்தம் கேட்டது.

“யாராக இருக்கும்” என்று சிந்தித்தவாறு வெளியே வந்தாள் பூமணி. படலையில் மோட்டார் சைக்கிளில் சத்யன் நின்றான். நாய் குரைத்துக் கொண்டிருந்தது.

பூமணிக்குத் தர்மசங்கடமாக இருந்தது. வா என்று வரவேற்கவோ.. இல்லை, குரைக்கும் நாயை கலைக்கவோ முடியவில்லை. மோட்டார் சைக்கிளால் இறங்கிய சத்தியன், அதை உருட்டிக் கொண்டு உள்ளே வந்தான்.

“வாரும் தம்பி” சிரமப்பட்டு வரவேற்றாள் பூமணி.

“இது பக்கத்து வீட்டுக் காரற்றை மோட்டார் சைக்கிளை இரவல் வாங்கினான். பவித்திராவைக் கூட்டிக் கொண்டு வெளீலை போட்டு வரலாமெண்டு…”

சத்தியன் கதைப்பது பூமணிக்கு விளங்கவில்லை. அவள் திக் பிரமை பிடித்தவள் போல் நின்றாள். அவளது இதயம் வேகமாகத் துடித்தது.

“கஜன் உங்களுக்கும் பவித்திராவுக்கும் நகை வாங்கிக் கொண்டு போகச் சொல்லி இரண்டு இலட்சம் ரூபா தந்தவர். நான் சிங்கப்பூரிலை வாங்கியந்தனான்” என்றவாறு மோட்டார் சைக்கிலால் இறங்கி, அதை முற்றத்தில் நிறுத்திவிட்டு மெதுவாக நடந்து உள்ளே வந்தான் சத்தியன்.

“இருங்கோ தம்பி நான் அவரைக் கூப்பிடுறன்” என்றவாறு உள்ளே சென்றாள் பூமணி.

சிறிது நேரத்தில் சங்கரப்பிள்ளையும் பூமணியும் வந்தனர். பவித்திராவைக் காணவில்லை. சத்தியனின் கண்கள் அங்கும் இங்கும் சுழன்றன.

“நீங்கள் கதைச்சுக் கொண்டிருங்கோ. நான் ரீ கொண்டு வாறன்” என்றவாறு பூமணி நழுவினாள்.

“உங்களுக்கு நிறைய நகை வாங்கி வந்தனான்” என்ற சத்தியன், தான் கொண்டு வந்த பையைத் திறந்து ஒரு சரையை எடுத்தான்.

“மகளிட்டைக் குடுங்கோ…” என்றார் சங்கரப்பிள்ளை. சத்தியனுக்கு அது திருப்தியாக இருந்தது. தனது தெரிவு நல்லதென்று பவித்திரா பாராட்டினால் எப்படி இருக்கும். அந்த நினைவு தேனாக இனித்தது.

கதிரையில் இருந்தபடி கடிதத்தைப் பார்த்துக் கொண்டிருந்த பவித்திராவின் அருகே வந்தாள் பூமணி. அவளிடம் எந்த மாற்றமும் இல்லை. ஒரு பெண் தனக்கு நிச்சயிக்கப்பட்டவன் வந்தால் எவ்வளவு துடிப்பாகவும் சந்தோசமாகவும் இருப்பாள். ஆனால், பவித்திரா எதுவும் நடவாதது போலல்லவா இருக்கிறாள். கவலையுடன் பவித்திராவின் தோளில் கையை வைத்தாள் பூமணி. மெதுவாகத் தலையை நிமிர்த்திப் பார்த்தாள் பவித்திரா. தாயின் கண்கள் கலங்கியிருந்ததை அவள் கவனிக்கவில்லை.

“சத்தியன் வந்திருக்கிறாரம்மா. போய் வெளிக்கிட்டு கொண்டு வா…!”

“சத்தியனா…? ஆரது..?” பதட்டமில்லாமல் கேட்டாள் பவித்திரா. பூமணிக்குத் தலையில் இடி விழுந்ததைப் போலிருந்தது. கன்னங்களால் கண்ணீா் வழிந்தோட, “நேற்று உன்னைப் பெண் பார்க்க வந்தவன்”

பவித்திரா கலகலவெனச் சிரித்தாள். “பெண் பார்க்கிறவை எல்லோரும் புருசனா..?” பலமாகச் சிரித்தாள். பூமணி குழம்பிப் போனாள். அவளது மூளை மரத்துவிட்டது. அவளால் சிந்திக்கவே முடியவில்லை.

“பிள்ளையாரே, பிள்ளையாரே…. என்னைக் காப்பாற்று…” என அவளின் வாய் முணுமுணுத்தது.

“எழும்பு, எழும்பிப்போய் வெளிக்கிட்டுக் கொண்டு வா” கெஞ்சினாள் பூமணி.

“மாட்டன்”

“உனக்குச் சத்தியனைச் செய்ய விருப்பமில்லையே”

“நான் என்ரை வீட்டை போகப்போறன்”

“இது தானே உன்ரை வீடு”

“இது சுடலை, என்ரை வீடு கோப்பாய் கடற்கரையிலை இருக்கு…”

“கடவுளே” பூமணிக்கு இதயம் வெடித்துவிடும் போலிருந்தது. “வெளீலை மாப்பிளை காத்திருக்கிறார். இவள் இஞ்சை விசராடுறாள் நான் என்ன செய்யிறது….” திடீரென்று பவித்திரா எழுந்து முன் ஹோலுக்குச் சென்றாள். பூமணி பரபரப்புடன் அவளின் பின்னால் சென்றாள்.

ஹோலுக்குள் வந்த பவித்திரா சத்தியனுக்குப் பக்கத்தில் இருந்த கதிரையில் அமர்ந்து, அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

அந்தச் சிரிப்பைச் சத்தியனால் சகிக்க முடியவில்லை. மறுபக்கம் திரும்பினான். பின்கையில் வைத்திருந்த நகைச் சரையை பவித்திராவிடம் நீட்டினான்.

பவித்திரா அதைப் பறித்தெடுத்துப் பிரித்தாள். நகைகள் சரையால் தவறி நிலத்தில் விழுந்தன.

சத்தியன் பவித்திராவுக்கு பரிசளிப்பதற்காக வாங்கி வந்த அட்டியலை பவித்திரா கையில் எடுத்து வினோதமாகப் பார்த்தாள். பின் அதை வாயில் வைத்துக் கடித்தாள்.

சத்தியன் திகிலுடன் அவளைப் பார்த்தான்.

# 05

‘‘மச்சான் நீ என்ரை தங்கச்சியைச் செய். உனக்கு என்ன வேணுமெண்டாலும் செய்வன்’’ முன்பு கஜன் சொன்னது காதுகளில் ஒலித்தது.

‘‘இதுக்காகத்தான் அப்படிச் சொன்னானோ?’’ சத்தியனின் மூளை வேலை செய்தது. பேய் பிசாசுகளில் அவனுக்கு நம்பிக்கை இல்லை. கோவூர் எழுதிய ஏராளமான புத்தகங்களை அவன் வாசித்திருக்கிறான். அத்துடன் அவன் லண்டனில் இருந்த போது வெள்ளைக்காரப் பெண் ஒருத்திக்கு பேய் பிடித்து விட்டதாக பேயோட்டியதை அவன் அறிவான். கடைசியில் அவளுக்கு மூளைக் கோளாறு என்று வைத்தியம் செய்து அகப்பட்டதை அவன் நேரில் கண்டிருக்கிறான்.

மன நோயில் பல வகை இருக்கு. சில மனநோயாளர்களை இனம் காணவே முடியாது. நன்றாகப் பழகுபவர்களும் வீட்டுக்காரரும் தான் இனங்காண முடியும் என்று அவர் படித்திருக்கிறான். இப்படி ஒரு நோய் இருந்ததால் தான் கஜன் தன்னைக் காணும் போதெல்லாம் தங்கையைப் பற்றிக் கதைத்தானே…? அவன் உண்மையைச் சொல்லியிருந்தால் செய்திருக்கலாம். பொய் சொல்லி ஏமாற்றிவிட்டான் என்று நினைக்க சத்தியனுக்கு கஜன் மீது ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

“நல்ல காலம் கடவுள் காப்பாற்றினார். தற்செயலாகக் கலியாணத்துக்குப் பிறகு தெரிந்திருந்தால் எப்படி இருக்கும்? நினைக்க நினைக்கச் சத்தியனுக்கு கோபம் கோபமாக வந்தது” உன்னை என்ன செய்யிறன் பார் என்று கறுவினான்.

‘இனி இஞ்சை என்ன வேலை’ என்று நினைத்துப் புறப்பட்டான்.

“என்ன தம்பி வெளிக்கிட்டீர். தேத்தண்ணீர் குடிச்சிட்டுப்போம்” என்றாள் பூமணி.

“வேண்டாம்” என்று சத்தியன் அவளின் பதிலுக்குக் காத்திராமல் விரைவாக வந்து மோட்டார் சைக்கிளை ஸ்ராட் பண்ணினான்.

சங்கரப்பிள்ளை கல்லாய்ச் சமைந்து போனார். அவரின் மூளை மரத்து உடல் நடுங்கியது. கல்யாணம் குழம்பியதை விட பவித்திராவின் நோய் அவரை வாட்டி வதைத்தது. முன்பு போலில்லாது அவருக்கு இப்பொழுது உணவு உண்பதே கஷ்டமாக இருந்தது.

பூமணிக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. ஆறு மாதங்களுக்கு முன்பொருநாள் பாடசாலையில் மயங்கி விழுந்ததாகப் பவித்திராவை அவளது நண்பிகளும் ஆசிரியையும் கூட்டி வந்தனர்.

அதன் பின் அவள் தனக்குள் கதைப்பதும் சிரிப்பதும் ஒரு இடத்தில் காரணமில்லாமல் இருப்பதும் வழக்கம். அதை வெளியே சொல்லவும் முடியாது வைத்தியமும் செய்ய முடியாது தவித்தாள் பூமணி.

“குமர் விசயம் வெளீலை தெரிந்தால் பின் வாழ்வே இல்லை என்பது அவளுக்குத் தெரியும். இவ்வளவு காலமும் இரகசியமாக இருந்த அந்த விடயம் அதுகும் ஊர்ச் சனங்களுக்கு முன்னால் அடிவளவில் இருந்த வைரவர் கோவில் சூலத்துடன் அவள் வந்த காட்சியை ஊரவர்களெல்லாம் எப்படிக் கதைப்பார்கள். ..” அந்த நினைவு அவளின் இதயத்தை வலிக்கச் செய்தது.

“இனியென்ன மாப்பிளை நேரில் பார்த்து விட்டார். அதோடை போறன் என்று ஒரு சொல்லுச் சொல்லாமல் போயிட்டார். ஊர் முழுக்க விசயம் தெரிந்து விட்டது. ஊரவர்கள் இனிச் சும்மாய் இருப்பார்களா? ஏற்கனவே பலருக்கு நாங்கள் நல்லாய் இருப்பது அவ்வளவு பிடிப்பதில்லை. இனிப்பேசி வாற சம்பந்தங்களையும் குழப்புவார்கள்” பல்வேறு சிந்தனைகள் பூமணியின் இதயத்துள் அரும்பி வளர்ந்து துன்பத்தைக் கொடுத்தன.

கணவன் ஏற்கனவே நோயாளி. பவித்திராவின் நோய் அவரை மிகவும் பாதித்திருந்தது. அவற்றையெல்லாம் மனம் விட்டு யாரிடமாவது கூறி ஆறுதலடைய முடியாது தவித்தாள்.

சத்தியன் கொடுத்துவிட்டுப் போன நகைப் பார்சலைப் பிரித்து அதனுள் இருந்த இரு சோடிக் காப்புக்களையும் பூனையின் கழுத்தில் போட்டாள் பவித்திரா. சங்கிலியை எடுத்து வலது கை ஆள்காட்டி விரலில் கொழுவி சுழட்டிக் கொண்டிருந்தாள். வைரத்தோடு, கம்மல், கைச்சங்கிலி என்பன நிலத்தில் சிதறிக் கிடந்தன.

மகளின் செயலைத் துக்க மேலீட்டுடன் பார்த்துக் கொண்டிருந்தாள் பூமணி. ஒரு காலத்தில் நூறு ரூபாவிற்கு கஷ்டப்பட்டவள் அவள். ஆனால் அப்போது நிம்மதியும் மகிழ்ச்சியும் அவளின் இதயத்தில் நிறைந்திருந்தன. இப்போது இலட்சம் இலட்சமாகப் பணம் இருக்கு. ஆனால் நிம்மதி?

அப்போது பவித்திராவோடு படிக்கும் மாணவர்கள் பலர் அங்கு வந்தனர்.

“இதென்ன வேலை எல்லாவற்றையும் விளையாட்டாக நினைக்கிறாய்…” என்று அதட்டியவாறு நிலத்தில் சிதறிக் கிடந்த நகைகளைப் பொறுக்கினாள் நிரூமா.

அந்த மாணவர்கள் பவித்திராவுடன் அடிக்கடி வீட்டுக்கு வருபவர்கள். அதனால் பவித்திராவின் வீட்டாரோடு மிகவும் நெருங்கிப் பழகி வந்தாள் நிரூமா. நிரூமா பவித்திராவின் உயிர்த்தோழி.

அவர்களைக் கண்டதும் பூமணிக்குத் துயரம் கட்டு மீறியது. விக்கி விக்கி அழுதாள்.

“அழாதைங்கோ அன்ரி. அவளுக்குக் கெதியிலை சுகம் வந்திடும்…” என்றாள் நிரூமா.

“இப்படி நீ ஆறுமாதமாய்ச் சொல்லுறாய். ஆனால் வரவரக் கூடிக் கொண்டு தான் போகுது…”

“எதுக்கும் ஒருக்கால் டொக்ரரோடை கலந்து ஆலோசித்தால் என்ன…?” நிர்மலன் கேட்டான். அவனுக்குப் பவித்திராவின் மேல் சற்று அன்பு அதிகம்.

“முந்தி ஊருக்குத் தெரிஞ்சிடும் எண்டுதான் டொக்ரருக்குக் காட்டாமல் மறைச்சனாங்கள். இப்ப ஊர் முழுக்க இவளின்ரை கதைதானே. இனிக் காட்டுவம்” என்றாள் பூமணி.

“ஆரம்பத்திலையே காட்டியிருந்தால் லேசாய் சுகப்படுத்தியிருக்கலாம்...” என்றான் நிர்மலன். அவனின் வார்த்தைகளில் அக்கறையும் அன்பும் இருந்ததை உணர்ந்தாள் நிருமா.

“பேய் பிசாசுகள் என்று பூசாரிகளுக்குக் காட்டி கழிப்புக் கழிச்சு காசு செலவழிக்கிறதை விட்டு விட்டு பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டு போங்கோ. எனக்கெண்டால் பேய் பிசாசுகளிலை நம்பிக்கையில்லை. பேய் பிசாசெண்டு சொல்லிக் காசையும் செலவழிச்சு நோயைக் கூட்டுறதாய் முடியும்” என்று உபதேசம் செய்தான் நிர்மலன்.

நிருமா உதட்டுக்குள் சிரித்தாள். உந்த உபதேசம் தன்ரை நன்மை கருதித்தான் என்று நினைத்தாள்.

நிர்மலன் பவித்திராவை விரும்புகிறானோ. இல்லையோ என்று நிருமாவுக்குத் தெரியாது. ஆனால் பவித்திரா அவனை விரும்புவது தெரியும். பவித்திரா அதைக் கூறாவிட்டாலும் அவளின் நடத்தையிலிருந்து அறிந்து கொண்டாள் நிருமா.

எந்த நேரமும் அவனைப் பற்றிப் பேசுவதும், நோட்ஸ் விளக்கங்கள் தேவையானால் அவனிடம் கேட்பதும் வகுப்பில் அவனை அடிக்கடி பார்ப்பதையும் அவள் கவனித்து இருக்கிறாள். ஆனால் நிர்மலன் அவளை விரும்புகிறானோ என அறிய அவள் முற்பட்ட போதும், அதை அவளால் அறிந்து கொள்ள முடியவில்லை.

நிர்மலன் நல்ல அழகன் இல்லாவிட்டாலும் கவர்ச்சியானவன். இனிமையாகப் பேசுவான். பண்பாக நடந்து கொள்வான். அக்கறையோடு உதவிகள் செய்வான். அதைவிட நன்றாகப் படிப்பான். இவையெல்லாம் நிரூமாவைக் கவர்ந்தன.

நிரூமா நிர்மலனைக் கண்டதும் பரவசப்படுவாள். கண்களால் அவனது எழிலை ருசிப்பாள். கதைக்க முற்படுவாள். ஆனால் நிர்மலன் அதற்கு இடம் கொடுப்பதில்லை.

ஒரு முறை பவித்திராவைப் போல் தனக்கிருந்த பாடவிடயமான ஒரு சந்தேகத்தைக் கேட்டாள் நிரூமா.

நிர்மலன் அதில் அக்கறை காட்டவில்லை. ‘‘அந்த டொப்பிக் எனக்கும் விளங்கவில்லை. சேரைக் கேட்பம்’’ என்று கூறினான்.

அது நிரூமாவுக்குப் பிடிக்கவில்லை. இதைப் பவித்திரா கேட்டிருந்தால் தனக்கு விளங்காவிட்டாலும் புத்தகங்களில் தேடிப் பார்த்து வாசித்து விட்டு வந்து விளக்கமளித்திருப்பான் என்று நினைத்தாள் நிரூமா. அவனது செயல் அவளுக்கு ஏமாற்றமாக இருந்தது. ஆனால் எதுவும் சொல்லவில்லை. இன்று அவன் காட்டும் அக்கறையில் இருந்து அவளை அவன் விரும்புகிறான் என நினைத்தாள் நிரூமா.

அப்போது இருபாலைச் சந்தியில் ஸ்ரூடியோ வைத்திருக்கும் கணேஸ் ஸ்கூட்டரில் வந்து, ‘‘உங்களைக் கஜன் உடனை வரட்டாம்’’ என்றான்.

முன்பென்றால் டெலிபோனில் கதைக்கக் கொழும்புக்குச் செல்ல வேண்டும். இப்போது கிராமங்களில் உள்ள தேநீர்க்கடைகளுக்கும் கூட டெலிபோன் வந்து விட்டது.

பூமணி சேலையை மாற்றிக் கொண்டு வந்து கணேஸின் ஸ்கூட்டரில் ஏறினாள்.

கணேஸ் அவர்களின் குடும்ப நண்பன்.

பூமணி வந்து ஐந்து நிமிடங்களில் கஜன் டெலிபோன் எடுத்தான்.

பூமணி, ‘‘ஏன் தம்பி வரச் சொன்னீ....’’ என்று கேட்டாள்.

‘‘எனக்குவாற ஆத்திரத்திற்கு உங்கை வந்தனெண்டால் அவளைக் கொலை செய்வன்’’ என்று கர்ச்சித்தான் கஜன். பூமணி பயந்து போனாள். அவள் உடலெல்லாம் வியர்த்தது.

## 06

‘‘அம்மா, உங்கை நடக்கிற விசயமெல்லாம் எனக்குத் தெரியாது எண்டு மட்டும் நினைக்காதை. எனக்கு உடனுக்குடன் எழுதுறதுக்கு ஆள் இருக்கு... இப்ப சத்தியன் டெலிபோன் பண்ணி என்னைத் திட்டினவன்’’ துயரம் தோய்ந்து வந்த அந்த வார்த்தைகள் பூமணியின் நெஞ்சில் இடியாக இறங்கின.

நிமிடங்கள் நிசப்தமாகக் கரைந்து கொண்டிருந்தன. பூமணியால் எதுவும் பேச முடியவில்லை. மௌனமாகக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள். அத்துடன் அவளுக்கும் கதைக்கப் பயமாக இருந்தது. ஏதாவது கதைக்கப்போக அதையே அவன் பிடித்து வைத்துக் கொண்டு சன்னதமாடுவான் என்பது அவளுக்குத் தெரியும். கடந்த ஆறு மாதங்களாக அதுதான் நடைபெறுகிறது. முன்பென்றால் டெலிபோனில் கதைக்க கொழும்புக்குச் செல்லவேண்டும். கடிதம் எழுதினால் பதில்

கிடைக்க மாதக்கணக்குச் செல்லும். அதனால் இப்படியான பிரச்சினைகளுக்கு நிம்மதி இருந்தது. இப்போது அப்படியல்ல. அருகில் மிக அருகில் அவளின் வீட்டில் இருந்து கால் மைல் தூரத்தில் மூன்று டெலிபோன் தொடர்பு நிலையங்கள் உள்ளன. கணேஸ் கஜனின் நண்பன். அதனால் உடனே வந்துவிடுவான். இந்த வாரத்தில் ஐந்து தரம் கஜன் டெலிபோன் எடுத்துவிட்டான்.

“சத்யன் ஒரு நல்ல பொடியன். அது மட்டுமில்லை என்ர உயிர் நண்பன். இப்ப கொஞ்ச நேரத்திற்கு முன்னம் டெலிபோன் பண்ணி என்ன சொன்னவன் தெரியுமே…?” என்று நிறுத்தினான் கஜன்.

அவனின் குரலில் இருந்து, அவன் கடுமையாக வேதனைப்படுகிறான் என்று பூமணிக்குப் புரிந்தது.

“அவன் என்னைக் கண்டபடி திட்டினான். அவனைப் பொறுத்தமட்டில் அவன் கதைச்சது சரி. நானும் அந்த நிலையிலை இருந்தால் அப்படித்தான் கதைப்பன்… அவன் சொன்னானம்மா திட்டமிட்டுத்தானாம் இதைச் செய்தனான். அவளுக்கு விசராம் ஊரிலை கரைசேர்க்க ஏலாது என்பதற்காகத்தானாம் நான் தங்கடை குடும்பத்தோடை நல்லாய்ப் பழகி நன்மதிப்பைப் பெற்றது. அதைத்தானம்மா என்னாலை தாங்க முடியேல்லை” அவன் பெரு மூச்சு விடுவது பூமணிக்குக் கேட்டது.

அவனது மனக்குமுறலான பேச்சைக் கேட்டுப் பூமணியின் உள்ளம் வேதனையால் கரைந்து விட்டது. துக்கம் நினைவை இழக்கச் செய்தது. அழக் கூடாது என்று நினைத்திருந்தாள், அந்த நினைப்பை மறந்து விம்மினாள்.

“அழுகிறியா அம்மா… அழாதை நீ தளர்ந்தால் மேற்கொண்டு காரியங்களைச் செய்ய முடியாது. அழாதயம்மா…”

பூமணி சேலைத் தலைப்பால் பொங்கிப் பெருகிய கண்ணீரைத் துடைத்தாள்.

“நான் ஏன் இஞ்சை வந்தனான் என்பது உங்களுக்குத் தெரியும். அதோடை எந்தக் குடும்பத்தோடை சகவாசம் வைக்கக் கூடாது என்று நான் நினைச்சேனா அந்தக் குடும்பத்தோடை பவித்திரா உறவு வைச்சிட்டாள். அதுதான் எனக்குப் பெரிய கவலை. எங்கடை குடும்பத்தின் நல்வாழ்வு தான் எனக்கு முக்கியம். என்னுடைய சுகதுக்கங்களையெல்லாம் தியாகம் செய்து இரவு பகலாய் உழைக்கிறன். என்னுடைய குறிக்கோளை அடைஞ்சிட்டன் என்று நினைச்சிருக்கேக்கை தான் இந்த வெள்ளிடி எனக்கு விழுந்தது…” அவன் விம்மி விம்மி அழுதான்.

“டேய்… டேய்… நீ ஆம்பிளையடா… இப்பிடி அழுறியே…” கொதித்தாள் பூமணி.

“அம்மா இண்டைக்குச் சத்தியன் பேசிய பேச்சோடை நான் பலவீனப்பட்டுட்டன். அதை என்னாலை தாங்கிக் கொள்ளவே முடியவில்லை…. அவள் ஏனம்மா இப்பிடிச் செய்தவள்…” விம்மினான்.

“தம்பீ நீ தவறாய் நினைக்கிறாய் எண்டு நான் நினைக்கிறன். அவளுக்கு உண்மையாய் வருத்தம்தான். நேற்று சத்தியன் வந்து பெண் பார்த்துவிட்டுப் போனாப்பிறகு இரவு லவன் படம் போட்டான். இரவு பன்னிரண்டு மணிக்கு அவள் எழும்பிப் போய் எங்கடை பின் வளவுக்கை இருந்த வைரவர் சூலத்தைப் பிடுங்கியந்திட்டாள். சனமெல்லாம்

திகைச்சுப் போச்சு…. பிறகு காளி கோவில் ஐயா வந்து நூல் கட்டினவர்'' பூமணி பேசிக் கொண்டிருக்கும் போது கஜன் குறுக்கிட்டான், ‘‘அப்ப ஊரிலை எல்லாருக்கும் இந்த விசயம் தெரியும்..''

‘‘ஓம் மோனை.. எனக்கெண்டால் நீ சொல்லுறமாதிரி அவள் நடிக்கிறதாய்த் தெரியேல்லை. பேய் பிடிச்சமாதிரித்தான் இருக்கிறாள். இவ்வளவு நாளும் ஊருக்கைத் தெரியக் கூடாதென்பதற்காக மறைச்சுவைச்சிருந்தன். இனி ஏதாவது வைத்தியம் செய்யவேணும்..'' பேச்சை நிறுத்தினாள் பூமணி. சில கணங்கள் மௌனம். ‘ஏதோ யோசிக்கிறான் போலை இருக்கு' என்று நினைத்தாள் பூமணி.

‘‘தம்பீ..'' பூமணி மெல்ல அழைத்தாள்.

‘‘ம்.. போனை வைக்கட்டே…''

‘‘கொஞ்சம் பொறனை…'' மீண்டும் மௌனம்.

‘‘எனக்கு இஞ்சை கொஞ்சம் வேலை இருந்ததாலை தான் நான் சத்தியனோடை வரமுடியாமல் போய்ச்சு… இனிமேலும் இஞ்சை இருந்தால் கரைச்சல். நான் உங்கை வாறன்''

‘‘வரப் போறியா.. எப்ப..?''

‘‘கெதியாய் வாறன். உங்கை உனக்கும் ஆர் துணை. அப்பாவாலை ஏலாது. நான் உங்கை வந்து கொஞ்ச நாளைக்கு நின்று நிலைமையை அவதானிப்பம். நான் உங்கை வந்தால், திரும்பி வரேக்கை பவித்திராவையும் கூட்டிக்கொண்டு தான் வருவன்.''

“அவளின்றை படிப்பு.. இந்த முறை தானே ஏ-எல் எடுக்கிறாள்….”

“உங்கை அவள் எங்கை படிக்கிறாள். விசரிலைதானே திரியுறாள்…”

அந்த வார்த்தைகள் பூமணியின் துயரத்தை அதிகரிக்கச் செய்தன.

“நீங்க எதைச் சொன்னாலும் எனக்கெண்டால் நம்பிக்கையில்லை. அவள் பொன்னையற்றை மோன் சூரியை நினைச்சுத்தான் இதுகளைச் செய்யுறாள்….” கஜன் பேசுவதை நிறுத்திவிட்டுத் தாயின் பதிலை எதிர்பார்த்தான்.

பூமணி எதுவும் பேசவில்லை. அவன் கடந்த ஆறு மாதங்களாக டெலிபோனில் இதைத்தான் சொல்லுகிறான். அதற்குப் பதிலாக பூமணி ஏதாவது சொன்னால் எரிந்து விழுவான். அதனால் அவள் ஒன்றும் பேசவில்லை.

தாய் எதுவும் சொல்லாததால் கஜன் சொன்னான், “நான் இந்தப் பிரச்சினையைப் பற்றி உங்களுக்குக் கடிதம் எழுதினாப் பிறகுதானே அவளுக்கு விசர் வந்தது. வாறவிசர் அதுக்கு முந்தியே வந்திருக்கலாம் தானே….”

ஆரம்பத்தில் பூமணிக்கும் பவித்திரா நடிக்கிறாள் என்ற ஒரு சந்தேகம் இருந்தது. ஆனால் வரவர நிலைமை மோசமாகிக்கொண்டு வருவதைப் பார்த்தால் அவளுக்குப் பயமாக இருந்தது.

“பள்ளிக்கூடத்திலை பிரச்சினை இல்லை. ஒழுங்காய்ப் படிக்கிறாள். எல்லாரையும் விடக் கூடுதலான புள்ளிகள் எடுக்கிறாள். பிறகு விசரெண்டு எப்பிடிச் சொல்லுறது..?” கொதித்தான் கஜன்.

“இதுக்கெல்லாம் என்னை என்ன செய்யச் சொல்லுறாய். இஞ்சை அவள் படுத்திற பாட்டாலை நான் நொந்து போயிருக்கிறன். இப்ப என்னாலை ஒழுங்காய்ச் சமைக்கவே முடியேல்லை. அந்தாள் யோசிச்சு யோசிச்சுப் படுத்துக்கிடக்கு. நாளைக்கு அந்தாளுக்கு கொண்டு வந்திட்டால் என்று எனக்குப் பயமாய்க் கிடக்கு” விம்மி அழுதாள் பூமணி.

“அழாதை அம்மா எல்லாத்துக்கும் நான் வாறன். ஆனால் ஒண்டு மட்டும் சொல்லுறன், அவள் பொன்னையற்றை மோன் சூரியைச் செய்ய வேணுமெண்டு சொன்னாளெண்டால்... அவளைக் கொலை செய்வன்.”

பூமணி நடுங்கினாள், “உனக்கு ஆர் உதுகளை எழுதுறது...” கோபமாகக் கேட்டாள் பூமணி.

“எனக்கு எழுத ஆள் இருக்கு..”

“எனக்கெண்டால் அவள் அப்பிடிக் காதலிக்கிறதாய் தெரியேல்லை. ஆரும் எங்களைப் பிடிக்காதவை எழுதலாம் தானே...”

ஒரு கணம் மௌனம். பின் கஜன் சொன்னான், “நான் அதைப் பற்றிச் சிந்திக்கவே இல்லை. அப்படியும் இருக்கலாம் தான். அது சரி சூரி வீட்டை வாறவனே...”

பூமணிக்கு எதுவும் பேசத்தோன்றவில்லை.

“வந்து..” தடுமாறினாள்.

“நீ மறைக்கிறாய்…” கொதித்தான் கஜன்.

“நான் ஒன்றையும் மறைக்கேல்லை. இரண்டு பேரும் ஒன்றாய்ப் படிக்கிறவை. ஏதாவது தேவையெண்டால் எப்பாலும் இருந்திட்டு வருவான். காலமை அவளோடை படிக்கிற பெடியனெல்லாம் வருத்தம் பார்க்க வந்ததுகள். அவனும் வந்தவன்…” என்றாள் பூமணி.

“இப்பிடிக் கன விஷயங்களை நான் உங்களைக் கேட்கவேணும். டெலிபோனிலை கேக்கேலாது . நேரிலை வாறன். நீங்கள் மகளுக்காக எல்லாவற்றையும் மறைப்பியள். ஆனால் ஒண்டு மட்டும் சொல்லுறன், என்ரை உயிர் போனாலும் சூரியைச் செய்ய விடமாட்டேன். அவங்கள் எனக்குச் செய்த வேலைக்கு அவங்களைக் கொலை செய்தாலும் என்ரை ஆத்திரம் தீராது” என்று கறுவியவன் சில கணங்கள் கழித்து, “நான் உங்கை வாறதைப் பற்றி பவித்திராவுக்குச் சொல்ல வேண்டாம்” என்று கூறி விட்டுப் போனை வைத்தான்.

# 07

ஒரு வாரத்திற்குப் பிறகு பவித்திராவைக் கண்ட நிர்மலன் அதிர்ந்து போனான். அழகு தேவதையான அவள் மெலிந்து உருக்குலைந்து இருந்தாள். ஒளிரும் அவளின் பிரகாசமான முகம் கறுத்து இருண்டிருந்தது. அவனால் சகிக்க முடியவில்லை. ஆயிரம் கதைகள் பேசும் அவளது விழிகள் சோர்ந்து களைத்திருந்தன.

அவனுக்குப் பவித்திராவின் அழகிய விழிகளைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமென்று ஆசை. அவளோடு ஏதாவது சாட்டுச் சொல்லிக் கதைக்கும் போதெல்லாம் அவளது அழகிய விழிகளின் கவர்ச்சியைத்தான் ரசிப்பான். எப்படியாவது அவளை அடைய வேண்டுமென்ற உணர்வு அவனின் இதயத்தில் ஒரு மூலையில் இருந்து வருத்திக் கொண்டிருந்தது.

அவளுக்காக அவன் எதையும் செய்யக் காத்திருந்தான். ஒரு முறை அவள் பாடரீதியான ஒரு புத்தகத்தைக் கேட்டாள். அவனை எல்லோரும் 'நிம்' என்றே அழைப்பார்கள். ஒரு நாள் ஒழுங்கையால் அவன் வந்த போது வெள்ளெருவைப் பிள்ளையார் கோவில் வடக்கு வீதியில் அவளைக் கண்டான்.

நிர்மலன் கிறங்கிப் போனான். பொதுவாக அவள் பாடசாலையில் தான் ஏதாவது கதைப்பாள். கண்டால் சிரிப்பாள்.

"நிம் எனக்கொரு உதவி செய்றியளா…?"

அவனுக்கு வியர்த்தது. தற்செயலாய் ஆராவது கண்டால்.. அந்த நினைவு கொடுத்த பயத்தால் அவனுடல் நடுங்கியது. நாக்கு அண்ணத்துடன் ஒட்டிக் கொண்டது.

சிரமப்பட்டு 'ம்' என்றான்.

"சேதனவியல் இராசாயனம் என்ற புத்தகத்தை எடுத்துத் தருவீர்களா?"

"சரி"

சைக்கிளால் இறங்காமலே கூறிவிட்டுச் சென்றான் நிர்மலன்.

அந்தப் புத்தகத்தை அவன் எடுக்கப்பட்ட பாடு, எவ்வளவோ கஷ்டப்பட்டு பல நூறு மைல் சைக்கிள் ஓடி அதைப் பெற்றுக் கொண்டு வந்து வகுப்பறையில் வைத்துக் கொடுத்தான்.

பவித்திராவின் முகம் பிரகாசித்தது. மெல்லிய முறுவலுடன், ''தாங்ஸ்'' என்றபடி ஆவலுடன் கையை நீட்டினாள்.

நிர்மலன் தான் கொண்டு வந்த புத்தகத்தை நீட்டினான். அவள் பெற்றுக் கொள்ளும் போது புத்தகத்துடன் அவனது கைவிரல்களையும் சேர்த்துப் பிடித்தாள்.

ஒரு நிமிடம்தான் செயலிழந்து போனான் நிர்மலன். அவளது மிருதுவான விரல்கள் குளிர்மையாக இருந்தன.

தன்னுள் ஒரு கற்பனையை உருவாக்கித் தேவதையாக இதயத்துள் கொலுவைத்திருந்த அவனுக்குப் பவித்திராவின் நோய் மிகுந்த வருத்தத்தைக் கொடுத்தது.

தனியே சந்தித்துக் கதைக்க வேண்டுமென்ற உணர்வு பல நாட்களாக அவனின் இதயத்தை அரித்துக் கொண்டிருந்தது. ஆனால் அதற்கான துணிவு எள்ளளவும் அவனுக்கு வரவில்லை.

பாடசாலையில் தன்னுடன் கற்கும் மாணவ மாணவியரோடு பவித்திராவைப் பார்க்க வந்திருந்த அவன், இனியும் பொறுக்க முடியாது உடனே சந்தித்துக் கதைத்து விட வேண்டும் என்று முடிவு கட்டினான்.

பூமணி கஜன் வரச் சொன்னதாகக் கணேசின் ஸ்கூட்டரில் ஏறிச் சென்றதும் மாணவர்களோடு சேர்ந்து அவனும் விடை பெற்றான்.

அவர்கள் வெள்ளொருவைப் பிள்ளையார் சனசமூக நிலையத்தின் அருகே வந்தபோது, ''நான் ஒருக் கால் காளி கோவில் குருக்களைச்

சந்திக்க வேண்டும்'' என்று கூறிப் பிள்ளையார் கோவில் தெற்கு வீதியால் சென்றான்.

நிருமாவுக்கு அவனது செயல் பிடிக்கவில்லை. இவன் ஏதோ ஒரு திட்டத்துடன் தான் விலகிச் செல்கிறானோ…? என்று நினைத்தாள். அவளின் மனம் பல கோணங்களில் அச் செயலை எண்ணிப் பார்த்தது.

பிள்ளையார் கோவில் வாசலுக்கு வந்த நிர்மலன், வெளியே வைக்கப்பட்டிருந்த திருநீற்றைப் பக்தியுடன் எடுத்துப் பூசினான். அவன் மனம் பவித்திராவுக்காகப் பிள்ளையாரை இரந்தது. உணர்ச்சிப் பெருக்கால் அவன் உடல் சிலிர்த்துக் கண்கள் கசிந்தன.

அட்டாங்க நமஸ்காரம் செய்து விட்டு எழுந்தான். மனம் லேசாகி இருந்தது. உண்மையிலேயே பிள்ளையார் வரம் கொடுப்பதில் வல்லவர். அவன் கேட்டதை எல்லாம் அவ்வப்போது காலந் தாழ்த்தியாவது கொடுத்துள்ளார், ''பவித்திரா சுகமடைந்து பழையபடி பாடசாலைக்கு வரவேண்டும் என்று மனமுருக வேண்டிவிட்டு அது நடக்கும்'' என்ற துணிவோடு சைக்கிளை எடுத்தான்.

பிள்ளையார் கோவில் வடக்கு வீதியைத் தாண்டி சனசமூக நிலையத்தடிக்கு அவன் வந்தபோது லேசான பயம் அவன் இதயத்தைக் கௌவியது.

பவித்திராவின் வீட்டுக்குத் தனியே போகலாமா…? யாராவது பார்த்தால்… நினைவுகள் பயத்தைக் கொடுத்த போதும், இதயத்தின் மூலையில் ஒளிந்திருந்த பவித்திராவின் உணர்வுகள் பயப்படாமல் செல் என்ற தைரியத்தைக் கொடுத்தன. துணிவுடன் சென்ற நிர்மலன் சைக்கிளால் இறங்கி மெதுவாகப் படலையைத் திறந்தான்.ஸ

அரவம் கேட்ட பவித்திராவின் நாய் குரைத்துக் கொண்டு வந்தது.

அவன் நகர்வதற்கு நாய் இடங்கொடுக்கவில்லை. பலமாகக் குரைத்தது. கடிக்க வேண்டுமென்ற ஆத்திரம் அதற்கு.

நாய் குரைக்கும் சத்தம் கேட்டுப் பவித்திரா வெளியே வந்தாள். அவன் அவளின் முகத்தைப் பார்த்தான்

ஒரு மாறுதல். சிரிக்க முயற்சித்தாள், ‘‘நிம்... நீங்களா...?’’ பொலிவின்றிக் குரல் கரகரத்தது.

‘‘போ... உள்ளுக்கு... போடா உள்ளை....’’ நாயை அதட்டினாள்.

நாய் அவளைப் பார்த்து ஊழையிட்டு விட்டு நகர்ந்து சென்று மாமரத்தின் கீழ்ப்படுத்தது.

‘‘உள்ளுக்கு வாங்கோ...?’’

அவன் முற்றத்தில் சைக்கிளை நிறுத்திவிட்டு உள்ளே சென்று ஹோலில் இருந்த நாற்காலியொன்றில் அமர்ந்து கொண்டான்.

பவித்திரா எதுவும் பேசாமல் அவனுக்கு எதிரே இருந்த நாற்காலி ஒன்றில் அமர்ந்து தலையைக் குனிந்து கொண்டாள்.

நிர்மலனுக்குப் பயம். அவனால் உடனே எதுவும் பேசமுடியவில்லை. என்னவோ எல்லாம் பேசவேண்டுமென்று நினைத்துக் கொண்டு வந்தவனுக்குப் பேச வார்த்தைகள் வரவில்லை.

சில கணங்கள் மௌனமாகக் கரைந்தன.

‘‘பவித்திரா...’’ மெதுவாக அழைத்தான்.

பவித்திரா தலையை நிமிர்த்தி அவனைப் பார்த்தாள். பின்பு சிரித்தாள். பழைய சுருதி அந்தச் சிரிப்பில் இருப்பது போலிருந்தது நிர்மலனுக்கு.

பவித்திரா நாற்காலியை விட்டு எழுந்து சில நிமிடங்கள் நின்றாள். அவளது கை தலையைக் கோதியபடி இருந்தது. 'ஏதோ சிந்திக்கிறாள் என்று நினைத்தான்' நிர்மலன்.

"நிம்..." மெதுவாக அவளின் உதடுகள் பிரிந்தன.

"சொல்லு பவித்திரா..."

"எனக்கு உலகம் வெறுத்துப் போச்சு. என்னாலை நிம்மதியாய் வாழ முடியேல்லை. ஒரே குழப்பம் மனதுக்கு இடைஞ்சலாயிருக்கு. இதயத்துக்கை யாரோ புகுந்திருந்து எந்த நேரமும் வெருட்டிக் கொண்டிருக்கிறார்கள்....." கண்கள் கலங்கி கண்ணீர் குதித்தோடியது. அதை நிர்மலனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

"வீணாய் மனதைப் போட்டுக் குழப்பாதையும், உமக்கு ஒண்டுமில்லை. பணம் பொருளுக்கெல்லாம் குறைவில்லைத்தானே. ..." நிர்மலன் கூறிக்கொண்டிருக்கையில் ஆத்திரத்துடன் குறுக்கிட்டாள் பவித்திரா.

"பணம்... என்ன பணம்... எனக்குப் பணம் தேவையில்லை..."

"உணர்ச்சிவசப்படாதையும். மனிதர்களுக்கு அரைவாசி வருத்தம் தேவையில்லாத கற்பனைகளாலை தான் வருது. உமக்குப் பணம் தேவையில்லாவிட்டால விடும். ஆனால் நான் சொல்ல வந்தது

என்னவெண்டால் பணத்தைச் சிலவழிச்சு நோய்க்கு மருந்தைச் செய்யும் என்று.''

"அப்ப எனக்கு விசர் எண்டு நீங்களும் சொல்லுறியளோ...?''

அந்தக் கேள்வியால் ஒரு கணம் தடுமாறிப் போனான் நிர்மலன். அவன் தன்னைச் சுதாகரித்துக் கொள்ளமுன் பவித்திரா பலமாக அழுதபடி அவனை நோக்கி ஓடி வந்தாள். நிர்மலனுக்குப் பயமாக இருந்தது. இஞ்சை வந்தது பிழை என்று நினைத்தான். அதற்குள் பவித்திரா அவனின் அருகே வந்து விட்டாள்.

# 08

டெலிபோனில் கஜனுடன் கதைத்துவிட்டு வெளிய வந்த பூமணிக்குக் குழப்பமாக இருந்தது. கஜன் முரட்டுச் சுபாவமுள்ளவன். யார் எப்படி நியாயத்தை எடுத்துக் கூறினாலும் அவனுக்கு ஏறாது. தான் நினைத்தபடி தான் நடப்பான்.

அவன் வெளிநாட்டுக்குப் போவதாக முடிவு கட்டி விட்டு நஞ்சு மருந்துப் போத்திலுடன் வந்து சொன்னான், "அம்மா நான் இப்ப இருக்கிற நிலையிலை இந்த ஊரிலை இருந்தால் செத்துப் போவன். நான் உயிரோடு இருக்க வேண்டுமென்று நீங்கள் விரும்பினால் என்ன பாடுபட்டாவது என்னை வெளிநாட்டுக்கு அனுப்புங்கோ. இல்லாட்டி உங்கடை மூத்த மகனுக்குக் கொள்ளி வைக்க வேண்டிய நிலை ஏற்படும்'' என்றான்.

அதைக் கேட்டு விட்டுப் பூமணி குடும்ப நிலைவரத்தைக் கூறி அழுதாள். எதுக்கும் அவன் மசியவில்லை. அதனால்தான் எல்லாவற்றையும் விட்டுக் கொடுத்து விட்டு உடையாரின் மகனிடம் உதவிக்குப் போனாள். அதனால் ஊரில் உள்ளவர்கள் எவ்வளவோ கேவலமாக அவளின் காதுக்குக் கேட்கக் கூடியதாகக் கதைத்தும் அவள் கலங்கவில்லை.

இப்போது கஜன் வருவதாகக் கூறுகிறான். சில வேளையில் அடுத்த பிளேனிலும் வந்து இறங்குவான். இறங்கினால் என்ன நடக்கும்…? நினைக்கவே பயமாக இருந்தது.

“நில்லுங்கோ நான் ஸ்கூட்டரில் கொண்டு போய் விடுறன்” என்று கணேஸ் சொன்னான்.

“வேண்டாம் தம்பி நான் பிள்ளையாரைக் கும்பிட்டு விட்டுப் போறன்” என்று கூறிவிட்டு நடந்தாள் பூமணி.

பிள்ளையார் கோவிலுக்கு வந்தாள் பூமணி. அவளின் கண்களால் கண்ணீர் பெருகியது, “அப்பனே பிள்ளையார் அப்பா, என்னுடைய துன்பங்களுக்கெல்லாம் விடுதலை தேடித்தந்த நீதான் இதற்கும் பரிகாரம் காணவேணும். அவன் மகா முரடன். வந்தால் பவித்திராவைக் கொன்று போடுவான். ஒன்றில் பவித்திராவின்ரை வருத்தத்தை மாற்று இல்லாவிட்டால் அவனை இஞ்சை வராமல் செய்” என்று மன்றாடினாள்.

“பிள்ளையாரே எனக்கும் குழப்பமாய்த்தான் கிடக்கு. கஜன் சொல்லுறமாதிரி பவித்திரா நடிக்கிறாளோ தெரியவில்லை. பொன்னையற்ரை மோன் அடிக்கடி படிக்கிற சாட்டிலை வந்து போறான். அப்பிடி அவன் காதலிக்கிறதாய் இருந்தால் கொலைதான் விழும். அவனைத் தடுக்கேலாது” விம்மினாள் பூமணி.

பிள்ளையாருக்குச் சொல்லி அழுற பிறகு மனம் பாரம் குறைந்தது போல் இருந்தது. திருநீற்றுக் குடுவையில் இருந்த திருநீற்றை அள்ளி நெற்றியில் பூசிக்கொண்டு வீட்டை நோக்கி நடந்தாள்.

வடக்கு வீதி மூலையில் வெள்ளெருவைப் பிள்ளையார் சனசமூக நிலையம் இருக்கிறது. அதன் அருகில் பச்சைக் குடையை விரித்து வைத்தது போல் பெரியதொரு வாகை மரம் உள்ளது.

அந்த வாகை மரத்திற்கு பல முக்கியமான கதைகள் உண்டு. சனசமூக நிலையத்திற்கு முன்னால் உள்ள மணியத்தின் வீட்டுக் குப்பையில் முளைத்தது தான் அந்த வாகை மரம். அதை மணியமும் கனகரத்தினமும் பிடுங்கி சனசமூக நிலையத்திற்கு முன்பாக வைத்தார்கள். பரியாரியரின் மகள் இந்திரா அதற்கு நீர் ஊற்றி வளர்த்து வரும் போது, காதலித்த ஒருவருடன் சென்று விட்டாள். அதன் பின் அது அநாதையானது.

அந்த வாகை மரத்தைக் கண்டதும் பூமணிக்குப் பழைய நினைவு ஒன்று ஞாபகத்திற்கு வரும். அதனால்தானே இன்று இவ்வளவு பிரச்சினைகள். பூமணி வாகை மரத்திற்குக் கிட்ட வந்து தொட்டுப் பார்த்தாள். அவளுக்கு நடந்து முடிந்த அந்த துயரமான சம்பவம் நெஞ்சில் முட்டி மோதியது.

அன்று வெள்ளெருவைப் பிள்ளையார் கொடியேறி ஆறாம் நாள். பொதுவாக ஆறாம் திருவிழா ஒரு போதும் ஒழுங்காக நடைபெறுவதில்லை. காரணம் அன்று எப்படியும் மழை வரும். அன்றைய நாளை மழை நாளாக வர்ண பகவான் பிரகடனப்படுத்தியிருந்தார் போலும்.

இரவு எட்டு மணியிருக்கும். மனோ லைட் ஸ்தாபனத்தார் கோவிலை பகலாக்கி வைத்திருந்தனர். வாகை மரம் முழுவதும் பல நிற

பல்புகள் பூட்டப்பட்டிருந்தன. அந்த வாகை மரத்திற்குக் கீழ் ஏராளமான மக்கள் குழுமி இருந்தனர். பொதுவாக பிள்ளையாரின் உற்சவ காலங்களில் கோவிலில் நிற்பவர்களைவிட அந்த மரத்திற்குக் கீழ் நிற்பவர்கள் தான் அதிகம்.

கறுத்திருந்த வானத்தில் இடைக்கிடை வெள்ளைக் கீற்றுக்கள் தோன்றி மறைந்தன லேசான 'கடகட' வென இரைச்சல் சத்தம். மழைத்துளி அங்கொன்றும் இங்கொன்றுமாக விழ ஆரம்பித்தது.

பூமணியும் பவித்திராவும் வாகை மரத்தின் கீழ் இருந்தனர். அளவெட்டியூர் சிதம்பர நாதனின் நாதஸ்வர இசை குளிர்காற்றோடு கலந்து வந்து தேனாக இனித்தது.

கஜன் அப்போது அங்கே வந்தான். 'அம்மா எனக்குப் பசிக்குது' என்றான்.

அவனுக்கு அருகில் இருந்து சாப்பாடு போட்டுக் கொடுக்க வேண்டும். சாப்பாட்டைக் கொடுத்துவிட்டு வெளியில் அலுவலாகப் போனால் கூட அத்துடன் எழுந்து விடுவான். சாப்பிடச் சாப்பிடக் கேட்டுப் போட வேண்டும். அது பூமணிக்குப் பெரிய சுமை.

"போட்டுச் சாப்பிடன் ராசா"

அவன் பதில் சொல்லவில்லை. நடந்து சென்றான்.

அவனக்கு முன்னால் பொன்னையாவின் மகள் ரதினி சென்று கொண்டிருந்தாள். அவள் அவனுடன் கல்வி கற்பவள். தகப்பன் ஊரில் பணக்காரன். அத்தோடு சண்டியனும் அதனால் அவளுக்கும் கொஞ்சம் திமிர் அதிகம். கஜனோடும் திமிராகத்தான் நடந்து கொள்வாள். அதனால் அவனுக்கு அவளைப் பிடிக்காது.

வாசிகசாலை முடக்குத்தாண்டியதும் கும்மிருட்டு. மழை சற்றுப் பலமாகத் துமிக்கத் தொடங்கியது.

திடீரென்று 'ஐயோ' என்று கத்தினாள் ரதினி.

கஜன் பரபரப்புடன் ரதினி நிற்கும் இடத்திற்கு ஓடி வந்தான்.

நாலைந்து டோச் லைட்டுக்களுடன் பலர் ஓடி வந்தனர். கஜனும் ரதினியும் நின்ற நிலை அங்கு வந்தவர்களுக்கு சந்தேகத்தைக் கொடுத்தது.

சண்டியன் பொன்னையா ருத்திர மூர்த்தியானார்.

"டேய் ராஸ்கல் என்ன துணிவிருந்தால் என்ரை பிள்ளையோடை சேட்டை விடுவாய்" என்றவர் கஜனின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு சனசமூக நிலைய முன்றலுக்கு வந்தார்.

கூடியிருந்தோர் மத்தியில் பரபரப்பு, பொன்னையா இழுத்துக் கொண்டு வந்த கஜனை அந்த வாகை மரத்தில் கட்டிவிட்டுக் கத்தினார்.

"டேய் உனக்கு இந்த வயதிலை பெம்பிளை வேணுமோடா. கோத்தை ஆடின ஆட்டத்திலும் பார்க்கக் கூட ஆடுவாய் போல கிடக்கு."

"இப்ப என்ன நடந்திட்டுதெண்டு கத்துறாய். நடந்தது என்னெண்டு உன்ரை மேளைக்கேள்"

ரதினி விக்கி விக்கி அழுதாள்.

"உவன் கையிலை பிடிச்சு இழுத்துப் போட்டானோ…?" செல்லம்மா கேட்டாள்.

“இருக்காது. ஏனெண்டால் சண்டித்தனம் கதைக்கிறான்” என்றாள் பார்வதி.

பொன்னையாவுக்கு எதிராகவோ, சார்பாகவோ எவரும் கதைப்பதில்லை. சரியான குடிகாரன். அத்துடன் தேவையில்லாத சண்டித்தனங்களில் ஈடுபடுபவன் அதனால் ஊரவர்கள் அவனை ஒதுக்கி வைத்திருந்தனர். அதை வாய்ப்பாகக் கொண்டு அவன் அளவுக்கு மீறிய நடவடிக்கைகளில் ஈடுபடுவதுண்டு.

மகனை மரத்துடன் பொன்னையா கட்டியதும் கொதித்தெழுந்தாள் பூமணி. அவள் கதைப்பதற்காக வாயைத்திறக்கப் பொன்னையா கெட்ட வார்த்தைகளைப் பிரயோகித்தான், “எடி.எடி. உன்னைப் பற்றி எனக்குத் தெரியும். இப்பவும் உடையாற்றை சின்னராசன் உன்ர முந்தானைக்கைதானே இருக்கிறான். அவன்ரை குணம் முழுக்க உன்ரை மோனிட்டைக் கிடக்கு...”

பூமணிக்கு உடல் கூசியது. எதுவும் பேசாமல் வாகை மரத்தில் கட்டப்பட்டிருந்த தனது மகனை அவிழ்த்தாள்.

வீட்டுக்கு வந்த கஜன் விக்கி விசும்பி அழுதான். அவனால் அந்தச் சம்பவத்தை மறக்க முடியவில்லை. அன்று பிடித்ததுதான் அந்த வெளிநாட்டுப் பைத்தியம்.

கஜன் ஒரு ரோசக்காரன். சங்கரப்பிள்ளை அடிக்கடி கூறுவார், “என்ரை அப்புமாதிரித்தான் கஜனும். அவனுக்கு வாற கோபமும் பிடிவாதமும் அப்புவைப் போலத்தான்” என்பார்.

அந்த வாகை மரத்தைப் பார்த்ததும் பூமணியின் கண்கள் நிரம்பின. பெருமூச்சு விட்டபடி நடந்தாள்.

எந்தப் பொன்னையாவை ஜென்ம விரோதியெண்டு கஜன் நினைக்கிறானோ அவனின் மகனை எப்பிடி மச்சான் என்று ஏற்பான்?

பூமணி மெதுவாக நடந்து சென்று வீட்டுப் படலையைத் திறந்தாள். முற்றத்தில் சைக்கிள் ஒன்று நின்றது.

''யாராக இருக்கும்..?'' என்று உள்ளே சென்றாள். அங்கு அவள் கண்ட காட்சி அவளைத் திகிலடைய வைத்தது, ''அப்பனே பிள்ளையாரே'' என அவள் வாய் முணுமுணுத்தது.

# 09

பவித்திரா நிர்மலனின் சேட்டைப் பிடித்து இழுத்தாள். அது 'சர்' றென்று கிழிந்து அவளது கையோடு வந்தது.

பூமணிக்கு அவளை அடித்துக் கொல்ல வேண்டும் போல் இருந்தது. அந்த நினைவு ஒரு கணம் தான். மறுகணம் அது அழுகையாகப் பீறிட்டு வெடித்தது.

''நீ எங்கை தம்பி வந்து இவளிட்டை மாட்டுப்பட்டனீர்'' குரல் தழுதழுக்கக் கேட்டாள்.

நிர்மலனால் உடனே பதில் சொல்ல முடியவில்லை. அவன் ஒரு கணம் தடுமாறிப் போனான். என்றாலும் சமாளித்துக் கொண்டு ''வீட்டை போனனான். ஏதோ பலத்த சத்தம் கேட்டது. அதுதான் ஓடி வந்தனான்'' வேறு வழியில்லாததால் பொய்யைச் சொன்னான் நிர்மலன்.

“கடவுளே இவளின்ரை அட்டகாசங்களைத் தாங்கேலாதே. ஐயோ! நான் ஆருக்கு என்ன தீங்கு செய்தனான். அந்தாள் மிதிச்ச இடத்துப்புல்லும் சாகாதே. அப்பிடிப்பட்ட மனிசனுக்குப் பிள்ளையாய்ப் பிறந்து எங்களையெல்லாம் ஆட்டுகிறாள்.” பூமணி ஒப்பாரி வைத்தாள்.

பவித்திரா கையில் இருந்த நிர்மலனின் சேட்டின் துண்டை இரண்டு கைகளாலும் விரித்துத் தூக்கிப் பார்த்து விட்டுச் சிரித்தாள். பின் அதைத் தனது சட்டையின் நெஞ்சுப் பகுதிக்குள் செருகினாள்.

திகிலடைந்திருந்த நிர்மலனுக்கு கொஞ்சம் நிம்மதி கிடைத்தது. “நான் போயிட்டு வாறன் அன்றி” என்றான்.

ஒரு வழியில் அவன் பூமணிக்கு மருமகன். சங்கரப்பிள்ளையின் தாயின் சகோதரியின் மகள் தான் நிர்மலனின் தாய். என்றாலும் அவனை தனது மருமகன் என்ற ஸ்தானத்தில் வைத்துப் பார்க்க பூமணிக்கு விருப்பமில்லை.

“இந்தக் கோலத்திலை எப்படித் தம்பி ரோட்டிலை போகப் போறாய்” என்று கவலையோடு கேட்டாள் பூமணி.

‘பிரச்சினை இல்லை நான் போயிடுவன்’ என்றான் நிர்மலன்.

பவித்திரா இப்படிச் செய்வாளெண்று அவன் சற்றும் எதிர் பார்க்கவில்லை. அவனோடு கதிரையில் இருந்து கதைத்தவள் திடீரென்று எழுந்து அவனை நோக்கி ஓடி வந்தாள். அவன் தன்னைச் சுதாகரிக்கு முன்பு திடீரென்று அவனைக் கட்டி அணைத்தாள். அவனின் கன்னங்களில் சூடான மூச்சுக் காற்றுப்பட்டது.

“இதென்ன பவித்திரா என்னை விடு” என்பதற்குள்,

‘‘விடமாட்டன் விடமாட்டன் இண்டைக்கு வசமாய் வந்து அம்பிட்டுட்டீர்’’ என்றவாறு அவனின் கன்னத்தில் முத்தமிட்டு விட்டுச் சிரித்தாள்.

‘‘சீ… எவ்வளவு மிருதுவானவள். தலை நிமிர்த்திப் பார்க்கவே தவம் செய்ய வேண்டும். உண்மையில் இவளுக்கு விசர் தான்’’ என்று முடிவு கட்டினான் நிர்மலன்.

‘‘என்ன தம்பி யோசிக்கிறீர்…’’

‘‘ஒண்டுமில்லை காலம் தாழ்த்தாமல் நல்லதொரு டொக்டரிட்டைக் காட்டுங்கோ’’ என்றான். அதைச் சொல்லும் போது அவனது குரல் கரகரத்ததைப் பூமணி கண்டு கொண்டாள்.

‘‘காட்டத்தான் வேணும்..’’

பவித்திரா கலகலவென்று சிரித்தாள். பூமணிக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. துயரத்துடன் நிர்மலன் பவித்திராவைப் பார்த்தான். அவள் கண் சிமிட்டினாள்.

பொங்கி வந்த துயரத்திலும் அவளது செய்கை நிர்மலனுக்குச் சிரிப்பை வரவழைத்தது.

நிர்மலன் பவித்திராவின் வீட்டுப் படலையைச் சாத்திவிட்டு சைக்கிளில் ஏறினான். அப்பொழுது சைக்கிளில் நிரூமா வந்தாள்.

நிரூமாவைக் கண்டதும் நிர்மலனுக்கு ஒரு மாதிரியாக இருந்தது. அவன் மாணவர்களை விட்டுப் பிரியும் போது, நிரூமா பார்த்த பார்வை அவ்வளவு சரியில்லை. அதனால் அவளைக் காணாதது போல் சென்றான்.

“நிம்” நிருமா அழைத்தாள்.

சைக்கிளை ஸ்லோப் பண்ணினான் நிர்மலன்.

“பவித்திராவைப் பார்த்திட்டுப் போறியளோ...” நிர்மலன் எதுவும் பேசவில்லை.

“உதென்ன சேட் கிழிஞ்சிருக்கு...”

நிர்மலனுக்கு என்ன பதில் சொல்வதென்று புரியவில்லை. அவளே தொடர்ந்து சொன்னாள். “பவித்திரா விசரிலை கிழிச்சிருப்பாள்.”

அவன் நிமிர்ந்து பார்த்தான். அவள் கேலியாகச் சிரிப்பது போலிருந்தது.

அவன் அதற்கும் ஒன்றும் பேசவில்லை.

“ஏன் உந்த விசரைச் சுத்திக் கொண்டு திரியுறியள். வீணாய் உங்களையும் குழப்பி படிப்பையும் பாழாக்குறியள். உங்கடை அக்கா கலியாணம் ஆகாமல் இருக்கிறா. அப்பாவும் நோயாளியாகி விட்டார். இனி அவராலை ஏலாது. படிச்சு ஒரு நல்ல நிலைக்கு வந்தால் பத்து இருபது இலட்சம் வாங்கி அக்காவையும் கரை சேர்க்கலாம்.

நிர்மலனால் கதைக்க முடியவில்லை.

“இப்ப நீங்கள் முந்தின மாதிரி இல்லை. முந்தியெண்டால் உங்களிட்டை நோட்சே வாங்க முடியாது. இப்ப உங்கடை நோட்ஸ் கொப்பி தேடுவாரற்றுப் பாடசாலை மேசையளிலை கிடக்கு” என்றவள் ஒரு கொப்பியை எடுத்துக் காட்டினாள்.

நிர்மலனுக்குக் குழப்பமாக இருந்தது. கொப்பிக்கு அழகான உறை இடப்பட்டிருந்தது. முன்பக்கத்தில் ரஜினியும் நக்மாவும் இறுக்கக் கட்டித் தழுவிக் கொண்டு நின்றனர். நிர்மலன் அனேகமாக மாதக் கலண்டர் பேப்பரில் அல்லது ஏதாவது ஒரு செய்தித்தாள் பேப்பரால் தான் உறை போடுவான்.

அவளது குழப்பத்தை உணர்ந்த நிருமா சொன்னாள், உங்கடை உறைக்கு மேல்தான் இது போட்டிருக்கு. என்னை நினைக்கிறத்திற்காக.

அவளது வார்த்தைகள் அவனை மேலும் குழப்பின. சமீபகாலமாக அவள் அவனைச் சுற்றிச் சுற்றி வருகிறாள். இரட்டை அர்த்தத்தில் கதைக்கிறாள். தன்னுடைய விருப்பத்தை மறைமுகமாக வெளிப்படுத்திய சந்தர்ப்பங்களில் அவன் அசட்டை செய்ததால் இப்ப நேரடியாகக் கதைக்கிறாள். அது அவனுக்கு ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கிறது.

‘‘எனக்குத் தெரியும் உங்களுக்கு பவித்திராவிலை தான் விருப்பம். ஆனால் அவள் உங்களை விரும்புவாளே? சரி அவள் தான் விரும்பினாலும் தமையன்மார் விடுவினையோ..? அண்டைக்கு கனடாவிலை இருந்து பெண் பார்க்க வந்தவை. தற்செயலாய் அது குழம்பினாலும் தமையன் வந்து கனடாவுக்குக் கூட்டிக் கொண்டு போய் வைத்தியம் செய்தால் என்ன செய்வியள்..?’’

அப்பொழுது தான் பிரச்சினை இப்படியும் மாறலாம் என்ற நினைவு அவனுக்கு வந்தது.

‘‘உண்மையைச் சொல்லுங்கோ நீங்கள் அவளை விரும்புறியளே..?’’

சிறிது நேரம் யோசித்தான் நிர்மலன். முதலில் அவன் நிருமாவிடம் இருந்து தப்ப வேண்டும் அதற்காக ஒப்புக் கொண்டால் நல்லது என்று நினைத்தான்.

“நான் அவளை விரும்புறன். என்ரை உயிரே அவள்தான்…”

நிருமா இடிந்து போனாள். இவ்வளவு நாளும் இருவருக்கும் இடையே ஏதாவது தொடர்பு இருக்கலாம் என்ற ஒரு ஊகம் இருந்ததே தவிர உண்மை நிலை தெரிந்ததால் சற்றுத் தடுமாறிப் போனாள் நிருமா. கண்கள் கலங்கி குரல் அடைத்தது.

“எனக்கு பவித்திரா என்றால் உயிர். ஒவ்வொருத்தருக்கும் இறைவன் நல்லொரு வாழ்க்கையை அமைச்சு வைத்திருக்கிறான். அவன் அமைச்சபடி தான் எல்லாம் நடக்கும். நான் கலியாணம் கட்டினாப் பிறகு மனைவிக்கு விசர் வந்திட்டு தெண்டால் கலைக்க முடியுமே..?”

நிருமா எதுவும் பேசவில்லை. கையில் இருந்த கொப்பியை நீட்டினாள். அதை நிர்மலன் வாங்கி அதன் மீது போடப்பட்டிருந்த உறையைக் கழற்றி கசக்கி எறிந்தான். பின், “நிருமா என்னை மன்னிச்சுக் கொள். பவித்திராவை நினைத்த என்னாலை வேறை எந்தப் பெண்ணையும் நினைக்க முடியவில்லை” என்றான்.

“அவள் உங்களை விரும்புறாளா..?” நிருமா கேட்டாள்.

ஒரு கணம் சிந்தித்தான். பிறகு, “தெரியாது” என்றான்.

“அப்ப நான் காத்திருக்கலாம்”

“சீச்சீ..” அவசரமாக மறுத்தான்.

நிருமாவுக்கு அவமானமாகவும் துக்கமாகவும் இருந்தது. மனதில் தேங்கி நின்று தினமும் அல்லல் கொடுத்த அந்த ஆசையை அவள் வெக்கத்தை விட்டு துணிந்து கேட்டபோதும், நிர்மலன் அதை அசட்டை செய்தது அவளுக்கு வேதனையாக இருந்தது. கண்கள் நிரம்பி வழிந்தன. எதுவும் பேசாமல் பல்லைக்கடித்தபடி சைக்கிளை மிதித்தாள். நிர்மலன் வீட்டுக்கு வந்து கொப்பியை மேசையில் போட்டபோது அக்கொப்பியிலிருந்து ஒரு என்வலப் கீழே விழுந்தது.

நிர்மலன் அதை எடுத்தான். அது கனத்தது. குறைந்தது ஏழு அல்லது எட்டு ஒற்றையாவது இருக்கும். கையில் அதை வைத்தபடி சில கணங்கள் யோசித்தான். பின் அதைப் பிரித்துப் பார்த்தான்.

“என் அன்புக்கினிய நிர்மலனுக்கு....” மேலே அவன் வாசிக்கவில்லை. அவளை நினைக்கப் பாவமாக இருந்தது. என்ன செய்வது மனம் விரும்பாத ஒன்றை எப்படிச் செய்வது...என்று சிந்தித்தான் நிர்மலன்.

# 10

நிர்மலனுக்கு அக்கடிதத்தைத் தொடர்ந்து படிக்க விருப்பமில்லை. எனினும் மேலோட்டமாக வாசித்தான்.

என் அன்புக்கினிய, “நிர்மலனுக்கு நான் இங்கே பிறந்து வளரவில்லை. எனது பிறப்பு வளர்ப்பெல்லாம் கொழும்பில்தான். அப்பா பென்ஸனாகி ஊரோடு வரும்போது எம்மையும் இங்கே அழைத்து வந்தார். ஆரம்பத்தில் இந்த ஊருக்கு வரவே எனக்குப் பிடிக்கவில்லை. வந்த பின்பு இந்த ஊர் முற்றாக வெறுத்து விட்டது. நவீன

வசதிகளுடன் கொழும்பில் வாழ்ந்த நான் எந்த வசதிகளும் இல்லாத இந்த இருண்ட பூமியில் வாழ முடியாது தவித்தேன். அப்படி இருக்கும் போது தான் ஏ.எல். கற்பதற்காக நான் பாடசாலையில் சேர்ந்தேன். நான் வந்த முதல் நாள் உங்களுக்கு ஞாபகம் இருக்கா? எனது கொப்பிகள், பேர்ஸ் என்பவற்றைக் காணவில்லை. யாரோ எம்மோடு படிப்பவர்கள் விளையாட்டாக அவற்றை எடுத்து மறைத்து விட்டனர். பாட ஆசிரியர் வகுப்பிற்குள் வந்து விட்டார். எழுதுவதற்குக் கொப்பிகள் எதுவும் இல்லாத நிலையில் தவித்துக் கொண்டிருந்த என்னுடைய நிலையை அறிந்து எனக்கு ஆசிரியருக்குத் தெரியாமல் கொப்பி தந்தீர்கள். எனக்குப் பயம் என்றாலும் வேறு வழியின்றிப் பெற்றுக் கொண்டேன்.

வகுப்பு முடிந்த பின்பு எல்லா மாணவர்களையும் நீங்கள் ஏசினீர்கள், "ஒரு மாணவிக்கு இப்படிச் செய்யலாமா? அவள் ஆசிரியர் கொடுத்த நோட்சை எப்படி எழுதுவது? எதற்கும் ஒரு அளவு வேண்டும்..." என்று கொதித்தெழுந்தீர்கள். அதன் பின் மாணவர்கள் உங்கள் பெயரைச் சொல்லிக் கேலி செய்தனர். அன்று நீங்கள் உங்கள் கொப்பியைத் தரவில்லை. உங்கள் இதயத்தைத் தந்ததாகவே நான் நினைத்திருந்தேன்.

ஆனால் உங்கள் போக்கு திசை மாறிச் செல்வது போல் எனக்குப்பட்டது. நீங்கள் என்னைவிட்டு விலகிச் செல்வதோடு மட்டும் நில்லாது இன்னொருத்தியின் பிடியில் சிக்கி விடுவீர்களோ என்ற பயம் என் நெஞ்சை உலுப்புகிறது.

அன்பே நான் என்ன அழகில்லாதவளா? அந்தஸ்தில் குறைந்தவளா? இல்லை பண்பில்லாதவளா...? ஏன் என்னைக் கண்டதும் விலகிச் செல்கிறீர்கள்.

நிர்மலன் பெருமூச்சு விட்டான். அழகும் அந்தஸ்தும் பண்புமா காதலை உருவாக்குகிறது. காதலுக்கு மனப் பொருத்தம் வேண்டும். உண்மையில் நிருமா பவித்திராவைவிட அழகானவள். பணக்காரி ஆனால் என்ன செய்வது என்னுடைய மனம் பவித்திராவைத் தானே விரும்புகின்றது என்று நினைத்துக் கவலைப்பட்டான். தொடர்ந்து அவனால் அக்கடிதத்தைப் படிக்க முடியவில்லை.

தான் பாடசாலையில் தவறவிட்டு விட்டு வந்த கொப்பியை அவள் எடுத்து அழகாக உறை போட்டுக் கொண்டு வந்து அவள் கொடுக்க நான் அதை வாங்கிஅவள் முன்னாலேயே போட்ட உறையைக் கழற்றி கசக்கி எறிந்தமையால் அவள் எவ்வளவு வேதனைப்பட்டிருப்பாள். அற்லிஸ்ற் நான் ஒரு தாங்ஸ் கூடச் சொல்லவில்லையெ என எண்ணிக் கவலைப்பட்டான். அவனுக்குத் தன் மீது கோபங் கோபமாக வந்தது. பிடிக்காவிட்டால் வீட்டில் வந்து கழற்றியிருக்கலாம். அதை நினைக்க அவனுக்கு வேதனையாக இருந்தது. கட்டாயம் நிருமாவிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.

கதிரையில் இருந்த பவித்திரா திடீரென ஓடி வந்து அவனைக் கட்டியணைத்தாள். அதை அவன் எதிர்பார்க்கவில்லை. வரவர அவளது பிடி இறுகியது. நிர்மலன் பயத்துடன் அவளின் பிடியில் இருந்து விடுபட முயன்றான். முடியவில்லை. அவள் அவனைக் கட்டியணைத்து முத்தமிட்டாள். ஒரு முறையல்ல பல முறை. அவன் திகைத்து திகிலடைந்த போது அவனது கன்னத்தில் ஓங்கி அடித்து அவனது சேட்டையும் கிழித்தாள்.

இப்படி ஏன் பவித்திரா நடந்து கொண்டாள். அமைதியான சுபாவமும் மென்மையான நடையும் கொண்டவள் எப்படி மிருகமாக மாறினாள். நான் அவளை விரும்புவது பிழையோ இப்பவே இப்படி நடப்பவள் பிற்காலத்தில் விசரில் என்னென்ன செய்வாளோ..?

சில காலங்களுக்கு முன்பு மனநோயாளியான ஒரு பெண் தனது குழந்தைகள் மூவரை கிணற்றில் தூக்கிப் போட்டுக் கொன்றதாக அவன் பத்திரிகையில் படித்திருந்தான். அதை நினைக்க அவனுக்குப் பயமாக இருந்தது.

ஆறு மாதங்களுக்கு முன்பு பவித்திராவுக்கு அவன் கடிதம் கொடுத்த சம்பவம் நினைவுக்கு வந்தது.

பவித்திராவுக்கு அப்போது வருத்தம் இல்லை. அழகு தேவதையாக பாடசாலையில் பவனி வந்தாள். அவளது நடை உடை பாவனையாவும் மாணவர்களைக் கிறங்கச் செய்யும். அவள் ஒரு வார்த்தை கதைக்க மாட்டாளா என்று மாணவர்கள் பலர் ஏங்கினர்.

அவள் நிர்மலனைச் சுற்றிச் சுற்றி வந்தாள். அவனிடம் பாடம் சம்பந்தமான சந்தேகங்களை அடிக்கடி கேட்டாள். கொப்பி கேட்பாள். அதனால் மற்றைய மாணவர்களுக்கும் கொஞ்சம் பொறாமை. நிர்மலன் தனது வீட்டு நிலமை கருதி படிப்பில் கவனம் செலுத்தினான். ஆனால் நாட்செல்லச் செல்ல அவளது இனிமையான வார்த்தைகளை அவனது மனம் அசை போடத் தொடங்கியது. நாட் செல்லச் செல்ல அவளின் நட்பு அவனுக்குத் தேவையாக இருந்தது. அவள் தற்செயலாகப் பாடசாலைக்கு வராவிட்டால் உயிரே போய்விடும் போல் இருந்தது.

நோட்ஸ் கொப்பி கேட்பதும் தனக்கு இருக்கும் பாடம் சம்பந்தமான சந்தேகங்களைக் கேட்பதைத் தவிர அவள் வேறு எதுவும் கதைப்பதில்லை. அதுகும் பாடசாலையில் தான். வேறு இடங்களில் கண்டால் அவனை அவள் தெரிந்ததாகக் கூடக் காட்டிக் கொள்வதில்லை.

இதனால் மனம் நொந்த நிர்மலன் தனது நிலையை விளக்கி ஒரு கடிதம் எழுதினான். கடிதம் எழுதிப் பல நாளாகியும் அதை அவளுக்குக் கொடுக்கப் பயமாக இருந்தது.

ஒரு நாள் துணிந்து தனது கொப்பிக்குள் அக் கடிதத்தை வைத்துவிட்டான். அன்று முழுவதும் அவனது மனம் தவித்தது. மறுநாள் அவள் அவனது கொப்பியைத் திருப்பிக் கொடுத்தாள். அவனால் நிமிர்ந்து அவளின் முகத்தைப் பார்க்க முடியவில்லை.

பயம் வெட்கம் உடல் நடுங்கியது.

வீட்டுக்கு வந்து கொப்பியைத் திறந்து பார்த்தான். அவள் தனது விருப்பத்தை எழுதியிருப்பாள் என்று நினைத்தான். ஒவ்வொரு ஒற்றையாகப் புரட்டிப் புரட்டிப் பார்த்தான். அவனுக்கு ஏமாற்றமாக இருந்தது. அவன் கொடுத்த கடிதம் அவனது கொப்பிக்குள் இருந்தது.

முன்பொருமுறை அவள் கொப்பியை வாங்கிவிட்டு திருப்பிக் கொடுத்த போது கொப்பியின் முன் அட்டையில் அழகான இரண்டு கிளிகள் சோடியாக இருந்து கதைப்பதைப் போன்றதொரு படம் வரைந்திருந்தாள். அது மிகவும் அழகாக இருந்தது.

அதை அவன் பௌத்திரமாக பொக்கிசம் போல் பாதுகாத்து வந்தான். அந்தப் படம் அன்று கிழித்தெடுக்கப்பட்டிருந்தது. அவனுக்கு அது மிகவும் வேதனையாகவும் வெட்கமாகவும் இருந்தது. எப்படிப் பாடசாலைக்குப் போய் அவளின் முகத்தில் விழிப்பது என்று நினைத்து அவன் இரண்டு நாட்கள் பாடசாலைக்குச் செல்லவில்லை.

மூன்றாம் நாள் பாடசாலைக்கு அவன் சென்றபோது பவித்திரா அவனைப் பார்த்து வழக்கம் போல் சிரித்தாள். வழமை போல் நடந்து கொண்டாள். அது அவனுக்குக் குழப்பமாக இருந்தது. அன்றும் பாடம்

சம்பந்தமான சந்தேகங்களைக் கேட்டாள். அவனால் அவளைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

இப்பொழுது குடும்பநிலை மிகவும் மோசமாக இருக்கிறது. அதை நினைத்துக் கல்வி கற்பதை விட்டு விட்டு காதலில் இறங்கியது எவ்வளவு பிழை என்று நினைத்தான். இனிமேல் பவித்திராவோடு கதைக்கக்கூடாது. அவளை நினைக்கக் கூடாது என்று மனதுள் திட்டமிட்ட போதும் அவனது மனம் கட்டுப்படமறுத்துக் காட்டாறு போல் பொங்கிப் பெருகி தறிகெட்டு ஓடியது.

முன்பு பவித்திரா மட்டும் தான் அவனது மனதைக் குழப்பினாள். இன்று நிருமாவும் அவளோடு சேர்ந்து கொண்டாள்.

அவளை இது நாள் வரையில் ஏறெடுத்துக் கூடப்பார்க்க அவனுக்கு விருப்பமில்லை. ஆனால் இன்று அவள் கொடுத்த கடிதத்தை வாசித்துவிட்டு அவளுக்காகப் பரிதாபப்பட்டான். அவளுடைய கல்வி எதிர்காலம் யாவும் தன்னால் பாதிக்கப்பட்டு விடுமோ என அஞ்சினான்.

அப்பொழுது அவனுடன் படிக்கும் இரகுநாதன் அவசரமாக வந்தான்.

“மச்சான் டேய் நிருமாவை வழிலை கண்டனான். அழுது கொண்டு போறாள். என்னைக் கண்டுட்டு இரகு நாளைக்கு என்ர செத்த வீடு அதுக்கு வா’’ என்று சொல்லிட்டுப் போறாளடா’’ என்றான்.

நிர்மலன் உறைந்து போனான், “இது என்ன கொடுமை?’’ என்று நினைத்தான். அவனின் கண்கள் கலங்கின.

“அவளுக்கு என்னடாப்பா குறை ஏன் இப்பிடிச் சொன்னவள்!’’ என்று கேட்டான் இரகு.

நிர்மலன் எதுவும் பேசவில்லை. அவள் எழுதிய கடிதத்தை எடுத்துக் கொடுத்தான் இரகு. அதைப் பரபரப்புடன் வாசித்தான், ‘‘இஞ்சைபார் இதை வாசி’’ என்று இரகு காட்டிய இடத்தில் இருந்து வாசித்தான் நிர்மலன்.

‘‘அன்பே உங்களை நினைத்த என்னால் வேறு ஒருவரை நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. நிம்மதியாகவும் வாழ முடியாது. எனவே நான் இவ்வுலகைவிட்டுப் போய்விடுவேன். மறுபிறப்பு என்பது உண்மையானால் அதில் சந்திப்போம்..’’

‘‘இப்ப என்ன செய்யிறது….? பதட்டத்துடன் கேட்டான் நிர்மலன்.

# 11

ரகுவிற்கு அதிர்ச்சியாகவும் குழப்பமாகவும் இருந்தது.

‘‘என்னடா யோசித்துக் கொண்டு நிற்கிறாய். என்னடா செய்யலாம்’’ பதட்டத்துடன் கேட்டான் நிர்மலன்.

ரகு நிர்மலனைத் திரும்பிப் பார்த்தான். அவன் முகம் கலவரம் அடைந்திருந்தது. கண்கள் லேசாகச் சிவந்து கலங்கியிருந்தன.

‘‘எனக்கொன்றும் தோன்றேல்லை நிருமா உன்னைக் காதலிப்பாள் எண்டு நான் நினைக்கேல்லை. அதோடை இப்பிடி ஒரு கடிதம் எழுதினது எனக்கு அதிர்ச்சியாய் இருக்கு. பாடசாலையிலை பூனை மாதிரி பதுங்கி இருந்தவள்’’ என்றான்.

“தோற்றத்தைக் கண்டு கணிக்க முடியாது. அவள் இரண்டு மூன்று மாதங்களாய் எனக்கு ஒரே தொந்தரவு. நான் அவளை நினைத்துக்கூடப் பார்க்கேல்லை. சத்தியமாய்ச் சொல்லுறன் நான் அவளை விரும்பவே இல்லை…” அழுதான் நிர்மலன்.

“நானென்ன நீ விரும்பினதென்றா சொல்லுறன். சீ இவள் ஏன் இப்படி ஒரு முடிவை எடுத்தாள்..”

“ஒரு பெண்ணோ அல்லது ஒரு ஆணோ ஒருத்தரை ஒருத்தர் விரும்புறது இயற்கை. அதைக் குறை சொல்ல முடியாது. ஆனால் நான் அவளை விரும்பேல்லையே தானே தன்ரை மனதிலை கற்பனையை உருவாக்கி அதை வளர்த்து விட்டு மற்றவர்கள் மீது பழிகளைப் போட முடியுமே…”

“உன்ரை நிலை எனக்குப் புரியுது. நீ விரும்பேல்லைத் தானே…. பேசாமல் விடு நடக்கிறது நடக்கட்டும்” என்றான் ரகு.

“டேய்.. டேய்.. அப்படிச் சொல்லாதை பாவமடா” கெஞ்சினான் நிர்மலன்.

“இதுக்கு எங்களாலை என்ன செய்ய முடியும். அவளின்ரை சாவைத் தடுக்க ஒரே ஒரு வழி இருக்கு”

“என்னெண்டு சொல்லடா….?” அவசரப்பட்டான் நிர்மலன்.

சிரித்து விட்டுக் கூறினான், “நீ அவளை விரும்புறதாய்ச் சொன்னால் சாகமாட்டாள்.”

அந்த வார்த்தைகள் நிர்மலனுக்குக் கோபத்தை வரவழைத்தது, ‘‘போடா மடையா... நண்பன் என்று கேட்டால்...’’

அவன் வார்த்தையை முடிக்கு முன் ரகு குறுக்கிட்டுச் சொன்னான்டே, ‘‘வறை எந்த வழியும் இல்லை. அவள் எழுதின விதம் அப்பிடி, ‘‘அன்பே உங்களை நினைத்த என்னால் வேறு எவரையும் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. என்றால் என்ன அர்த்தம் அதைவிட மறுபிறவி அது இது என்டெல்லாம் எழுதி இருக்கிறாள்....’’ நிர்மலனுக்கு விசர் பிடித்து விடும் போல் இருந்தது. நேரம் ஆகஆக அவனது மனதைப் பயம் ஆட்கொண்டது.

அவனது பதற்றத்தைக் கண்ட ரகு சொன்னான், இது எங்களுக்கு அப்பாற்பட்ட விசயம் என்னைப் பொறுத்த மட்டிலை நான் இப்படியான காரியங்களிலை ஈடுபடுவது இல்லை. ஏனெண்டால் இப்ப எங்களுக்கு படிக்கிற வயது அந்தந்த வயதிலை அதையதைச் செய்ய வேணும். படிக்கிற நேரத்திலை இப்படியான விசயங்களிலை ஈடுபட்டால் படிப்புக் குழம்பிப் போம். படிக்கிற நீ என்னத்திற்குப் பெண்களோடை பழகினனீ...

‘‘நான் வலியப் போன மாதிரி...’’ என்று நிர்மலன் சொல்லத் தொடங்க அவனைக் கதைக்க விடாமல் தொடர்ந்தான் ரகு, ‘‘நீ வலியப் போனதாய் நான் சொல்லேல்லை. பெண்களின்ரை தொடர்புகளைத் துண்டித்திருக்க வேணுமெண்டு சொல்லுறன். என்னோடையும் சில பெண்கள் கதைக்கத் தான் செய்தனர். ஆனால் நான் இடங்கொடுக்கேல்லை. ஆரம்பத்திலேயே கட் பண்ணீட்டன். காதல் என்பது என்ன என்று சொல்லு பார்ப்பம்...’’ என்று கேட்டு விட்டு பேச்சை நிறுத்திய ரகு நிர்மலனைப் பார்த்தான்.

நிர்மலன் பதில் சொல்லவில்லை. அவன் பதில் சொல்லக் கூடிய நிலையிலும் இல்லை. அவன் மனம் நிருமாவை நினைத்து அல்லற்பட்டுக் கொண்டு இருந்தது.

அவன் பேசாததால் ரகு தொடர்ந்து சொன்னான், "காதலில் தெய்வீகமும் இல்லை. புனிதமும் இல்லை. சும்மாய் வெறும் உடற்கவர்ச்சியும் உணர்வுகளும் தான். ஆனால் வாழ்வில் முக்கிய இடம் வகிப்பது பொருளாதாரம் தான். இளமைக்கால உணர்வுகள் இனிமையானவை. பின் அது கசப்பாகி விடுகிறது. அதை நான் எங்கட வீட்டிலேயே கண்டிருக்கிறன்" என்றான்.

நிர்மலனுக்கு ரகுவின் பேச்சு எரிச்சலைக் கொடுத்தது. எனவே கோபமாகக் கூறினான், "நான் என்ன செய்யலாமெண்டு கேட்கிறன், நீ உபதேசிக்கிறாய்..."

"உன்ரை தவிப்பு எனக்குப் புரியுது. ஆனால் என்னால் என்ன செய்ய முடியும். நீ என்னத்தை எதிர்பார்க்கிறாயெண்டு சொல்லு..."

"அவளைக் காப்பாற்ற வேணும்..."

"எப்பிடிக் காப்பாற்றுவது. நாங்கள் இதைப் பற்றி யாருடனாவது கதைக்க முடியுமா..? கதைத்தால் இந்த விசயம் உங்களுக்கு எப்படித் தெரியும் என்று கேட்பார்கள். பின் அதற்குக் கை, காலெல்லாம் வைத்துக் கதைப்பார்கள். இந்தச் சமூகம் கொடியது. கொடுமையானது."

"எனக்கு விசர் பிடிச்சிடும் போலை கிடக்கு"

"ஒண்டையும் பெரிசாய் யோசிக்காதை. எல்லாவற்றையும் சிம்பிளாய் எடு. அவள் உன்னோடை கதைத்த ஆத்திரத்திலை

உணர்ச்சி மிகுந்து அப்பிடிக் கூறி இருப்பாள். வீட்டை போனதும் மனம் மாறி இருக்கும்.''

''எல்லாப் பெண்களையும் அப்படி நினைக்கேலாது. சிலபேர் சொன்னபடி செய்வினம்..''

''பயப்படாதை அப்படி நடந்தால் எங்களாலை எதுவும் செய்ய முடியாது. உனக்குத் தெரியும் தானே கஜன் அண்ணன்ரை பிரச்சினை. அவர் முரடர் தான். ஆனால் நல்லவர். பிள்ளையார் கோவில் ஆறாம் திருவிழாவன்று சரியான வெளிச்சத்திலை இருந்திட்டுப் போன ரதினி அக்கா இருட்டிலை ஏதோ தட்டுப்பட பயந்து குழற முன்னால் சென்று கொண்டிருந்த கஜன் அண்ணை அந்தக் குரல் கேட்டு ஓடி வந்தவர். பிறகு நடந்ததென்ன…? யோசித்துப்பார்'' நிறுத்தினான் ரகு.

நிர்மலன் உமிழ் நீரை விழுங்கினான். அவனது மனம் நிலை கொள்ளாமல் தவித்தது.

''அதாலை இண்டைக்கு எவ்வளவு பிரச்சினை தெரியுமே… உண்மையில் நடந்தது அது தான். ஆனால் சனம் கஜன் அண்ணை ரதினி அக்காவைக் கட்டிப்பிடிச்சதாலை தான் கத்தினவா எண்டு சொன்னது. இண்டைக்கும் ஊர் முழுக்க அது தான் கதை அப்பிடி இருக்க நாங்கள் அங்கை போகச் சனம் என்ன கதைக்கும்? உண்மையாய் நீ கதைக்கேல்லை. ஏமாற்றேல்லை பிறகேன் பயப்படுகிறாய்…''

''ஒரு மனிச உயிரடா…!''

''ஒத்துக் கொள்றன். மனிச உயிர் பிரச்சினை. இல்லாமல் போயிட்டால் நல்லது. நாங்கள் அங்கை போக ஊர்ச்சனம் என்ன

சொல்லும். அதோடை உந்தக் கடித விசயம் வெளீலை தெரிஞ்சால் பிறகு பேசத் தேவையில்லை.... ஒரு வடு ஏற்பட்டால் இரண்டு மூன்று சந்ததிக்கு அது நீங்காது.''

''என்னாலை உதை ஏற்றுக் கொள்ள முடியாமல் இருக்கு. என்ன பாடுபட்டாவது அவளைக் காப்பாற்றவேணும்..''

''அது தான் உன்னுடைய முடிவெண்டால் போய்க் காப்பாற்று...''

''நீ உதவி செய்ய மாட்டாயா...?''

சில கணங்கள் யோசித்தான். பின், ''நீ நண்பன் என்ற முறையிலை உனக்கு உதவி செய்யத்தான் வேணும் எப்பிடிச் செய்யுறதெண்டு யோசிக்கிறன். என்னைப் பொறுத்த மட்டிலை சக மாணவியாக இருந்தாலும் அவளின்ரை வீட்டை போறதை நான் விரும்பேல்லை. ஒரு நாளைக்குப் போனால் தொடர்ந்தும் போகச் சொல்லும். அதாலை வீண் பிரச்சினையெல்லாம் வரும். இப்ப என்ன சாட்டை வைத்துக் கொண்டு அங்கை போறது''

''அதிபர் வரட்டாம் என்று சொல்லுவம்...''

''பிறகு அதிபரை எப்பிடிச் சமாளிக்கிறது. அந்தாள் ஒரு கொதிபிடிச்ச மனிசன். ஆர் சொல்லியும் கேளாது. அதோடை ஊர்ச்சனத்தின்ரை செல்வாக்கும் இருக்கு.. அந்தாளைச் சமாளிக்கிறது கஷ்ரம்... துண்டு கிழிக்கிறன் எண்டு சொல்லும். யோசிச்சுக் கொண்டிருந்தால் சரிவராது. வா போய்ப் பார்ப்பம்'' என்றான் நிர்மலன்.

இருவரும் சைக்கிளில் புறப்பட்டனர். இருவரும் நிருமாவின் வீட்டை நோக்கிச் சென்றனர்.

நிருமாவின் வீட்டுப் படலையில் அவளின் தந்தை நின்று கொண்டிருந்தார். அவர் இவர்களைக் கண்டதும் சிரித்தார். இருவரும் பதிலுக்குச் சிரித்து விட்டு அவரைக் கடந்து சென்றனர்.

ரகு தொடர்ந்து சென்றான். நிர்மலன் சிறிது தூரம் சென்று திரும்பி வந்து, ‘‘ஐயா, நிருமாவிடம் ஒரு கொப்பி வாங்க வேண்டும்’’ என்றான்.

‘‘நிருமா இன்னும் வீட்டை வரவில்லை. பவித்திரா வீட்டை போயிட்டு வாறன் என்றவள்’’ என்றார்.

நிர்மலனுக்குச் சற்று ஆறுதலாக இருந்தது.

# 12

பூமியை மெதுவாக இருள் கவ்வ ஆரம்பித்தது. நிர்மலன் ரகுவிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு வீட்டுக்குச் சென்றான். அவனுக்கு நிருமாவைக் காணாமல் செல்வது கலக்கமாக இருந்தது.

‘‘நிருமாவுக்காக இனியும் காத்திருக்க முடியாது நீ போ’’ என்று கண்டிப்புடன் கூறிவிட்டு சென்று விட்டான் ரகு.

ரகுவிற்கு நிர்மலனின் போக்கு ஏற்கனவே பிடிப்பதில்லை. கீழ் வகுப்பில் இருந்து ஒன்றாக இருவரும் படித்து வந்தமையாலும், சிறு வயதிலிருந்தே பிரச்சினைகள் இல்லாமல் இருந்ததாலும் அவன் நட்புக் கொண்டிருந்தான். அனால் ஏ.எல்லுக்கு வந்ததும் நிர்மலனின் போக்கு மாறத் தொடங்கியதை அவதானித்து பல முறை கண்டித்திருக்கிறான்.

அந்த நேரம் சொல்லும் போது கோவில் காளை போல் தலையாட்டும் நிர்மலன் பின் மாறிவிடுவான். இதனால் இருவருக்குமிடையில் வாக்கு வாதங்கள் நடைபெறுவதுண்டு.

ரகு நிர்மலனுக்கு எதிர்மாறானவன். நிர்மலனின் மனம் மிகவும் மென்மையானது, இளகியது. ஆனால் ரகுவின் மனம் உறுதியானது. இளகாதது. எனவே ரகு நிர்மலனோடு பழகுவதைக் குறைத்துக் கொண்டான். அவன் அனுபவப்பட்டால் தான் திருந்துவான் என நினைத்து பிரிந்துவிட்டான். அன்று தற்செயலாக வழியில் நிரூமா கண்டு சொன்னதை, தனது சக மாணவன் என்ற ரீதியில் தான் சொல்ல வந்தான்.

பிள்ளையார் கோவிலின் வடக்குப் புறமாகச் செல்லும் வீதியில் வந்த ரகு, இரண்டு நாள் கழிய பிள்ளையார் கொடியேற இருப்பதால் கோவில் நிலைவரத்தை அறிவோம் என்று கோவிலுக்குச் சென்றான்.

கோவிலின் தம்பமண்டபத்தில் நிரூமா இருந்தாள். பூசை முடிந்து, எல்லோரும் சென்றுவிட்டனர். குருக்கள் உற்சவ காலத்துக்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்ததால் கோவில் திறக்கப்பட்டிருந்தது. சேட்டைக் கழற்றி சைக்கிளில் கொளுவி விட்டு கோவிலின் உள்ளே சென்ற ரகு,

‘‘நிரூமா’’ என்றான்.

நிரூமா திடுக்கிட்டுக் கண்களைத் திறந்தாள். எதிரே ரகு நிற்பதைக் கண்டதும் எழுந்தாள். கைக்குட்டையால் முகத்தைத் துடைத்து விட்டு, மூக்கை உறிஞ்சினாள்.

‘‘இருட்டிற்று வீட்டுக்குப் போகவில்லையா..?’’

நிரூமா பேசாமல் நின்றாள்.

“கேவியூ நேரம். ஏன் நிற்கிறீர் போம்...” குரல் சற்று அதட்டலாக இருந்தது.

நிரூமா ரகுவை ஏறிட்டு நோக்கினாள். அவளின் முகம் வீங்கிக் கறுத்து இருந்தது. கண்கள் சிவந்திருந்தன.

ஒரு கணம் ரகு அவளுக்காகப் பரிதாபப்பட்டான்.

“நான் அடுத்தவர்களின் பிரச்சினைகளில் தலையிடுவதில்லை. என்றாலும் நீர் வழியில் கூறியதை நண்பன் என்ற ரீதியில் நிர்மலனுக்குச் சொன்னனான்.”

நிரூமா விம்மினாள். கண்ணீர் பெருகியது. இந்தக் கண்ணீர் பெண்களுக்கு எங்கே இருந்து ஊறுகிறது என்று நினைத்தான் ரகு.

“அங்கை போனாப் பிறகு தான் பிரச்சினையின் முழு வடிவத்தையும் அறிந்து கொள்ள முடிஞ்சுது..” என்றவன்.

“அவன் ஏற்கனவே பவித்திராவை விரும்புறான். அவளுக்கு பைத்தியம் பிடிச்சிருக்கு. அதைவிட அவளின்ரை அண்ணன் இந்த விசயத்தை அறிந்தால் கொன்றுபோடுவான். இதுக்குள்ள நீ ஏன் நுழைந்து கரைச்சல் குடுக்கிறாய். இதுவும் ஒருவகையிலை விபச்சாரம் என்றுதான் நான் சொல்வன். அவன் ஏற்கனவே ஒருத்தியை காதலிச்சு இருக்கிறான். அவனைப் பொறுத்த மட்டிலை அவள் தான் அவன்ரை மனைவி என்று அவன் ஏறிட்டான். அப்பிடி இருக்க இன்னொருத்தியின் புருஷனை நீ விரும்புவது சரியா..?”

நிருமா திகைத்துப் போனாள். ஊமை ரகுவா இப்படிப் பேசுவான். அவனின் வார்த்தைகள் சவக்கு கொண்டு அடிப்பது போல் இருந்தது. அவளின் உடல் கூசியது.

‘‘சரி தெரியாத்தனமாய் விரும்பீட்டாய் எண்டு வைப்பம் உண்மை தெரிஞ்சால் விலக வேண்டியதுதானே…. பிறகென்னத்துக்கு சாகப்போறன் எண்டு வெருட்டுவான்.’’

நிருமாவுக்கு தான் செய்தது தவறு என்று புரிய ஆரம்பித்தது, ‘‘அவர் பவித்திராவைக் காதலிக்கிறாரெண்டு எனக்குத் தெரியாது.’’

ரகு மனதுக்குள் சிரித்துக் கொண்டான். இருவரும் காதலிப்பது வகுப்பு முழுக்க ஓரளவு தெரியும். அப்படி இருக்க ஒன்றாகப் படிக்கிற அவளுக்குத் தெரியாதாம்.

‘‘சரி பரவாயில்லை. இப்ப தெரியும் தானே.. இனி விட்டிடலாம் தானே..’’

‘‘விட்டிடலாம் தான் மனம் கேட்குதில்லை..’’

‘‘மனிஷனுக்கு கட்டுப்பட்டது தான் மனம். மனதைக் கட்டுப்படுத்தாவிட்டால் பயங்கரமான விளைவுகளை ஏற்க வேண்டி வரும்…. காதலில் எனக்கெண்டால் நம்பிக்கையில்லை…’’

‘‘ஏன்’’ என்று கேட்பதைப் போல் தாழ்ந்திருந்த அவள் தலை நிமிர்ந்தது. கண்கள் அவன் முகத்தை நோக்கின.

‘‘என்னுடைய அப்பா அந்தக் காலத்திலை பெரிய காதல் மன்னன். அம்மாவை அவர் மிகத்தீவிரமாகக் காதலித்தாராம். அம்மாவுக்காக

உயிரையே தியாகம் செய்யத்தயாராய் இருந்தாராம். ஆனால் அம்மாவுக்கு இவரிலை விருப்பமில்லை. வகுப்பில் ஒன்றாகப் படித்துக் கொண்டிருந்தவர்கள். அப்பாவின் தீவிர போக்கு அம்மாவைக் கவர்ந்திட்டுது..''

தன்னுடைய குடும்பக் கதையை ஏன் ரகு தனக்கு கூறுகிறான் என்று யோசித்தவாறு நின்றாள் நிரூமா.

''அப்பா பரம ஏழை. எப்படியோ படிச்சு நூறு ரூபா வாத்தி உத்தியோகம் எடுத்திட்டார். ஆனால் அம்மாவின்ரை தகப்பன் பெரிய பணக்காரன். இவையின்ரை காதலை அறிஞ்சு துடிச்சுப் போனார். அம்மாவைச் செய்ய டொக்டர்ஸ், என்ஜினியர்ஸ் எண்டுபலர் வரிசையிலை நிற்க கேவலம் ஒரு சட்டம்பிக்கு என்ர மகளைச் செய்து குடுப்பனோ என்ற சண்டித்தனம் வேறை. அம்மாவுக்கு மாப்பிளை தேடும் படலம் ஆரம்பமானது. எப்படியோ ஒரு டொக்டர் அம்பிட்டுடார். இந்தச் செய்தி அப்பாவுக்குத் தெரிந்ததும் அப்பா அம்மாவைக் கடத்திக் கொண்டு போட்டார். ஆறுமாசம் அஞ்ஞாதவாசம் இருந்தவை. நான் வயித்திலை உருவான பிறகு தான் ஊருக்கு வந்தவையாம்.''

''நேரமாகுது கதைச்சுக் கொண்டு போவம்'' என்றாள் நிரூமா.

''இல்லை.. கதை முடியுது'' என்ற ரகு செருமிவிட்டுச் சொன்னான். ''எனக்குப் பிறகு மூன்று பிள்ளைகள் பிறந்ததோடை அப்பா கஷ்டப்பட்டுப் போனார். அதுவரையும் குடும்பம் நல்ல சந்தோஷமாய் இருந்ததாம். அம்மாவின்ரை தகப்பனும் சரியான பிடிவாதக்காரன். சொத்து முழுவதையும் மற்றப் பிள்ளைகட்கு எழுதிப் போட்டார். காலஞ்செல்ல ஒற்றுமைப்படுவீனம் என்று நினைத்த அப்பாவுக்கு இது

பெரிய ஏமாற்றம். இப்ப அம்மாவுக்கு ஒரே அடிகுத்துத்தான். நெடுக சீதனம் இல்லாமல் வந்தவள் எண்டு பேச்சு..'' பெருமூச்சு விட்டான் ரகு.

''சரி நான் வாறன்'' என்று புறப்பட்டாள் நிரூமா. ''நான் சொல்ல வாறது என்னென்டால் காதல் உண்மையானது என்றால் அப்பா அம்மாவைக் கொடுமைப்படுத்தமாட்டார். வேறு யாராவது அன்போட இருக்கலாம். ஆனால் என்னைப் பொறுத்தமட்டிலை காதல் திருமணங்கள் பெரும்பாலும் வெற்றியடைஞ்சதில்லை. நீ இந்தக் காதலுக்காக உயிரைப் போக்காதை. இந்தச் செய்தியைக் கேட்டு நிர்மலன் திகிலடைந்து போயிருக்கான். அவன்தான் இதுகளையெல்லாம் சொல்லச் சொன்னவன். ப்ளீஸ் உன்ரை முடிவை மாற்று..'' கெஞ்சினான் ரகு.

நிரூமா எதுகும் பேசாமல் நடந்து கொண்டிருந்தாள். ரகு கூறிய வார்த்தைகள் அவளின் காதில் எதிரொலித்தன.

''இதுவும் ஒரு வகையிலை விபச்சாரமெண்டுதான் நான் சொல்லுவன். அவன் ஏற்கனவே ஒருத்தியைக் காதலித்து இருக்கிறான். அவனைப் பொறுத்தமட்டிலை அவள் தான் அவன்ரை மனைவி. அப்படி அவன் ஏறிட்டான். அப்படி இருக்க இன்னொருத்தியின் புருசனை நீ விரும்பிறது சரியா?''

''நிர்மலன் ஒரு மனிச உயிர். என்னாலை சாகப்போகுதடா என்று அழுததாலை தான் நான் இதைச் சொன்னனான். அதுவும் தற்செயலாய்ச் சந்திச்சதாலை இனி உன்ரை விருப்பம். நான் வாறன்'' என்றான்.

நிரூமா நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். வெளியில் எரியும் கற்பூர ஒளியில் அவனது முகம் தெளிவாகத் தெரிந்தது. அதில் எந்தவித மாசு மறுவும் தென்படவில்லை. அவன் விரைவாக நடந்து வந்து சைக்கிளில் இருந்த சேட்டை எடுத்துப் போட்டுவிட்டு சைக்கிளில் ஏறினான்.

நிருமா அவன் செல்வதைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

# 13

பவித்திரா ஹோலில் இருந்த மேசையில் புத்தகத்தை விரித்து வைத்துக் கொண்டு தேனிசை தெரிவுகளைக் கேட்டுக் கொண்டிருந்தாள். தேனிசைத் தெரிவுகள் முடிந்து செய்தி தொடங்கியதும் வானொலியை நிறுத்திவிட்டுச் சாப்பிடுவதற்காகக் குசினிக்குள் சென்றாள். லவன் இன்னும் வீட்டுக்கு வரவில்லை. நாளை மறுதினம் வெள்ளொருவப் பிள்ளையார் கோவில் கொடியேறவுள்ளதால் இளைஞர்களுடன் சேர்ந்து சிரமதான வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தான்.

பவித்திரா இரவு உணவை முடித்துக் கொண்டு தன்னுடைய அறைக்குச் சென்று விளக்கை அணைத்துவிட்டு படுத்து விட்டாள்.

சங்கரப்பிள்ளை முற்றத்தில் ஈசிச் செயரைப் போட்டு விட்டுப் படுத்திருந்தார்.

முன்பென்றால் இரவு எட்டு மணிக்கு ஈசிச் செயரில் படுத்தால் எட்டரைக்கு முன்பு நித்திரையாகி விடுவார். பவித்திரா படித்து முடிந்ததும் வந்து எழுப்புவாள். இப்போது அவருக்கு நித்திரை வருவதேயில்லை.

பிரச்சினைகள் ஏதும் இருப்பின் ஈசிச் செயரில் சங்கரப்பிள்ளை படுத்த பின் பூமணி வந்து அவருக்கு அருகில் இருந்து கதைப்பாள்.

தற்பொழுது ஆறு மாதங்களாய் இருவரும் விடிய விடிய அதில் இருந்து கதைக்கிறார்கள்.

வாயில் புகைத்துக் கொண்டிருந்த சுருட்டை எடுத்து வீசி விட்டு வாய் கொப்பளிக்கும் போது பூமணி வந்து அவருக்கு அருகில் அமர்ந்து கொண்டாள். முன்பென்றால் கதைக்கிறத்துக்கு ஒன்றுமில்லை. பிள்ளைகளின் கடிதம் வந்தால் அடுத்து நாலைந்து நாட்களுக்கு அந்தக் கதை கதைப்பார்கள். ''மத்தியானம் தம்பி வரச் சொல்லிப் போய்க் கதைத்தனான்.''

''என்னவாம்''

நாற்காலியை அவருக்கு மிகவும் அருகில் இழுத்துப் போட்டு விட்டு உட்கார்ந்த பூமணி இரகசியமாகக் காதுக்குள் சொன்னாள், ''அவன் வரப்போறானாம்''

சங்கரப் பிள்ளையின் முகத்திரையில் பல்வேறு விதமான எண்ணங்கள் ஓடிச் சிலிர்த்தன. அவர் அதை எதிர்பார்க்கவில்லை, ''அவன் வந்தால் பிரச்சினையெல்லோ..'' அவர் குரல் பிசிறியது.

''பவித்திரா பொன்னையான்ரை மகன் சூரியோடை காதலெண்டும், அவனைச் செய்யிறத்துக்காக நடிக்கிறாள் எண்டும் சொல்லுறான். அதோடை தான் உங்கை வந்தால் கொலை விழும் எண்டும் சொல்லுறான். எனக்கெண்டால் பயமாய்க் கிடக்கு..''

சங்கரப் பிள்ளை மௌனமாக மனைவி சொல்வதைக் கேட்டுக் கொண்டு இருந்தார், ''அவன் முரடன் பிடிவாதக்காரன். ஆர் சொன்னாலும் கேட்க மாட்டான். தான் நினைச்சதைத்தான் செய்வான். இந்த நிலையிலை அவன் வந்தால் என்ன நடக்கும்'' என்று யோசித்தார்

சங்கரப்பிள்ளை. “முதலிலை எனக்கும் அவளிலை சந்தேகம் இருந்தது. ஆனால் இப்ப பார்க்கப் பயமாய் இருக்கு…”

“இவள் சூரியைக் காதலிக்கிறாள் எண்டு நீா் நினைக்கிறீரே..?”

“நான் நினைக்கேல்லை இந்த ஊர்ச்சனம் தான் கதையைக் கட்டிவிட்டு அவனுக்கும் எழுதியிருக்கு.. எந்தக் குறுக்காலை போவான் எழுதினானோ? தெரியாது அவன் சன்னதமாடுறான்…” என்றாள பூமணி.

“கூடப் படிக்கிறதாலை சூரி இரண்டொருநாள் இஞ்சை வந்து போனது உண்மைதான். இதை எப்பிடி அறியிறது”

“நான் அவளை எத்தினை தரம் கேட்டுப் போட்டன். ஒருக்கால் ஓமெண்டு சொன்னாள். பிறகு அவனுக்கு செருப்பால் அடிப்பன் எண்டாள். காலமை சொல்லுறாள் அப்பிடி ஒரு மாப்பிள்ளை உனக்கு கிடைக்குமோ எண்டு… எதையும் தீர்மானிக்கேலாமல் கிடக்கு..” என்று பெருமூச்சுவிட்டாள் பூமணி.

“நான் விடியப் போய் கஜனுக்கு டெலிபோன் பண்ணிக் கதைக்கட்டே” என்று கேட்டார் சங்கரப்பிள்ளை.

“என்ன கதைக்கப் போறியள்?”

“இப்போதைக்கு இஞ்சை வரவெண்டாமெண்டு சொல்லட்டே” பூமணி விரக்தியாகச் சிரித்தாள். “உங்கட மோனின்ரை குணம் உங்களுக்குத் தெரியாதே..” என்று மீண்டும் சிரித்த அவள் சில கணங்கள் கழித்துச் சொன்னாள், “நீங்கள் காலமை போய்

டெலிபோன்பண்ணிச் சொல்ல அவன் பின்னேரம் இங்கை வந்து நிற்பான்…''

''ம்.. அவன் வாறதும் நல்லது தான். இவளை அவனோடை அனுப்பிவிடும்… வேணுமெண்டால் துணைக்கி நீரும் போம்..''

''அந்தளவிலை என்னிலை வெறுத்துப் போச்சோ….'' கலங்கினாள் பூமணி.

''சீச்சீச் சீ… வெறுப்பில்லையப்பா அவள் தனிய அங்கை போய்க் கஷ்டப்படுவாள்… நீர் போனால் துணையாக இருக்கும். நாலைந்து மாதத்திலை நானும் லவனும் வந்திடுவம்..''

''அப்பிடித்தான் செய்ய வேண்டும். இவளை இஞ்சை வைத்திருக்கேலாது'' என்றாள் பூமணி.

''கஜன் வந்தால் அவனுக்கும் ஒரு பொம்பிளை பார்த்து செய்து வைக்க வேணும்…. ஊருக்க ஆரன் இருக்கினையே…'' என்று கேட்டார் சங்கரப்பிள்ளை.

''ஊருக்கை அவனுக்குச் செய்யிறேல்லையெண்டு நான் தீர்மானிச்சு வைச்சிருக்கின்றன்…. அந்த எழியவன்… குடிகாரன்.. என்ரை பிள்ளையை வாகையோடு கட்டினவன் நாசமாய் போனவன். பிள்ளை பிழை செய்ததெண்டு செய்தவன். ஒரு சனமெண்டாலும் வாய் திறந்து நியாயம் கேட்டுதே.. அப்பிடி இருக்க ஊருக்கை செய்யுறதே ஊருக்கை…'' கொதித் தெழுந்தாள் பூமணி.

“அவன் குடிகாரன் அதோடை சண்டியன். ஆரும் கதைக்கப்போனால் குடிச்சிட்டு கத்தியோடு திரிவான்.”

“அதுக்காக நியாயம் கேட்கக் கூடாதே…?”

“உந்தக் கதையை விடும்… நாளைக்குப் பெரியாஸ்பத்திரியிலை கொண்டு போய்க் காட்டுவம். தருமுவிடம் சொன்னனான் ஓட்டோ கொண்டரும்”

“அவள் வரவேணுமே.. நேற்று ஆஸ்பத்திரிக்கு போவம் எண்டு கேட்டனான். அதுக்கு அவள் எனக்கு என்ன வருத்தம் கிடக்கு ஆஸ்பத்திரிக்குப் போக அப்பாவுக்குத்தான் முட்டு இழுக்குது அவரைக் கொண்டுபோய்க் காட்டு. வாற மாசம் சோதினை நான் படிக்கவேணும் என்றாள். உங்களுடையதுகள் எல்லாம் பிடிச்ச பிடியை விடாதுகள்…. அதுகளோடை நான் பர்றபாடு பிள்ளையாருக்குத்தான் தெரியும்” என்றாள் பூமணி.

“அப்ப என்ன செய்யிறது” கலங்கினார் சங்கரப்பிள்ளை.

“எதுக்கும் கஜன் வரட்டும். நான் காலமை டொக்டர் தியாகரைக் கண்டு கதைச்சனான். பின்னேரம் இல்லாட்டில் விடிய வாறனெண்டவர்” என்றாள் பூமணி.

“நானும் மத்தியானம் டொக்டர் தியாகரைக் கண்டு கதைச்சனான். பரம்பரையில் யாருக்கேன் இப்படி இருந்ததோ என்று கேட்டார்.”

“நீங்கள் என்ன சொன்னீங்கள்”

“என்ரை அம்மான்ரை தாயும் இப்படித்தான் கனத்த நாட்களில் தன்ரை பாட்டிலை கதைப்பா… கத்துவா.. குளறுவா.. பொருட்களை உடைப்பா.. எண்டு சொன்னன். அதுக்கு அவர் சில நோய்கள் பரம்பரையாய் வரும் எண்டும் இதுக்கெண்டு பெரியாஸ்பத்திரிலை ஸ்பெசலிஸ்ட் இருக்கிறாராம். அவரிட்டை காட்டுங்கோ என்றார்’’ என்று சொன்னார் சங்கரப்பிள்ளை.

“அப்ப இவளுக்குப் பரம்பரை நோய்தானோ’’ பூமணிக்கு அளவுக்கு மிஞ்சிய வேதனையாக இருந்தது. ஒரேயொரு பெண் பிள்ளை அதற்கு இப்படியான வருத்தமா.. அவளால் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

“அப்பனே பிள்ளையாரே… உனக்கு நான் என்ன செய்ய வேணுமோ சொல்லு. நான் அதைச் செய்யிறன் என்ரை பிள்ளையைக் குணப்படுத்தி விடு…’’ என்று மனதுள் நினைத்தாள். பொங்கி எழுந்த துயரம் விக்கல் விசும்பலாக மாறியது. அப்பொழுது லவன் கோவிலால் வந்தான். தாய் அழுவதைக் கண்டதும் அவனுக்குத் துக்கமாக இருந்தது. தாயின் அழுகையை மாற்றுவதற்காக, “எழும்பி வந்து சாப்பாட்டைத் தாணை’’ என்று கூறி அவளது கையைப் பிடித்து இழுத்தான். அப்பொழுது கிணற்றடியில் யாரோ குளிக்கும் சத்தம் கேட்டது. பூமணி பரபரப்புடன் மாமரத்தில் கொழுவியிருந்த அரிக்கன்லாம்பைக் கழற்றிக் கொண்டு கிணற்றடிக்குச் சென்றாள். அங்கே பவித்திரா குளித்துக கொண்டிருந்தாள். “என்ரை ஐயோ..’’ பூமணி கத்த சங்கரப்பிள்ளை எழுந்து கிணற்றடியை நோக்கிச் சென்றார்.

# 14

அன்று ஆறாம் திருவிழா. தம்ப மண்டபத்தில் பிரபல தவில் வித்துவான் தெட்சணாமூர்த்தியின் மகன் உதயசங்கரும் நாதஸ்வர வித்துவான் அளவெட்டியூர் சிதம்பரநாதனும் சேபித்துக் கொண்டிருந்தனர்.

மனோ லைட் உரிமையாளர் மனோகரன் சாரத்தை மடித்துக் கையில் தூக்கி வைத்துக் கொண்டு தனது கூலியாட்களை ஏவிக் கொண்டிருந்தார். வீதிகளெங்கும் டியூப்பல்புகள் கட்டப்பட்டன. வாகைமரம் பல்வேறு நிறமின்குமிழ்களால் அலங்கரிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. மனோகரனுக்கு அருகில் காந்தன் நின்று கதைத்துக் கொண்டு நின்றான்.

அப்போது ஒரு ஓட்டோ மெதுவாக வந்து வாகை மரநிழலில் நின்றது. அதன் மேல் பல சூட்கேசுகளும் ட்ரவலிங் பாக்குகளும் இருந்தன.

காந்தன் அதை அவதானிக்க முன் அதிலிருந்து ‘‘காந்தன்’’ என்றவாறு கஜன் இறங்கி வந்து ‘எப்படி சுகமா..?’’ என்று கேட்டுச் சிரித்தான்.

காந்தனுக்கு உடனே அவனை அடையாளம் தெரியவில்லை. சிறிது நேரத்தின் பின், ‘‘கஜன் என்ன சொல்லாமல் கொள்ளாமல் வந்திட்டாய்..’’ என்றான்.

“ஒரு தேவை இருந்தது. அம்மா கோவிலை நிற்பா ஒருக்கால் வரச் சொல்ல முடியுமே” என்று கேட்டான்.

“சரி” என்று காந்தன் புறப்படுமுன் நாலைந்து சிறுவர்கள் கோவிலை நோக்கி ஓடினார்கள்.

“பிறகு சந்திப்பம்” என்றவாறு ஓட்டோவில் ஏறினான் கஜன்.

வாகை மரத்தின் கீழ் குழுமியிருந்த பெண்கள் கண்களால் கதைக்கத் தொடங்கி, ஓட்டோ சென்றதும் பலவிதமான ஊகங்களை வெளிப்படுத்தினர்.

காந்தன் பூமணியைச் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு வந்தான். பின்னால் பவித்திரா ஓட்டமும் நடையுமாக வந்தாள். சங்கரப்பிள்ளை மெதுவாக நடந்து வந்தார். பூமணி வீட்டுக்கு வந்த போது கஜன் ஓட்டோவில் இருந்த பொருட்களை இறக்கி வைத்துவிட்டு ஓட்டோக்காரனுக்கு காசு கொடுத்துக் கொண்டிருந்தான்.

பூமணி வந்து படலைப் பூட்டைத் திறந்து விட்டாள். காந்தனும், கஜனும் பொருட்களைத் தூக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தனர்.

பூமணி விரைவாகச் சென்று ஹோல் கதவைத் திறந்தாள்.

“இப்பவும் தேருக்கும் தீர்த்தத்துக்கும் சக்கரைத் தண்ணீர் வாக்கிறனீங்களே…” கஜன் கேட்டான்.

“ஓம்… இந்த முறை வந்திருக்கிறியள் உங்கடை கணக்கிலை வார்ப்பம்” என்று சிரித்தான் காந்தன்.

சிரித்த கஜன், “முந்தி காங்கேசு பொறுப்பாய் இருந்தது. இப்ப ஆர் பொறுப்பு…?”

“காங்கேசுவுக்குப் பிறகு ஸ்ரீ. இப்ப நாவலர் அதிபர்” என்ற காந்தன், “நான் கேட்டது என்ன மாதிரி” என்றான்.

“செய்தால்ப் போச்சு” என்றான் கஜன்.

பவித்திரா “அண்ணா” என்று அழைத்தபடி ஓடிவந்து அவனைக்கட்டி அணைத்தாள். அவன் அதை எதிர்பார்க்கவில்லை.

“அண்ணை.. அண்ணை.. என்றவாறு அவனை அண்ணாந்து பார்த்தாள்.

அடிக்க வேண்டும் என்ற ஆத்திரத்தோடு வந்த கஜனுக்கு அவளின் அணைப்பும் அன்பான அழைப்பும் சற்று நெகிழ்வைக் கொடுத்தது. அழகான அவள் வதனம் சிறிது வீங்கிக் கறுத்திருந்தது. அழகாக வாரிவிடப்படும் தலை சற்று அலங்கோலமாக இருந்தது. கண்கள் மிரண்டிருந்தன.

“உனக்கு என்னம்மா ஆச்சு” பாசத்துடன் வினாவினான்.

“எனக்கு ஒன்றுமில்லை அண்ணா…” கலகலவெனச் சிரித்த பவித்திரா சொன்னாள், “அம்மா தான் மோசம். நான் எதைச் செய்தாலும் பேசுறா அழுறா… நான் ஒழுங்காய்ப் பாடசாலைக்குப் போறன், படிக்கிறன். நான் தான் இந்த முறையும் முதலாம் பிள்ளை….” சிரித்தாள். கஜன் ஆச்சரியத்தோடு அவளைப் பார்த்தான். அவனால் எதையும் தீர்மானிக்க முடியவில்லை. முழுவிசர் என்று எழுதிய தாயின் முகத்தைப் பார்த்தான். பூமணியும் சற்றுக் கலவரமடைந்திருந்தார்.

“அண்ணா குளிச்சிட்டு வேட்டியைக் கட்டிக் கொண்டு கோவிலுக்கு வாங்கோ. நான் வரேக்கை கொடித்தம்ப பூசை தொடங்கியது.”

பிள்ளை அடுப்பிலை கேத்தில் வைச்சிருக்கிறன். அண்ணாக்குத் தேத்தண்ணி ஊத்தியா’’ என்றாள் பூமணி.

சிணுங்கியவாறு பவித்திரா குசினிக்குள் சென்றாள். கஜன் தாயைப் பார்த்தான். அந்தப் பார்வையின் பொருளை விளங்கிய பூமணி சொன்னாள், “ஒரு நேரம் சுகப்பட்ட மாதிரி இருக்கிறாள். பிறகு கத்துறாள். இருந்து பர்த்தால் தான் தெரியும். டொக்டர் தியாகர் பரம்பரை வருத்தம்’’ என்கிறார்.

“பரம்பரையோ எங்கட பரம்பரையில ஆருக்கன இருக்கு’’

“கொப்பற்ரை பேர்த்தியார் இப்படித்தானாம்’’

அவன் கனடாவில் இருக்கும் போது பவித்திராவுக்கு நோய் என்று எழுதிய பின்பு பேப்பரில் வந்த மனநோய் சம்மந்தமான கட்டுரை ஒன்றை வாசித்து இருக்கிறான். பரம்பரை பரம்பரையாக இந்த நோய் மனிசனைத் தாக்கும் என்று ஆதாரங்களுடன் கட்டுரையாளர் எழுதியிருந்தார்.

பின்பு அவன் இரண்டு மூன்று டொக்டர்களுடன் கலந்தாலோசித்திருக்கிறான். அவர்கள் கேட்ட முதல் கேள்வி பரம்பரையில் யாருக்காவது அந்த நோய் இருக்கா? என்பது தான். பரம்பரையில் யாருக்காவது மனநோய் இருந்தால் அது வரக்கூடிய வாய்ப்பபுப் பெரும்பாலும் உண்டு என்று அந்த டொக்டர்மார் கூறினர்.

அவள் நடிக்கிறாள். அவளைக் கொல்ல வேணும் என்ற நினைவோடு வந்த கஜனுக்குப் பவித்திராவின் நிலை அந்த நினைவை மாற்றி வேதனையைக் கொடுத்தது. என்னுடைய ஒரேயொரு தங்கைக்கு இந்த நோய் வந்து விட்டதே என்று வேதனைப்பட்டான் அவன்.

பவித்திரா தேநீர் தயாரித்துக் கொண்டு வந்து கொடுத்து விட்டு, ‘‘எப்படியண்ணா நான் போட்ட தேநீர்’’ என்ற கேட்டாள்.

‘‘நல்லாய் இருக்கு’’ என்றான் கஜன்.

‘‘போங்கோ நீங்கள் பொய் சொல்லிறியள்….’’ அவனுடைய நெஞ்சில் முகம் புதைத்து சிணுங்கினாள்.

கஜன் கரைந்து போனான். அவனின் கண்ணில் கண்ணீர் சுரந்தது. அவளை நல்ல முறையில் வாழ வைக்க வேண்டும். அவள் கண்கலங்கக் கூடாது என்று நினைத்தான்.

‘‘கெதியாய் குளிச்சிட்டு வாங்கோ… இண்டைக்கு நான் அண்ணா வாங்கி வந்த சேலையைத் தான் கட்ட வேண்டும்’’ என்றவாறு சூட்கேசைத் தூக்கினாள்.

‘‘உதுக்கை இல்லையம்மா.. ட்ரவலிங் பாக்கில் இருக்கு…’’ என்றவன் ட்ரவலிங் பாக்கை எடுத்துத் திறந்தான். அதற்குள் பவித்திரா அதைப் பறித்து சிப்பை இழுத்துவிட்டு உள்ளே கையை வைத்தாள். ‘‘ஒண்டு.. இரண்டு.. அஞ்சு… எத்தனை சீலை அண்ணா வாங்கியந்தனீங்கள்….’’ அவள் முகம் பிரகாசித்தது. கண்கள் ஒளிர்ந்தன.

“எதைக் கட்டுவது... நீங்களே சொல்லுங்கோ...” கையில் சேலைகளை வைத்துக் கொண்டு கேட்டாள்.

“எல்லாம் உனக்குத்தான் நீ விரும்பினதைக் கட்டு....”

“உங்களுக்கு எது பிடிக்கும்...”

“எல்லாம் பிடிச்சதாலை தான் வாங்கியந்தனான்.”

“நீங்கள் எடுத்துத் தாங்கோ...”

வேறு வழியில்லாமல் ஒன்றை எடுத்துக் கொடுத்து விட்டு குளிப்பதற்காக கிணற்றடிக்கு சென்றான். பூமணி அவனைப் பின் தொடர்ந்தாள். கஜன் மனம் மாறி சந்தோஷமாக இருப்பது அவளுக்கு அளவற்ற சந்தோஷத்தைக் கொடுத்த போதும் அவன் மனம் மாறாமல் அப்படியே தொடர்ந்து இருக்க வேண்டும் என்று பிராத்தித்துக் கொண்டாள்.

“தம்பி அவள் இப்பிடித்தான் ஏதாவது ஏறுமாறாக நடந்தால் அவளுக்கு அடிச்சுப் போடாதை. அவளைத் தவமிருந்து பெத்தனான்...”

தாயின் குரலும் கண்ணீரும் கஜனுக்கு வேதனையைக் கொடுத்தது. “அதோடை அவன் சூரிக்கும் ஒண்டும் செய்து போடாதை ஏற்கனவே பிரச்சினைப் பட்டனாங்கள். அதோடை அவனிலை ஒரு பிழையும் இல்லை. இவளுக்கு வருத்தமெண்டு பொடியளோடை இரண்டு, மூன்று தரம் வந்து பார்த்தவன். அவ்வளவு தான். கதைக்கிறதோ, கடிதம் கொடுக்கிறதோ இல்லை. ஊர்ச்சனம் யாரோ உனக்கு பிழையாய் எழுதியிருக்கு...” கஜன் எதுகும் பேசவில்லை. வந்த நிலை வேறு வந்த பின் அவனுள் ஒரு மாற்றம்.

“என்ன தமபி”

“நான் பிரச்சினைக்குப் போகமாட்டேன் அம்மா…” என்றான். பூமணிக்குச் சற்று ஆறுதலாக இருந்தது. அப்போது கிணற்றடிக்குச் சங்கரப்பிள்ளை வந்தார்.

# 15

கஜன் குடும்பத்தினருடன் வெளிக்கிட்டுக் கோவிலை நோக்கிச் சென்றான். அவனது மனதில் பல் வேறு விதமான யோசனைகள். பவித்திரா ஓயாமல் கதைத்துக் கொண்டு வந்தாள். இதனால் பூமணிக்கும், சங்கரப்பிள்ளைக்கும், லவனுக்கும் அவனோடு கதைக்க முடியவில்லை. அது லவனுக்கு எரிச்சலைக் கொடுத்தது.

கஜன் பொறுமையுடன் அவள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் கூறிக் கொண்டு வந்தான். சின்ன வயதிலிருந்தே அவன் அவள் மீது உயிரையே வைத்திருந்தான். அவள் ஓரளவு வயது வந்ததும் எந்த நேரமும் அவனுக்குப் பின்னாலேயே சுற்றிக் கொண்டு திரிந்தாள். இரவில் படுப்பதும் அவனோடு தான். பூமணி அவளைத் தூக்கி வந்து வேறு இடத்தில் படுக்க வைத்தாலும் அவள் சாமத்தில் எழும்பி அவனின் அருகில் சென்று படுத்துவிடுவாள். இது அவன் கனடாவுக்குப் போகும் வரை நீடித்தது.

அவர்கள் சனசமூக நிலையத்திற்கு அருகில் வந்த போது பவித்திரா கேட்டாள், “அண்ணா.. அண்ணா.. நான் ஒண்டு கேட்பன் செய்ய வேணும்..”

“கேள்..”

“கட்டாயம் செய்வன் எண்டு சொன்னால் தான் கேட்பன்..”

சிறுவயதிலிருந்தே அவள் அப்பிடித்தான். அவன் கட்டாயம் செய்வன் எண்டு சொன்ன பின்பு தான் என்ணெண்டு கூறுவாள். ஒரு டொபிக்கு கூட அப்பிடித்தான் நடந்து கொள்வாள்.

கஜன் சற்றுத் தடுமாறி போனான். அவனுக்குக் கோபம் வந்தது.

“சொல்லண்ணா” சிணுங்கினாள் பவித்திரா. தற்செயலாக அவள் சூரியை கலியாணஞ் செய்து தரச் சொல்லி கேட்டால் அப்படித்தான் அவனின் சிந்தனை ஓடியது. பூமணியும் சங்கரப்பிள்ளையும் அதைக் கேட்டுக் கலவரம் அடைந்தனர். அவள் ஏதாவது கேட்க அவன் அடிக்க அதுவும் வானக மரத்துக் கீழ் அதிகமானோர் வேடிக்கைப் பார்த்துக் கொண்டு நின்றனர். மீண்டும் பவித்திரா, “அண்ணா” என்று சிணுங்கினாள். கஜனுக்கு கோபம் தலைக்கேறியது. “பேசாமல் வா..” வீட்டை போய்க் கதைப்பம் என்றான்.

அவள் அதைக் கேட்கவில்லை. அப்படி அவள் பழக்கப்படவில்லை. அவளின் கண்கள் கலங்கின. விம்மினாள். அவளது அழுகை கஜனுக்கு கோபத்தை கூட்டியது, “அழாதையடி ஆக்கள் பார்த்துக் கொண்டு நிக்கினை…” என்றான்.

“அழாதையடி சனம் நாளைக்கு நாலு விதமாய்க் கதைக்கும்… வீட்டைவா… அவன் உனக்கு செய்யாமல் யாருக்குச் செய்யப் போறான்” என்றாள் பூமணி.

“அழாதையம்மா…” என்றார் சங்கரப்பிள்ளை. பவித்திரா கேட்கவில்லை. கஜனின் கையைப் பிடித்தபடி, “சொல்லண்ணா” என்று கெஞ்சினாள்.

கஜன் அவளது கையைத் தட்டிவிட்டு முறைத்தான்.

பூமணி விபரீதம் நடக்கப்போகிறதென்று நினைக்கு முன் பவித்திராவின் கன்னங்களில் இரண்டு மூன்று அடி விழுந்து விட்டது.

பவித்திரா அதிர்ந்து போனாள். நினைவு தெரிந்த நாளில் இருந்து இன்று வரை அவன் அவளுக்கு அடித்ததில்லை, ‘‘நயினா தீவு கொடியேறி இருக்கு. நான் ஒரு நாளும் போகேல்லை. அண்ணா கூட்டிக் கொண்டு போவார் எண்டு நினைச்சுக் கேட்டன். அவர் அடிச்சுப் போட்டா..’’ விக்கல் விசும்பலிடையே துண்டு துண்டாக வார்த்தைகள் வெளியே வந்தன.

பொங்கிப் பிரவாகித்த அவனது சினம் பட்டென்று அடங்கி விட்டது. தனது அவசரப்புத்தியை நினைத்து வேதனைப்பட்டவனாக, ‘‘அழாதை நான் கூட்டிக் கொண்டு போறன்…’’ அவனது கண்கள் நிரம்பின. கஜனின் கண்கள் கலங்கியதைக் கண்ட பவித்திரா, ‘‘எனக்கு அடி வலிக்கவில்லை’’ என்று கூறிச் சிரித்தாள். ‘‘சரி வா..’’ என்று அவளை அழைத்துக் கொண்டு நடந்தான். அப்படிப் பலருக்கு முன்னால் நடந்து கொண்டது அவனுக்கு வெட்கத்தைக் கொடுத்தது. ‘இனிமேல் எதுக்கும் ஆத்திரப்படக் கூடாது’ என்று நினைத்துக் கொண்டான்.

பூமணி எதுவும் பேசவில்லை. எதிர்பாராது நடந்த அந்தச் சம்பவத்தால் திகைத்துப் போனாள்.

கால் கழுவுவதற்காக பவித்திரா கிணற்றடிக்கு சென்றாள். கஜன், ‘‘அம்மா’’ என்றழைத்தான்.

பூமணி மகனைப் பார்த்தாள், ‘‘என்ரை மோட்டு மூளை அவள் சூரியைக் கலியாணம் செய்து தரச் சொல்லிக் கேட்கிறாளோ எண்டுதான்

நினைச்சுது..'' அவனின் குரல் தழுதழுத்தது. பூமணியும் முதலில் அப்படித்தான் நினைத்தாள், ''நானும் அப்படித்தான் நினைச்சன். சரி சரி காலை கழுவிற்றுக் கோவிலுக்குப் போ'' என்றாள்.

அவர்கள் கோவிலுக்குள் நுழைந்த போது பிள்ளையார் உள்வீதியுலா வந்து கொண்டிருந்தார். மேற்கு வீதியில் அவரிருக்க சனங்கள் மண்டபம் வரை நின்றனர். கஜனைக் கண்ட வதனா ரீச்சர், ''கஜன் எப்படா வந்தனீ, பவித்திரா நீ வாறதைப் பற்றிச் சொல்லேல்லை'' என்றாள். வதனா ரீச்சர் அவனுக்கு ஆங்கிலம் கற்பித்தவர். பத்து வருடங்களுக்கு முன்பு பார்த்த அதே தோற்றம். படிப்பிப்பதற்கு தெரியுமோ, தெரியாது. ஆனால் அலங்காரம் முழுக்கத் தெரியும். இரண்டு தோள்களிலும் விசிறி வைத்த சட்டை. டபிள்யூக் கழுத்து, சட்டைக்கும் சாறிக்கும் இடையில் பரந்த வெளி. இவர் இன்னும் திருந்தவேயில்லை. என்று நினைத்துக் கொண்டான். ''இப்பத் தான் வந்தனான்'' வதனா ரீச்சருக்கு அருகில் ரதினி நின்றாள். கைகள் கூப்பப்பட்டிருந்தன. சாதாரண வொயில் சேலை. கழுத்தில், கைகளில் நகைகள் ஏதுமில்லை. பக்திப் பரவசம் அவளின் முகத்தில் பரவியிருந்தது. ஒரு கணம் கஜன் அதை அவதானித்து விட்டு அருவருப்புடன் முகத்தை மறு கரை திரும்பினான்.

மனம் தறிகெட்டலைய வேண்டிய வயதில் தவக் கோலத்தில் அவள் நின்றது அவனுக்கு வியப்பைக் கொடுத்தது. மறுகரையில் நின்ற பவித்திரா கஜனுக்குக் கிட்ட வந்து அவனது கைளைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய் வைரவர் சாமி இருக்குமிடத்தில் வைத்துக் காதுக்குள் சொன்னாள், ''அவள் இருக்கிற இடத்திலை ஏன் அண்ணா நிக்கிறாய். தன்னைப் பார்க்கத்தான் நீங்கள் நிக்கிறதாய் அவள் சொல்லுவாள்.'' 'தான் சிந்திக்காததை பவித்திரா சிந்திக்காததை

செயலாற்றியது அவனுக்கு வியப்பைத் தந்தது. இவளுக்கு விசர் எண்டு எப்பிடி நம்பறது. இப்படிச் சொல்லுறவள் சூரியைக் காதலிப்பாளா..?' குழம்பினான் கஜன். சூரி சுவாமியைக் காவிக் கொண்டு நின்றான். கஜனை நண்பர்கள் சூழ்ந்து கொண்டு குசலம் விசாரித்தனர். ஆனால் கஜனின் மனம் பல்வேறுபட்ட சிந்தனைகளால் நிலையின்றித் தடுமாறியது. பவித்திரா பக்தி பூர்வமாகப் பிள்ளையாரை வணங்கிக் கொண்டிருந்தாள். அவளை அடிக்கடி நோட்டமிட்டான் கஜன். அவளின் முகத்தில் எந்தவித சலனமும் இல்லை. அவளைப் பார்க்க பார்க்க அவனுக்கு வேதனையாக இருந்தது. அவனின் உயிர் அவள். அப்படி இருக்க மனவேதனையோடு திரும்பியவனை ஒரு சோடி விழிகள் ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தன. அந்த விழிகளுக்குரியவள் ரதினி.

தற்செயலாக ரதினியைக் கண்ட கஜன் திகைத்துப் போனான். அவள் ஏன் என்னைப் பார்க்கிறாள்? தற்செயலாகப் பார்த்திருப்பாள் என்று முடிவெடுத்த கஜன் சில நிமிடங்கள் கழித்து வேறு எங்கையோ பார்ப்பது போலப் பாவனை செய்தவாறு ரதினியைப் பார்த்தான். அப்போதும் அவள் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

குழம்பி, மனம் ஓரளவு தேறியிருந்த அவனுக்கு அச்செயல் ஆத்திரத்தைக் கொடுத்தது. மனதுள் கறுவியவாறு வெளியே வந்தான். பிள்ளையார் வாகை மர நிழலில் வந்தமர்ந்தார். அளவெட்டியூர் சிதம்பரநாதன் 'ரோசாப்பூப்' பாடலை இனிமையாக நாதஸ்வரத்தில் வாசித்துக் கொண்டிருந்தார். அதில் லயித்திருந்த கஜன் எதேச்சையாகத் திரும்பிய போது ரதினியைக் கண்டான். அவளின் விழிகள் அவனையே பார்த்துக் கொண்டிருந்தன. அவன் பார்த்தும் அவை அசையவில்லை. கருணை மிக்க அவ் விழிகள் அவனை ஏதோ யாசிப்பது போல் இருந்தது.

பட்டென்று முகத்தை மறுபக்கம் திரும்பினான். அவனின் உடல் நடுங்கியது. வியர்த்துக் கொட்டியது.

# 16

ஆறாம் திருவிழா உபயகாரரான அதிபர் விக்னேஸ்வரர் கொடுத்த பலாப்பழத்துண்டை பிரித்து சுளையை எடுத்த பவித்திரா, அதன் விதையை நீக்கி விட்டுப் பழத்தை கஜனுக்கு கொடுத்துக் கொண்டிருந்தாள். பலாப்பழம் தேனாக இனித்த போதும் அவன் மனம் பரபரத்ததால் அதைச் சுவைத்துச் சாப்பிட முடியவில்லை.

மூன்று சுளைகளைச் சாப்பிட்ட பின்பு, ‘‘எனக்கு வேண்டாம் நீ சாப்பிடு… பவித்திரா’’ என்றான்.

‘‘இதென்ன அண்ணா.. எத்தினை வரிஷம் நீங்கள் பலாப்பழம் சாப்பிட்டுப் பிடியுங்கோ…’’ அன்பான அவளின் வார்த்தைகள் பலாப்பழத்தை விட அவனுக்குத் தித்தித்தனர். சிரித்தபடி கையை நீட்டினான். அவளின் உபசரிப்பு அவனுக்கு ரதினியை மறக்கச் செய்தது.

‘‘இப்ப எப்படிச் சாப்பிட்டீர்கள்.’’

கஜன் சிரித்தான். பின்பு கேட்டான், ‘‘நீ என்னிலை உயிரை வைச்சிருக்கிறாய் தானே’’

சட்டென்று நிமிர்ந்து பார்த்தாள் பவித்திரா. அவளின் முகத்தில் பலவித உணர்வுகள். கன்னங்கள் கரைந்தன.

“ஏன் அண்ணா… அப்படிக் கேட்கின்றாய்” குரல் பிசிறியது.

“சும்மா கேட்டனான். பதிலைச் சொல்லு..”

“சொல்லமாட்டன்”

“ஏன்..?”

“இது சொல்லிப் புரியுறேல்லை.”

அதற்கு மிஞ்சிக் கதைக்க அவனால் முடியவில்லை. அந்த ஒரு வார்த்தையில் பதில் புதைந்து கிடந்தது.

அவனது மௌனமும், முகத்தில் தேங்கி நின்ற துயரமும், அவளின் மனதை இளக்கின.

“இதென்ன அண்ணை கேள்வி. என்னைச் சந்தேகப்படுறியளே” கஜன் அந்தக் கேள்வியை எதிர்பார்க்கவில்லை. எத்தகைய அர்த்தமான பதில்… அதற்கு என்ன பதில் சொல்வது..

“பவித்திரா நீ தான் என்ரை உயிர். நான் உன்னைச் சந்தேகப்படுவெனொ? நான் உன்னை ஒண்டு கேட்பன். பதில் சொல்வியே?” பவித்திரா விம்மினாள். கஜன் பதறியவாறு, “இப்ப ஏன் அழுகிறாய்?” என்று கேட்டான்.

“இண்டைக்கு உங்களுக்கு என்ன வந்தது..? பேச்சு, நடையுடை, பாவனை ஒண்டும் சரியில்லை… நீங்கள் சொன்னதை எப்பாவது தட்டியிருக்கேனா?” நீங்கள் எதைச் சொல்லிறியளோ.. அதை நான்

கண்ணை மூடிக் கொண்டு செய்வன். சொல்லுங்கோ அண்ணை'' என்றாள்.

கஜன் உருகிப் போனான். இப்படியான ஒருத்தியை நான் சந்தேகித்துவிட்டேனே என மனவருத்தப்பட்டான்.

''சொல்லண்ணா..''

''ஒண்டுமில்லை''

''சொல்லவேணும். இல்லாட்டில் இரவைக்கிச் சாப்பிடமாட்டன்..''

''கதைப்பியா..''

''ஓ... உங்களோடு கதைக்காமல் என்னாலை இருக்க முடியாது. நான் சாப்பிடாவிட்டால் உங்களாலும் அந்த விஷயத்தை கூறாமலும் இருக்க முடியாது..''

எப்படித் தன்னைக் கணித்து வைத்திருக்கிறாள். என்பதை நினைக்க அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

''முதலிலை என்னை மன்னித்துக் கொள்..''

''ஏன்? அடித்ததற்கோ...?''

''இல்லை, உன்னைப் பற்றி தப்பாய் நினைச்சதுக்கு..''

''எனக்கு விளங்கேல்லைச் சொல்லுங்கோ..''

''நான், நீ சூரியைக் காதலிக்கிறாய் என்று நினைச்சன்..''

“பொன்னயற்றை சூரியையோ? இதென்ன அண்ணை கதை உங்கடை விரோதின்ரை மகனை நான் விரும்புவனே” கலங்கிளாள்.

“சரி.. சரி.. அழாதை. எனக்கு உன்னைப் பற்றி கண்டபடி எழுதிட்டாங்கள்..” பெருமூச்சுவிட்டான் கஜன். அவனுக்குப் பவித்திரா மீது அன்பு பெருகியது. தனது எதிரியை அவள் ஜென்ம விரோதியாக நினைத்திருப்பதை நினைத்துப் பெருமிதமடைந்தான் அவன்.

“உனக்கு என்னம்மா படிப்பு பேசாமல் கலியாணத்தைச் செய்.. எனக்கு மருமகனைப் பார்க்க வேணுமெண்டு ஆசை..” பவித்திராவின் முகம் நாணிக் கோணிச் சிவந்தது. “நான் படிக்கப்போறன்” சிணுங்கினாள்.

“படிச்சு என்னத்தைக் காணுறது ஏ.எல. முடிய யூனிவசிற்றீலை அஞ்சுவரிசம். சீ.. அதைவிட்டுட்டு கலியாணம் செய்து கொண்டு என்னோடை வா..” அவள் ஒண்டும் பேசாமல் மௌனமாகத் தலையை குனிந்து கொண்டிருந்தாள்.

“சத்தியன் நல்ல பிள்ளை. நான் ஒருக்கால் கண்டு கதைத்துக் கொண்டு வாறன்” என்று புறப்பட்டான் கஜன்.

சத்தியனின் வீட்டுக்கு இரகுநாதனும் கஜனும் காரில் வந்து இறங்கினர். கார்ச்சத்தம் கேட்டு வெளியே வந்த சத்தியன் கஜனைக் கண்டு ஆச்சரியமடைந்தான். “எப்ப வந்தனீ” என்று கேட்டான்.

“காலமை”

“உள்ளுக்கை வா”

கஜனும் இரகுவும் உள்ளே வந்து நாற்காலியில் அமர்ந்து கொண்டனர். சில நிமிடங்கள் யாரும் பேசவில்லை.

‘‘நடந்ததெல்லாம் அம்மா சொன்னா.. உண்மையாய் பவித்திராவுக்கு எந்த வருத்தமும் இல்லை. இப்பதான் ஏதோ வந்திட்டுது. நீ நினைக்கிற மாதிரி நான் உன்னை ஏமாற்றவில்லை. அவளுக்கு வருத்தமெண்டு தெரிஞ்சிருந்தால் வருத்தத்தைச் சொல்லித்தான் கேட்டிருப்பன்’’ என்றான் கஜன்.

சத்தியன் எதுகும் பேசவில்லை. பொக்கற்றில் இருந்த சிகரெட் பெட்டியை எடுத்துத் திறந்து ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்றிவிட்டு இரகுநாதனுக்கு நீட்டினான். கஜன் சிகரெட் புகைப்பதில்லை.

‘‘வேண்டாம். நான் புகைப்பதில்லை’’ என்றான் இரகு.

‘‘அம்மா எங்கை..’’

‘‘டவுனுக்கு அலுவலாகப் போட்டா’’

சில கணங்கள் மௌனமாகக் கழிந்தன. சத்தியன் ஒரு செயின் சிமோக்கர். புகைத்துக் கொண்டிருக்கும் சிகரெட்டிலே புதிய சிகரெட்டைப் பற்றுவான். சத்தியன் கதைப்பதாக இல்லை. அவன் சிகரெட்டை ரசித்து ருசித்து புகைத்துக் கொண்டிருந்தான். முன்பென்றால் வளவளவென்று கதைப்பான். இன்று மௌனமாக இருக்கிறான். இதற்கு என்ன அர்த்தம்.. கதைக்கப் பிடிக்கவில்லையோ..’’

‘‘சக்தி.. நான் தங்கச்சியின்ரை விசயமாய் வந்தனான்.’’

‘‘அந்தச் சம்பவத்தை நான் மறந்திட்டன்’’

சத்தியனின் கதைக்கு என்ன அர்த்தம். கஜன் குழம்பினான்.

அது என்னுடைய வாழ்க்கையில் நடந்த ஒரு துயரமான சம்பவம் அது. கடைசி நேரத்திலை கடவுள் என்னைக் காப்பாற்றிவிட்டார். அவளின் அழகிலும், உனது பணத்திலும் மயங்கி, அவளைக் கட்டியிருந்தால் எப்படி இருக்கும். விசர் ஆஸ்பத்திரியிலைதான் நிக்கவேணும்.'' அவன் நினைத்து வந்ததற்கு பதில் கிடைத்து விட்டது. நாகரிகமாகக் கதைத்தலாவது கதைத்துப் பார்க்கலாம் சிந்தித்தான் கஜன்.

''நட்புக்காகக்கூட ஒரு விசரைக் கட்ட நான் தயாரில்லை. என்ரை வாழ்க்கையை நான் ஏன் அநியாயமாய் பாழாக்க வேணும்... தெரியாமல் நடந்தாலாவது பரவாயில்லை... தெரிந்த பின் செய்து கஷ்ரப்பட நான் தயாரில்லை...''

''சரி நான் வாறன்''

''அம்மாவும் வீட்டுக்காரரும் வெளில போட்டினம். நல்ல நண்பனான உனக்கு ரீ தரக்கூட என்னாலை முடியேல்லை''

''பரவாயில்லை இன்னொரு நாளைக்கு வாறன்'' என்று புறப்பட்டான் கஜன். காரில் ஏறிய கஜனுக்கு மனம் நிலை கொள்ளாமல் தவித்தது. வீட்டுக்குப் போகமனமில்லை. ''பிள்ளையார் கோவிலடியில் இறக்கி விடுங்கோ'' என்றான்.

கார்க்காரன் கோவிலடியில் இறக்கிவிட்டான். நேரம் ஐந்து மணி. கோவிலடியில் அதிக சனநடமாட்டம் இல்லை.

தேர் முட்டிக்கு முன்னால் உள்ள மணற் பரப்பில் இருவரும் அமர்ந்தனர்.

“பவித்திராவிலை எனக்கு நம்பிக்கையிருக்கு. என்றாலும் ஒன்றாய்ப் படிக்கிற உம்மை விசாரித்தால் தான் தெரியும்.” என்று நிறுத்தி விட்டு இரகுவைப் பார்த்தான் கஜன். அவன் என்ன கேட்கப் போகிறான் என்பது இரகுவிற்கு விளங்கியது.

“பவித்திரா சூரியை விரும்புறாளோ…”

“நான் அறியேல்லை..”

“ஊரிலை அப்பிடி கதை உலாவுதே..” இரகு யோசித்தான்.

“பயப்பிடாமல் சொல்லும். நான் ஆரோடும் பிரச்சினைக்குப் போகேல்லை…”

“ஊரிலை கதைக்கினம் தான். எதை வெச்சுக் கொண்டு கதைக்கினையோ எனக்குத் தெரியாது. நான் அறிஞ்சவரை அப்பிடி ஏதும் இல்லை.”

“சூரி இதைப் பற்றி உம்மோடை கதைக்கேல்லையே..” இரகு உடனே பதில் சொல்லவில்லை.

“இரகு உண்மையைச் சொல்லு. பிள்ளையார் சாட்சியாய் நான் ஆரோடும் பிரச்சினைக்குப் போகமாட்டன்”

“என்னோடை இதுகளைப் பற்றி அவன் கதைக்கிறேல்லை. ஆனால் அவனுக்குப் பவித்திரா மீது அன்பிருக்கு. தகப்பன் உங்களுக்கு செய்த

அநியாயத்துக்குப் பிராயச்சித்தமாக நோயாளியான பவித்திராவைத்தான் கலியாணஞ் செய்யத் தயாரென்று ரூபனுக்குச் சொன்னவனாம்.'' அப்போது அங்கு வந்த ரதினி, ''உங்களோடு ஒரு முக்கியமான விசயம் பேச வேண்டியிருக்கு'' என்றாள்.

# 17

கஜன் ரதினியை ஏறிட்டு நோக்கினான். அவளது முகத்தில் எந்தவிதமான உணர்வுகளையும் அவனால் கண்டு கொள்ள முடியவில்லை.

''பத்து வருடங்களுக்கு முன்பு நடந்த அந்தக் கொடுமையான நிகழ்வுக்காக நான் மன்னிப்புக் கேட்க இப்பதான் சந்தர்ப்பம் கிடைத்திருக்கு. எதையும் ஆராயாமல் குடிபோதையில் மிருகமாக நடந்த அப்பாவுக்காக நான் உங்கள் காலில் வீழ்ந்து மன்னிப்புக் கேட்கிறேன். மன்னிப்பீர்களா..?'' கரங்குவித்தாள் ரதினி. அவள் கண்களில் தேங்கிய கண்ணீர் பளபளத்தது. கஜனுக்குத் தர்ம சங்கடமாகிவிட்டது. இப்படி ஒரு நிகழ்வை அவன் எதிர்பார்க்கவில்லை. அதற்கிடையில் ரகு எழுந்தான்.

''ரகு, நீ அவருக்குத் தம்பி முறை எனக்கு மச்சான்.. இது இரகசியமான பிரச்சினை இல்லை இரு'' என்றாள். ரதினி.

''இரு, இரண்டு பேரும் போவம்'' என்றான் கஜன்.

“மானசீகமாக மன்னிப்புக் கேட்டால் மன்னிக்க வேண்டும். அது தான் அழகு. அப்பா செய்தது கொடுமைதான். அநியாயம் தான். அக்கிரமம் தான். அதற்கு நான் என்ன செய்ய முடியும்? உங்களுக்கு அவரைப் பற்றி தெரியும். சரியான குடிகாரன். சண்டை சச்சரவுகளிலை விண்ணன், எல்லாரோடும் வலியச் சண்டைக்குப் போவார். இப்ப அவராலை ஏலாது. குடி குடியெண்டு குடிச்சு ஈரல் எறிந்சு நடக்கக்கூட கஷ்டப்படுகிறார். இப்பத்தான் அவருக்குச் சுடலை ஞானம் வந்திருக்கு. உங்கடை காலிலை விழுந்து மன்னிப்புக் கேட்க வேண்டுமாம்” நிறுத்திவிட்டு பெருமூச்சு விட்டாள் ரதினி.

கஜன் எதுகும் பேசவில்லை. அவன் இருந்த நிலையில் அவனால் எதுகும் பேசமுடியவில்லை. ரதினி தொடர்ந்து சொன்னாள், “அண்டைக்கு காலுக்கை ஏதோ உளக்குப்பட்டது. நான் பாம்பெண்டுதான் கத்தினனான்” “அதைச் சொல்லியிருக்கலாம் தானே” ஆத்திரத்தோடு கத்தினான் கஜன்.

“என்னை ஆர் சொல்ல விட்டவை.. நீங்கள் போனாப் பிறகு நான் கத்தி கத்திச் சொன்னனான்.”

“எப்பவோ நடந்த விசயம். என்ரை மனதிலை ஆறாத புண்ணாய்த்தான் இப்பவும் இருக்கு. அது கடைசி வரையும் ஆறமாட்டுது…” என்றான் கஜன்.

“அப்படித்தான் எனக்கும். உங்களுக்கு ஆத்திரத்தால் ஆறாமல் இருக்கு. ஆனால் எனக்கு அவமானத்தால் ஆறாமல் இருக்கு…” தலையைக் குனிந்தபடி கதைத்துக் கொண்டிருந்த கஜன் அவளின் கதையைக் கேட்டு தலையை நிமிர்த்தி அவளைப் பார்த்தான். “நான் எத்தனையோ தரம் சொல்லியும் ஊர்ச்சனம் அதை நம்பேல்லை. அப்படி

இராது உவை இரண்டு பேருக்கையும் தொடர்பு இருந்திருக்கு. அது தான் முன்பின்னாய்ப் போனவை. அவன் கட்டிப்பிடிக்க அவள் அதை எதிர்பாராதாலை தான் கத்தினாள் எண்டு ஒரு சிலரும்.. ரோச் அடிச்சுப் பார்த்ததாலை தான் கத்தினாள் எண்டு இன்னொரு சாரரும் கூறினை. அப்பா ஆரம்பத்திலை வெளீலை அப்படி நடந்து கொண்டாலும் இப்ப அதைப் பற்றிக் கவலைப்படுகிறார். அதுகும் சுயநலத்திற்காகத்தான். இப்பிடி ஒரு வதந்தி ஊருக்கை உலாவுவதாலை எனக்குப் பேசிவார கலியாணங்களெல்லாம் குழம்புது. கலியாண வீடுகள் செத்த வீடுகள் கோவில் திருவிழாக்களிலையெல்லாம் இதுதான் கதை. எனக்கு முன்னாலேயே எனது காதுக்கு எட்டும்படியாகக் கூட சிலர் கதைக்கினை.

‘‘அதுக்கு நான் என்ன செய்ய முடியும்..’’

‘‘என்னைப் பொறுத்தவரை நான் எண்டைக்கோ முடிவு எடுத்துப்போட்டன்’’ என்ன என்று கேட்பதைப் போல் அவளை நிமிர்ந்து பார்த்தான் கஜன்.

‘‘நான் இன்னொருத்தரைக் கலியாணங் கட்டி அவருக்கு இந்த விசயம் தெரிந்து காலம் பூரா இதைச் சொல்லி சொல்லி என்னைச் சித்திரவதைப்படுத்துவதிலும் பார்க்க நான் கலியாணம் செய்யாமலே இருக்கிறது நல்லது..’’ கஜன் எதுகும் பேசாமல் இருந்தான். அவனுக்கு தலை வலித்தது. கனடாவிலை இருந்திருக்கலாம் என்று நினைத்தான். ‘‘ஒரு பெண்ணைக் கட்டி அணைக்கிற உரிமை கணவனுக்கு மட்டும்தான் இருக்கு. நீங்கள் என்னைக் கட்டியணைக்காவிட்டாலும் ஊர் முழுக்க அப்படிக் கதைக்கிறதாலை அண்டைக்கே உங்களை என்ரை கணவனாய் நினைச்சிட்டன்.’’ கஜனுக்கு அளவுக்கு மீறிய ஆத்திரம் வந்தது.’’நீ நினைக்கிறதிற்கு நானா பொறுப்பு…? ஊரிலை உள்ள ஒவ்வொரு வரும் ஒவ்வொரு கதை கதைப்பினை. அதுக்கெல்லாம் செவிசாய்க்க

முடியுமே…? நீ எதைப் பற்றியும் நினை. நான் அதற்குப் பொறுப்பில்லை…'' என்றான் ஆத்திரமாக.

''நான் உங்களைப் பொறுப்பேற்கச் சொல்லவும் இல்லை. என்னை மனைவியாய் ஏற்கச் ொசல்லவும் இல்லை. என்ரை நிலையைச் சொன்னனான்.

''அப்பேன் சொன்னனீ''

''சந்தர்ப்பம் சூழ்நிலைகளாலை சூது வாது அறியாத ஒரு பெண் வஞ்சிக்கப்பட்டு இருக்கிறாள் என்ற உண்மையை நீங்கள் கட்டாயம் அறிய வேண்டும் என்பதற்காகத்தான் சொன்னனான். ''உன்னை மனைவி என்று என்னால் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது''

''அது எனக்குத் தெரியும். உங்களுக்கு மனைவியாகிற எண்ணமும் எனக்கு இல்லை. நீங்கள் யாரையும் கட்டி மகிழ்ச்சியாக வாழலாம். ஆனால் நான் உங்களை என்ரை கணவன் என்று நினைத்துக் கொண்டு காலம் பூராவும் வாழ்வன். ஒரு தமிழ்ப் பெண்ணைப் பொறுத்தமட்டிலை சந்தர்ப்பம் சூழ்நிலையாலை வஞ்சிக்கப்பட்டாலும் வாழ்வு ஒரு முறைதான். நீங்கள் என்னோடை கதைக்கேல்லை. கடிதம் எழுதேல்லை. ஏன் நிமிர்ந்துகூடப் பார்க்கேல்லை. அப்படி இருந்தும் அதை விடப் பெரிய தவறு செய்ததாய் சமூகம் கருது. அதுக்கு நீங்கள் பொறுப்பில்லை. அதாலை நீங்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதுதான். என்னுடைய விருப்பம்'' என்றாள் ரதினி. இரவுப் பூசைக்கான ஆயத்த மணி அடித்தது. பக்தர்கள் ஒவ்வொருவராக வரத்தொடங்கினார்கள்.

''நான் வாறன்'' என்று சொல்லிவிட்டு கிணற்றடியை நோக்கி நடந்தாள் ரதினி.

“ரதினி மச்சாள் பாவம். நீங்கள் போன காலம் தொடக்கம் இப்படித்தான். ஒரு நல்லது கெட்டதிற்குப் போறேல்லை. ஒரு நல்ல சீலை உடுக்கிறேல்லை. ஆரம்பத்திலை தகப்பன் அதைப் பெரிசுபடுத்தேல்லை. காலம் போகப் போகத்தான் மச்சாளின்ரை உண்மையான ரூபம் அவருக்கு விளங்கியது. ஆறாம் திருவிழா அன்று மச்சாள் நோன்பு இருப்பா. முதல் நாள் காலை சாப்பிட்ட சாப்பாடுதான் மறுநாள் காலை வரை பச்சைத் தண்ணீர் கூடக் குடிக்கமாட்டா. தன்னுடைய தவறாலை தானாம் எல்லாம் நடந்தது. கஜன் நேர்மையானவர். எந்தப் பாவமும் அறியாதவர். என்னாலை அவருக்கு அவமானம் ஏற்பட்டுட்டுது” என்று அடிக்கடி சொல்லுவா. கஜன் அமைதியாகக் கேட்டுக் கொண்டு இருந்தான். பவித்திராவின் நோய் ஒரு பக்கம் ரதினியின் நோன்பு மறுபக்கம். இரண்டுக்கும் இடையில் சிக்கித் தத்தளித்தான். கஜன் சேட்டைக் கழற்றி கையில் வைத்துக் கொண்டு, காலைக் கழுவி விட்டு கோவிலுள் சென்றான். அவனின் கண்கள் ரதினியைத் தேடிச் சுழன்றன.

கொடிக்கம்பத்திற்கு சிறிது தூரத்தில் நின்றாள். அவளின் கண்கள் அவனை ஏக்கத்துடன் பார்த்தன. இரண்டு சோடி விழிகளும் சில கணங்கள் மெய் மறந்து கலந்துறவாடித் தாழ்ந்தன. அவனின் இதயத்தில் ஒரு கசிவு.. பரிவு. பல்வேறு சிந்தனைகளுடன் வெளியே வந்தான் கஜன். எட்டரை மணிக்கு கஜன் வீட்டுக்கு வந்தான். அவன் தனியே வரவதைக் கண்ட பூமணி அதிர்ச்சியுடன் கேட்டாள், “பவித்திரா எங்கை?”

“என்னோடை அவள் வரேல்லை”

“உன்னோடை வரேல்லையோ… நான் அவள் உன்னோடை கோவிலுக்கு வந்தவளெண்டு நினைச்சன்..” என்ற பூமணி குழறியபடி அங்கும் இங்கும் ஓடினாள். எங்கும் பவித்திராவைக் காணவில்லை.

# 18

வீடு முழுவதும் தேடியாயிற்று. பின் வளவு, வைரவர் கோவிலடி, பின் பக்கத்தில் இருந்து பனைவளவு யாவும் தேடியாயிற்று. பவித்திராவைக் காணவில்லை.

பூமணி பெருங்குரலெடுத்துக் கத்தினாள். இப்படி ஒரு துயரம் அவளுக்கு வாழ்நாளில் ஏற்பட்டதில்லை. அவளின் அழுகுரல் கேட்டு அக்கம் பக்கத்தினர் அரிக்கன் லாம்புகளுடன் வந்து முற்றத்தில் கூடிநின்றனர்.

பூமணி மிகவும் நல்லவள். மிகவும் ஏழ்மையான காலத்தில் அயலவர்களுடன் எப்படிப் பழகினாளோ அப்படிப் பணம் வந்த பின்பும் பழகி வந்தாள். தன்னிடம் உதவி கேட்டு வரும் எல்லோரையும் முகம் கோணாமல் வரவேற்று உதவிகள் செய்வாள். அத்துடன் ஊரவர்கள் அவசர தேவைகளுக்கு அவளிடம் தான் பணம் மாறுவார்கள்.

அதனால் ஊரவர்கள் எல்லோரும் அவள் மீது பற்றும் பாசமும் வைத்திருந்தனர்.

அதனால் அருகில் உள்ளவர்கள் அக்கறையோடு பவித்திராவைத் தேட ஆரம்பித்தனர்.

கஜன் ஆடிப்போனான், அவனுக்குக் கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை, அவனது மூளை மரத்துவிட்டது. எதுவும் சிந்திக்க முடியாதவனாக விக்கித்துப் போனான். தனது உயிருக்கு மேலான தங்கையைக் காணாததால் அவனுக்கு தன் மீதும் வெறுப்பு ஏற்பட்டது.

“ஐயோ கேவியூ நேரம். ஆமிக்காரர்கள் ரோட்டிலை திரிவாங்கள்... இவள் ஓட புலியெண்டு நினைச்சுச் சுட்டுப் போடுவாங்கள்... நான் என்ன செய்ய பிள்ளையாரே... முருகா... என்ரை பிள்ளையைக் காப்பாற்று...” என்று ஒப்பாரி வைத்தாள் பூமணி.

அரிக்கன் லாம்புடன் ஒவ்வொரு ஒவ்வொரு திக்காகப் பவித்திராவைத் தேட அயலவர் புறப்பட்டனர்.

இரகுவும் கஜனும் அரிக்கன் லாம்புடன் பிள்ளையார் கோவில் பக்கம் சென்றனர். பிள்ளையார் கோவிலின் முன்பக்கம், பின்பக்கம், முன்னால் இருக்கும் பனங்காணியிலும் தேடினார்கள். சனசமூக நிலையத்தின் கட்டிடத்தில் இயங்கும் கூட்டுறவுப் பண்டகசாலைக் காவலாளியான கந்தசாமி, நான் இரண்டு மணித்தியாலமாய் இதிலைதான் இருக்கிறன். இதாலை பவித்திரா வரவில்லை...” என்று சொன்னார்.

அவரும் காவலுக்கு வைத்திருந்த அரிக்கன் லாம்புடன் புறப்பட்டார்.

எல்லா ஒழுங்கைகளிலும் அரிக்கன் லாம்புடன் மக்கள் கதைத்துக் கொண்டு சென்றமையால் நாய்கள் விழித்துக் கொண்டன.

“எல்லா இடமும் நாய் குரைக்குது ஆமி வந்தாலும் தெரியாது” என்றான் இரகு.

மகன் ஊருக்குப் புதிதான படியால் தற்செயலாக ஆமிபிடித்தாலும் கரைச்சல் என்று கஜனுக்குப் பின்னால் ஒப்பாரி வைத்துக் கொண்டு சென்றான் பூமணி.

அவர்கள் தேடிக் கொண்டு காளிகோவில் குருக்களின் வீட்டிற்கு வந்தனர்.

‘‘இப்படி எப்பெண்டாலும் ஓடியவளே?’’ கஜன் கேட்டான்.

‘‘ஓடப்போறன் எண்டு கத்துவாள். ஆனால் ஓடேல்ல…’’

‘‘அப்ப எங்கை போயிருப்பாள்’’ கஜன் கேட்டான். அப்போது தான் பவித்திரா அடிக்கடி சொல்வது பூமணிக்கு ஞாபகத்திற்கு வந்தது. உடனே பூமணி ‘‘ஐயோ… ஐயோ’’ என்று பலமாகக் கத்திவிட்டுச் சொன்னாள், ‘‘தான் சுடலைக்குப் போகப் போறதாய்ச் சொல்லுறவள். ஒருக்கால் சுடலைப் பக்கம் போய்ப் பாருங்கோ…’’

அப்போது அங்கே நிர்மலனும் ரதினியும் அரிக்கன் லாம்போடு வந்தனர்.

‘‘சுடலைக்கோ… நான் வாறன் வாருங்கோ’’ என்றான் நிர்மலன்.

‘‘நானும் வாறன்’’ என்றாள் ரதினி.

சுடலைப் பக்கம் இரவிலை ஆமி படுத்திருக்கிறது… அங்காலப் பக்கத்திலையிருந்து சுடலை வெளிக்குள்ளாலை போராளிகள் வாறதாய் ஆமி சந்தேகிக்குது. போன மாதமும் ஒரு நாள் சுடுபட்டவர்கள்’’ என்றான் இரகு.

‘‘அதுக்காக தேடாமல் விட முடியுமே…’’ என்றான் நிர்மலன்.

“கதையை விட்டிட்டு நட” என்றாள் ரதினி.

நிர்மலன் அரிக்கன் லாம்புடன் முன்னே செல்ல ரதினி அவனைப் பின் தொடர்ந்தாள்.

இரகு நாதன் மெல்ல நழுவினான். கஜன் அவர்களுக்குப் பின்னால் சென்றான். பூமணியம் சங்கரப்பிள்ளையும் லவனும் அவர்களைத் தொடர்ந்து சென்றனர். வேறு எவரும் செல்லவில்லை.

பிரதான வீதியில் இருந்து சுமார் ஒரு மைல் தூரம் செல்ல வேண்டும்.

மயான அமைதி, காற்று ஊளையிட்டு வீசியது. யாரும் கதைக்கவில்லை. கஜனுக்குப் பயமாக இருந்தது. இவ்வளவு சனம் ஊரில் இருக்கையில் எங்களுக்கு உதவ சூரியையும் ரதினியையும் தவிர வேறு எவரும் முன்வரவில்லையே... என்று நினைத்தான் கஜன்.

ஒரு பெண் நடு இரவில் காணாமல் போயிருக்காள். அவளைத் தேட ஊர்ச் சனங்கள் முன்வராததைக் கண்டு கஜனுக்கு அவர்கள் மீது வெறுப்பு வந்தது. அதே சமயம் கூட வரும் ரதினியின் மீதும் சூரியின் மீதும் திடீரென்று ஒரு பற்று ஏற்பட்டது.

நிர்மலனுக்கு வீட்டுப் பெயர் சூரி. சூரியென்றால் தான் ஊரில் உள்ளவர்களுக்குத் தெரியும். நிர்மலன் என்று விசாரித்தால் ஊரில் அப்படியான பெயரில் யாரும் இல்லை என்று சொல்வார்கள்.

சுடலையில் பிணம் ஒன்று எரிந்து கொண்டிருந்தது. அந்த வெளிச்சம் மிகவும் பிரகாசமாக இருந்தது. சுற்றி வர எல்லோரும் பார்த்தனர். ஆள் அரவமே இல்லை.

“பவித்திரா...” பூமணி மெதுவாக அழைத்தாள்.

“அக்கா” அழுதான் லவன்.

“பிள்ளை..” என்று அழைத்தார் சங்கரப்பிள்ளை.

கஜன் ஊமையாக நின்றான்.

அரை மணி நேரமாக எல்லா இடமும் பார்த்தார்கள். பவித்திராவைக் காணவில்லை.

“எங்கு போயிருப்பாள்” என்று பெருமூச்சு விட்ட பூமணி, “வாருங்கோ போவம்” என்றாள்.

கிரவல் ரோட்டால் வந்து பிரதான வீதியில் ஏறியதும் வாகனம் ஒன்று வந்து அவர்களின் அருகே நின்றது.

அது ஆமி ஜீப். உள்ளிருந்து பலர் பொத்துப் பொத்தென்று குதித்தனர்.

“எங்கே போறது…”

“சுடலைக்கு”

“சுடலைக்கு..? இந்த சாமத்தில் ஏன் சுடலைக்கு..?” யாரும் எதுவும் பேசவில்லை. இராணுவ வீரன் ஒருவன் ரோச்சை அடித்துப் பார்த்தான். பின்… “சரி.. சரி.. போங்க” என்றான்.

கஜன் பெருமூச்சு விட்டான். அவனுக்கு அப்போது தான் போன உயிர் திரும்பி வந்தது.

“நல்ல காலம் கேம்புக்குக் கொண்டு போகாமல் விட்டுட்டாங்கள். பிள்ளையார்தான் காப்பாற்றினது” என்றாள் பூமணி.

சனசமூக நிலையத்துக்கு அருகில் வரும் போது பிள்ளையார் கோவில் பக்கமாய் யாரோ செல்வது போல் தெரிந்தது.

“அங்கே பாராணை கோவில் பக்கமாய் ஆரோ போயினை..” என்றான் கஜன்.

அவன் சொல்லும் முன்பே கையில் இருந்த டோச்சை அடித்தான் லவன்.

பவித்திரா வேகமாகச் சென்று கொண்டிருந்தாள்.

“பிள்ளை”

“பவித்திரா”

“அக்கா” ஏககாலத்தில் பல குரல்கள் ஒலித்தன. திரும்பிப் பார்த்த பவித்திரா அவர்களை நோக்கி ஓடி வந்தாள்.

“எங்கையடி போறாய்..” பூமணி அதட்டினாள்.

“நான் உங்களைத் தேடித்தான் போறன்.

முதலில் பூமணிக்கு ஆத்திரம் வந்தது. கையை ஓங்கிக் கொண்டு பவித்திராவை நெருங்கினாள்.

“அம்மா” என்று அலறினான் கஜன். “அவளுக்கு அடியாதை.. அவள் வேணுமெண்டே செய்யுறாள்” என்று கேட்டாள்.

பூமணி விக்கித்துப் போனாள். “முரட்டுக் கஜனா இவன்…?”

பவித்திரா அரிக்கன் லாம்பைத் தூக்கி கஜனின் முகத்திற்கு நேராகப் பிடித்தாள்… பின், “கஜன் அண்ணை நீ எப்ப கடனாவாலை வந்தனீ..” என்று கேட்டாள்.

கஜன் அதிர்ந்து போனான், “பவித்திரா நீ என்னம்மா சொல்லுறாய்…” வாஞ்சையுடன் அவளின் கையைப் பிடித்தான்.

“நான் போயிற்று வாறன்…” என்றாள் ரதினி.

கஜன் திரும்பி ரதினியைப் பாசத்துடன் பார்த்தான். அவள் அவன் மனதில் ஒரு படி உயர்ந்திருந்தாள்.

“வீட்டை வந்து தேத்தண்ணி குடிச்சிட்டுப் போ பிள்ளை” என்றாள் பூமணி.

ரதினி மறுக்கவில்லை.

வீட்டில் பலர் கூடிநின்றனர். பூமணி பெரியதொரு பானையில் தேனீர் வைத்தாள்.

ரதினியும் சூரியும் அவர்களுடன் வந்தது ஊரவர்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

தேனீர் குடித்து விட்டுப் புறப்பட்ட ரதினியையும் சூரியையும் கூட்டிக் கொண்டு கஜன் புறப்பட்டான். வரவேண்டாம் என்று அவர்கள் வற்புறுத்திக் கூறியபோதிலும் அவன் ஏற்றுக் கொள்ளவில்லை.

# 19

இரவு முழுவதும் கஜன் தூங்கவில்லை. அவனின் நினைவுத் திரையில் பவித்திராவை விட ரதினியே அடிக்கடி வந்து போனாள். அவள் மீதிருந்த வெறுப்பு வன்மம் யாவும் மறைந்து உயர்ந்த மதிப்பு, கௌரவம் குடி கொண்டது.

தனக்காக அவள் பத்து வருடங்களாக தவமிருந்தாள் என்றால் லேசுப்பட்ட காரியமா..? அதை விட பேய்கள் உலாவும் என்று பகலிலே கூட செல்லப் பயப்படும் சுடலைக்கு தனியே இரவிலே செல்ல முயன்றாளே.. அவளின் துணிவு எவ்வளவு என்று எண்ணிக் கிறங்கினான் கஜன். தகப்பன், அதுவும் குடிவெறியில் செய்த காரியத்திற்கு அவள் எப்படிப் பொறுப்பாவாள். நாய் கடித்ததற்காக குட்டியைத் தண்டிப்பதா..

அந்த இனிய நினைவுகளூடே பவித்திராவைப் பற்றிய எண்ணங்கள் அவன் மனதில் தோன்றின.

பவித்திராவை அறையுள் வைத்துப் பூட்டித் திறப்பை இடுப்பில் செருகியிருந்தாள் பூமணி.

“அம்மா கதவைத் திறவணை..” கதவில் பட படவென அடித்தாள் பவித்திரா.

“சனியன் கொஞ்ச நேரம் எண்டாலும் படுக்க விடாள் போலை கிடக்கு..” என்று பேசியவாறு கதவைத் திறந்தாள் பூமணி.

வெளியே வந்த பவித்திரா, “அண்ணா.. அண்ணா.. எங்கே இருக்கிறியள்” என்று கேட்டாள்.

கஜன் எழுந்து வந்தான், “அண்ணா ரதினியும் சூரியும் இஞ்சை ஏன் வந்தவை..?” என்று கேட்டாள்.

“உன்னைத் தேடிப் பார்க்க வந்தவை..”

“இஞ்சை அவை வரக்கூடாது”

“ஏன்?”

“வரக்கூடாது” கத்தினாள்.

“சரி சரி இனிமேல் வரவேண்டாம்” என்று சொல்லுறன்.

“என்னைச் சுடலை வைரவர் வரச்சொன்னவர்.. நான் போனனான் வழீலை பிள்ளையார் வந்து வைரவரைப் பேசிக் கலைச்சுப் போட்டு என்னைக் கூட்டிக் கொண்டு வந்தவர்..”

“என்னடி சொல்லுறாய்..”

கஜன் விக்கித்துப் போனான். அவளை அதிர்ச்சியுடனும் பீதியுடனும் பார்த்தான். சிறிதளவு இருந்த நம்பிக்கையும் பறந்தது.

கனடாவுக்கு கூட்டிக் கொண்டு போய் வைத்தியம் பார்க்கவேண்டும். எத்தனை கோடி செலவழிந்தாலும் பரவாயில்லை என்று நினைத்தான்.

“நான் செத்துப் போனால் நீ என்ன அண்ணா செய்வாய்?” வேதனையின் எல்லையில் நின்றான் அவன், “ஏனம்மா இப்படிச் சொல்லுறாய். நீ சாக நான் விடுவனா..?”

“சும்மாய் கேட்டன்” சிரித்தாள்.

நீண்ட இரவு மெதுவாக விடிந்து கொண்டிருந்தது. பவித்திராவைக் கண்காணித்தபடி ஈசிச் செயரில் படுத்திருந்தான் கஜன். பூமணி அவனுக்கு முன்னால் சேலைத் தலைப்பை விரித்துப்படுத்திருந்தாள். லவன் கசற்றில் பாட்டுக் கேட்டுக் கொண்டிருந்தான். சங்கரப்பிள்ளை மாமரத்துக்குக்கீழ் ஈசிச் செயரில் படுத்திருந்து சுருட்டுப் புகைத்துக் கொண்டு இருந்தார். மொத்தத்தில் யாரும் அன்றிரவு நித்திரை கொள்ளவில்லை.

பொழுது புலர்ந்து வெகுநேரமாகிவிட்டது. பவித்திராவை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போவதற்காக ஓட்டோவை அழைத்து வரச் சென்ற லவன் ஓட்டோவுடன் வந்தான்.

பவித்திராவை உடுப்பு வாங்க கூட்டிச் செல்வதாக கஜன் சொல்லியிருந்தான்.

ஓட்டோவில் கஜனும் பூமணியும் பவித்திராவும் ஏறினர்.

பன்னிரண்டு மணிக்குத்தான் அந்த தனியார் வைத்தியசாலைக்கு வைத்திய நிபுணர்கள் வருவது வழக்கம்.

பொதுவாக மனநோய் வைத்திய நிபுணருக்கு, தனியார் வைத்தியசாலைக்கு வைத்தியத்திற்காக நோயாளர் வருவது குறைவு. முன்கூட்டியே ஏற்பாடு செய்தால் தான் வருவார்கள்.

காலையில் ரதினியும் சூரியும் அந்த ஏற்பாட்டைச் செய்திருந்தனர்.

வைத்தியரின் அறைக்குள் கஜனும் பூமணியும் பவித்திராவை அழைத்துச் சென்றனர்.

அவரைச் சுற்றி மூன்று கதிரைகள் இருந்தன.

மூவரும் அதில் அமர்ந்து கொண்டனர்.

“உம்முடைய பெயர் என்ன?” டொக்ரர் கேட்டார்.

பவித்திரா மௌனமாக இருந்தாள். பூமணி, “பவித்திரா” என்றாள்.

“என்னுடைய கேள்விகளுக்கு பவித்திராதான் மறுமொழி சொல்ல வேண்டும். படிக்கிறீரா?”

பவித்திரா மௌனமாகவே இருந்தாள்.

“சொல்லும்.. படிக்கிறீரா..?”

பவித்திராவின் உதடுகள் பிரிந்தன. எதையோ சொல்ல விரும்புகிறாள் போலப்பட்டது.

“பயப்படாமல் சொல்லும்..”

மீண்டும் உதடுகள் ஒட்டிக் கொண்டன.

அவருக்கு இப்பொழுது அறுபத்தைந்து வயது. பென்சன் எடுத்த பின்பும் வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம். யுத்தத்தைக் காரணங்காட்டி வசதியுள்ளவர்கள் படித்தவர்கள் எல்லாம் கப்பலேறியதால் அவரை வேலை செய்யும்படி அரசாங்கம் வற்புறுத்திக் கேட்டதால் சேவை செய்கின்றார்.

இங்கிருந்து பல டொக்டர்கள் போக அங்கிருந்து பலர் இங்கு வந்து வேலையாற்றுகின்றனர்.

அவர் தனது முப்பத்தைந்து வருட சேவையில் எத்தனை விதமான மனநோயாளர்களைக் கண்டிருக்கிறார்.

பவித்திரா கதைக்காததால் பூமணியைப் பார்த்துக் கேட்டார்.

“நீங்கள் பவித்திராவினுடைய அம்மா தானே..”

“ஓம்..”

“எத்தின நாளாய் இந்த வருத்தம் இருக்கு..”

“ஆறு மாசமாய்..”

இவ்வளவு நாளும் ஏன் வைத்தியம் செய்யேல்லை? பார்வை பார்த்து கழிப்புக் கழிச்சனீங்களோ?”

“இல்லை”

“அப்பேன் வைத்தியம் செய்யேல்லை”

“குமர்ப்பிள்ளை வெளிலை தெரிஞ்சால் கூடாதெண்டு நினைச்சம்.”

“ம்.. இப்ப ஊர் முழுக்கத் தெரிந்து விட்டது அப்படித்தானே…”

விம்மினாள் பூமணி.

“நீங்கள் இரண்டு பேரும் போய் வெளீலை இருங்கோ..”

இருவரும் வெளியே சென்றனர்.

டொக்டருடன் நேர்ஸ் ஒருத்தியும் நின்றாள்.

“பவித்திரா..”

“ம்”

“படிக்கீறீரா.. எந்தக் கொலிச்சிலை” அவள் பதில் சொல்லவில்லை.

என்னோடு நீா் கதைக்கவேணும். அப்பத்தான் உமக்கு நல்லது.. நல்ல பிள்ளை.. உம்முடைய மனதில் உள்ளதைச் சொல்லும்…”

பவித்திராவின் கண்கள் கலங்கின. விம்மினாள். டொக்டா் பொறுமையாக இருந்தாா். சில நிமிடங்கள் கழித்து அவரது கையைப் பிடித்தாள் பவித்திரா. டொக்டா் அனுபவப்பட்டவா் பயப்படவில்லை.

“மனதில் உள்ளதைச் சொல்லும்மா” என்றாா். “டொக்டா் உங்களை என்னுடைய தெய்வமாய் நினைத்து இதைச் சொல்லுறன். தயவு செய்து ஆருக்கும் சொல்லிப் போடாதையுங்கோ..”

“என்னுடைய மனதில் நோயாளிகளின் ஆயிரமாயிரம் இரகசியங்கள் புதைந்திருக்கு.. நான் அதை வெளீலை சொன்னால் வைத்தியனல்ல..” என்றாா்.

“எனக்கு ஒரு வருத்தமும் இல்லை டொக்டா்.”

டொக்டா் அதிா்ச்சியோ பரபரப்போ அடையவில்லை. மனநோயாளிகள் இப்படி எதையோவெல்லாம் சொல்வாா்கள்.

“உமக்கு வருத்தம் என்று யாா் சொன்னது.. உமக்கு ஒரு வருத்தமும் இல்லை.. உம்முடைய மனதில் உள்ளதைச் சொல்லும்…”

பவித்திரா சில கணங்கள் தாமதித்தாள். தனது மனதில் உள்ளதை ஒன்று திரட்டி எப்படிக் கூற வேண்டுமென்று அவள் மனதுக்குள்ளே ஒத்திகை பாா்த்துக் கொண்டிருந்தாள். டொக்டா் அமைதியாக அவளின் பதிலை எதிா் பாா்த்துக் காத்திருந்தாா். பின் பொக்கற்றுக்குள் இருந்த சிகரெட் பெட்டியைத் திறந்து அதிலிருந்து ஒரு

சிகரெட்டை உருவி எடுத்து உதட்டில் பொருத்தி விட்டு லைட்டரை எடுத்து சுவிச்சை அமுக்க தீ பரவியது.

டொக்டரின் வாயிலிருந்தும் மூக்கில் இருந்தும் புகை வெளியே சென்று கொண்டிருந்தது.

"டொக்டர்"

"சொல்லும்"

"அண்ணாமார் மூன்று பேர் கனடாவிலை இருக்கினை.."

"ம்"

"இப்ப வந்தவர் மூத்தண்ணை.. பெயர் கஜன்.." நிறுத்தினாள்.

"சொல்லும்.. சொல்லும்.."

"அவர் சரியான முரட்டுச் சுபாவம் உடையவர் என்றாலும் என்னிலை உயிரையே வைத்திருக்கிறார். அதாலை சில பிரச்சினைகள் தான். அது தான் நான் நடிக்கிறன்… உண்மையில் எனக்கு விசர் இல்லை."

டொக்டர் ஆச்சரியத்துடன் நிமிர்ந்து உட்கார்ந்தார். அவள் சொல்வது உண்மையா பொய்யா என அவருக்குப் புரியவில்லை. சில பைத்தியங்களைக் கதையில் இருந்து பிடிக்கவே முடியாது.

"நீங்கள் நம்பேல்லையா டொக்டர்.." என்று கேட்டாள் பவித்திரா.

# 20

"இல்லை.. இல்லை.. நீர் சொல்லுறதை நான் பூரணமாக நம்புறன். நீர் சொல்லும்" என்று உற்சாகப்படுத்தினார் டொக்டர்.

"பத்து வருடங்களுக்கு முன்னம் அண்ணை படிச்சுக் கொண்டிருக்கும் பொழுது ஒரு சம்பவம் நடந்தது. எங்கடை ஊர் பிள்ளையார் கோவில் திருவிழா நடந்து கொண்டிருக்கேக்கை ரதினி என்ற பெண்ணை அண்ணை கட்டிப்பிடித்ததாகக் கூறி அவளின்ரை தகப்பன் அண்ணையைத் தண்டித்து விட்டார். அதாலை பல பிரச்சினைகள்" சுருக்கமாக அவற்றை விபரித்தாள் பவித்திரா.

சுவாரஸ்யமாகக் கேட்டுக் கொண்டிருந்தார் டொக்டர்.

"அண்ணை வெளிநாட்டுக்குப் போன பிறகு அந்தப் பெண் சரியாப் பாதிக்கப்பட்டாள். ஊரிலை பலரும் பலவிதமாகக் கதைக்க ஆரம்பிச்சிட்டினை" பெருமூச்சை விட்டாள்.

டொக்டர் இன்னுமொரு சிகரெட்டை எடுத்துப் பற்றினார்.

"இந்த நிலைமையிலை அந்தப் பெண்ணுடைய தம்பியார் நிர்மலன் என்னோடு ஆண்டு ஒன்றில் இருந்து படித்துக் கொண்டு வாறார். நாங்கள் இருவரும் ஏ.எல்லுக்கு வந்தா பிறகு..." பவித்திரா தலையைக் குனிந்து கொண்டாள்.

டொக்டர் சிரித்தார். "விளங்குது விளங்குது சொல்லும்" என்றார்.

"அவரோடு பழகிய பிறகுதான் அவர் எப்படியானவர் என்று அறிந்து கொள்ள முடிந்தது. அவர் தனது சகோதரியைப் பற்றி எனக்கு அடிக்கடி

சொல்லிக் கவலைப்படுவார். அதனால் எனது மனதில் இனம்புரியாத ஒரு இரக்கம் வந்திட்டுது. அண்ணைக்கு அவளை கலியாணம் கட்டி வைக்க வேணுமென்று திட்டம் போட்டன். சாதாரண நிலையிலை அது நடக்காது. அவரோடு இதைப் பற்றிக் கதைத்தாலே கொலை விழும். ஆழ்ந்து சிந்தித்தன். பலவாறாக யோசித்துப் பார்த்தன். கடைசியாகத்தான் இந்த முறையை நான் கையாண்டன்..''

''நீர் நடிக்கிறது யாருக்காவது தெரியுமா..?''

''இல்லை''

''உம்முடைய காதலனுக்கு..''

''அவருக்கும் தெரியாது. அவர் பயந்தவர். எதையும் துணிந்து செய்ய மாட்டார். அதாலை அவருக்கும் நான் சொல்லேல்லை.''

''அவர் உமக்கு விசர் என்று வெறுத்து ஒதுக்கமாட்டாரா..?''

''அதைப் பற்றித் தெரியாது. என்ரை திட்டம் சரி வந்த பிறகு நிர்மலனுக்கு மட்டும் சொல்லுவம் என்று நினைத்தனான்.''

''சரி மேலை சொல்லும்..''

''அண்ணைக்கு நான்தான் எனது காதலைப் பற்றிக் கடிதம் எழுதுறனான். இதற்காக இடக்கையாலை எழுதிப்பழகினனான். இடக்கையாலை அண்ணைக்கு மொட்டைக் கடிதம் எழுதுவன் வலக்கையாலை அன்போடை எழுதுவன்.''

டொக்டர் சிரித்தார். பின்பு, ''நீர் பொல்லாத ஆள்'' என்றார்.

“ஒரு பெண்ணின் துயரம் என்னை மிகவும் பாதித்தது. எமது சமூக அமைப்பைப் பொறுத்தமட்டிலை ஒரு பெண் ஒருவனோடு கதைத்தால் கூட அதைத் தப்பாகத்தான் சமூகம் பார்க்கும் அந்தளவில் ரதினியை அண்ணா தொடவில்லை என்று எனக்குத் தெரியும். ஊரவை எனக்கு முன்னாலேயே தவறாய்த்தான் கதைக்கினை. அதாலை ஏற்பட்ட இரக்கத்தாலை தான் அப்படி நடந்தனான். அதில் கொஞ்சம் சுயநலனும் இருந்தது” என்று நிறுத்தினாள் பவித்திரா.

டொக்டர் எதுவும் பேசாமல் பவித்திராவைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

“நிர்மலன் நல்ல அழகானவன். அத்தோடு படிப்பிலும் கெட்டிக்காரன். படிச்சு ஒரு நல்ல நிலைக்கு வருவான் என்று எனக்குத் தெரியும். ரதினியில் ஏற்பட்ட பரிவு நிர்மலன் மீது காதலை ஏற்படுத்தி விட்டது” என்றாள் பவித்திரா.

“அவ்வளவும்.. தானா.. இல்லை இன்னும் சொல்ல வேண்டியிருக்கா..”

“அவ்வளவுதான்”

சிரித்த டொக்டர், “உமது கலியாணத்திற்கு எனக்கு கட்டாயம் இன்விற்டேசன் தரவேண்டும்..” என்றார்.

கல கலவெனச் சிரித்த பவித்திரா, “உங்களக்குத் தராமல் விடுவனா? நீங்கள் தானே எல்லாவற்றையும் முடித்து வைக்க வேண்டும்” என்றாள்.

“ஓமோம்” என்று சிரித்த டொக்டர் கோலிங் பெல்லை அடித்தார். பீயோன ஓடி வந்தான்.

“இந்தப் பிள்ளையோடு வந்த இரண்டு பேரையும் வரச் சொல்லும் சிறிது நேரத்தில் கஜனும் பூமணியும் உள்ளே வந்து கதிரையில் அமர்ந்தனர்.

“கொஞ்சம் சிக்கலான பிரச்சினை தான். எதுக்கும் கண்டிக்காதைங்கோ அடிமனதிலை ஒரு பிரச்சினை இருக்கு” தயங்கினார் டொக்டர்.

“டொக்டர் எனக்குத் தங்கைதான் முக்கியம். அவளுக்காக எதையும் செய்வன். சொல்லுங்கோ டொக்டர்..” அவசரப்பட்டான் கஜன்.

அவன் துடிப்பதைக் கண்டதும் பாசமேலீட்டால் அவளது கண்கள் கலங்கின. இதயம் விம்மியது.

“பதட்டப்படுவதற்குப் பெரிசாய் ஒன்றுமில்லை. அவள் யாரையாவது விரும்பியிருந்தால், விரும்பியிருக்கிறாளோ தெரியவில்லை. அப்படி விரும்பியிருந்தால் அவனையே செய்து வையுங்கோ”

“அவள் விரும்பினால் யாரையும் செய்யட்டும். அவள் சூரியை விரும்புறதாய் எனக்குத் தெரியல்லை.”

“எதற்கும் அவசரப்படாதையுங்கோ. மருந்து எழுதித் தாறன் கொடுங்கோ. வார மாதம் பதினைந்தாம் திகதி கூட்டி வாருங்கோ.” என்ற டொக்டர் பவித்திராவைப் பார்த்து, “தார மருந்தைக் குடிக்க வேண்டும் என்ன? எங்கே போடுவீா நிலத்திலையோ?” என்று கேட்டு விட்டுச் சிரித்தார்.

பவித்திராவிற்கும் சிரிப்பு வந்தது. சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

“சரி வாறன் டொக்டர்” என்று கஜன் எழுந்தான். வெளியே வந்த சில நிமிடங்களில் மருந்துச் சரைகளுடன் ஒரு நேஸ் வந்தாள். அவற்றைப் பெற்றுக் கொண்ட கஜன் பவித்திராவை அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தான்.

அன்று ஏழாம் திருவிழா.

இரவுத் திருவிழா ஆரம்பமானது. ரதினி அதே சேலையுடன் கோவிலுக்கு வந்திருந்தாள்.

கஜனும் பவித்திராவும் பூசை தொடங்கும் போது கோவிலுக்கு வந்தனர்.

கஜனின் விழிகள் ரதினியைத் தேடின. பவித்திரா கோவிலுக்குள் நுழைந்தவுடன் ரதினியைத் தேடிக் கண்டுபிடித்து அவளின் அருகில் நின்று கொண்டாள். ரதினி தன்னைத் தேடி நிர்மலனுடன் சுடலைக்குப் புறப்பட்டுச் சென்ற செய்தியை அறிந்த பின்பு அவளின் மதிப்புப் பல மடங்கு உயர்ந்திருந்தது.

ரதினி பவித்திராவை கனிவுடன் பார்த்துச் சிரித்தாள். அவளின் மனதில் அளவுக்கதிகமான மகிழ்ச்சியிருந்தது.

சுவாமி வெளி வீதி உலாவுக்காகச் சென்ற போது பவித்திராவைக் கூப்பிடும் சாட்டாக ரதினியின் அருகே வந்தான் கஜன். ரதினி பழைய சாறியொன்றைக் கட்டியிருந்தாள். அது கஜனுக்குப் பிடிக்கவில்லை.

ரதினி ஆசையோடு அவனைப் பார்த்தாள். கஜன் உரிமையோடு சிரித்தான். அதிகமானோர் சுவாமிக்குப் பின்னால் சென்று விட்டனர்.

ரதினியும் பவித்திராவும் கஜனும் மெதுவாகப் பிள்ளையாரின் பின்னால் சென்றனர், “பவித்திரா ரதினிக்கு இரண்டு சாறிகள் கொண்டு வந்து குடு. நெடுக ஒரே சாறியைக் காட்டிறாள்” என்றான் கஜன்.

ரதினி மெய்மறந்து போனாள். இரத்த நாளங்கள் துடித்துச் சிலிர்த்தன.

பவித்திராவிற்குத் தாங்க முடியாத மகிழ்ச்சி. அவள் நினைத்தது நிறைவேறிவிட்டது, “இப்ப எனக்கு ஏன் அண்ணா சாறி? முழுவதையும் கொண்டு சென்று கொடுக்கிறேன்” என்றாள்.

திருவிழா முடிந்து விட்டது. ரதினி பவித்திராவுடன் வந்தாள். பூமணியும் கஜனும் பின்னால் வந்தனர்.

“அம்மா, என்னோடை வானை” என்று அழைத்தாள் பவித்திரா. பூமணி பவித்திராவிற்கு அருகில் செல்ல ரதினி பின்னே வந்தாள்.

கும் இருட்டு மெதுவாக ரதினியின் கையைப் பிடித்தான் கஜன். அவள் தனது கையால் அவனது கையை இறுகப் பற்றினாள்.

ரதினியின் வீடு கழிந்ததும் இனம்புரியாத தவிப்புடன் சென்றான் கஜன்.

மறுநாள் சூரியோடு கதைப்பதற்காக ரதினியின் வீட்டுக்கு வந்தான் கஜன். ரதினி அதிர்ச்சியுடன் அவனை வரவேற்றாள். கோலில் படித்துக் கொண்டிருந்த சூரி கஜனைக் கண்டதும் எழுந்து வந்தான்.

“சூரி, நீர் பவித்திராவோடையா படிக்கிறீர்?”

“ஓம்”

“பவித்திரா எப்பிடி?”

“நல்லாய்ப் படிப்பாள்.”

“படிப்பை நிப்பாட்டப்போறன்”

“ஏன்?”

“கனடாவிற்குக் கூட்டிக் கொண்டு போகலாம் என்று நினைக்கிறன்”

அதிர்ந்து போனான் சூரி, “நல்லாய்ப் படிப்பா. படிப்பு முடியட்டன்”

“டொக்டர் கலியாணம் செய்து கொடுக்கச் சொல்கிறார்” பொய் சொன்னான்.

சூரி எதுவும் பேசவில்லை.

“அவள் உம்மை விரும்புவதாய்க் கேள்விப்பட்டன்.” சூரி அதற்குப் பதில் சொல்லவில்லை.

“உமக்கு விருப்பமே”

“ஓம்”

“பிறகு வருத்தக்காறியெண்டு குறை சொல்லக் கூடாது.”

“சொல்லமாட்டன். நான் விரும்பித்தான் செய்யிறன்.”

ரதினி தேநீர் கொண்டு வந்து கொடுத்தாள். கஜன் சுவைத்துக் குடித்தான்.

இரண்டு நாட்கள் மெதுவாகக் கழிந்தன.

சூரி பவித்திராவின் வீட்டிற்கு வந்தான், “எப்படிச் சுகமாய் இருக்கிறீரோ?”

“ஏன் எனக்கென்ன வருத்தமே” கோவித்தாள்.

அவன் அவளைப் பாசம் பொங்கப் பார்த்தான்.

“நிம்.. எனக்கு ஒரு வருத்தமும் இல்லை” என எல்லாவற்றையும் கூறினாள் அவள்.

அதிர்ந்து போனான் அவன். அவனது மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. மெதுவாக அவளின் அருகே வந்து அவளது கையைப் பிடித்து இழுத்து அணைத்தான். அவனது உதடுகள் அவளது கன்னங்களால் வழுக்கிய போது அவள் அவனைத் தள்ளிவிட்டுக் கூறினாள், “இதெல்லாம் படிப்பு முடிந்தாப் பிறகு..”

சூரி ஏமாற்றத்துடன் மெதுவாகச் சிரித்தான். பக்கத்து வீட்டு ரேடியோவில், “கண்ணோடு காண்பதெல்லாம் தலைவா கண்களுக்குச் சொந்தமில்லை” என்ற பாடல் மிகவும் பெரிதாக ஒலித்தது. சூரி பவித்திராவைப் பார்த்துக் கண் சிமிட்டினான்.